

கல்கி

KALKI 5.3.95 ரூ. 3.00

கனவு தேசத்தின் காமிரா கலைஞர்





சட்டமன்றத்தில் வெடிக்கப்போகும் பிரச்னைகள்!

மார்ச் 13 அன்று கவர்னர் உரையுடன் துவங்கப் போகும் சட்டமன்றக் கூட்டத் தொடர் எப்படி யிருக்கும்...? எஸ். ஆர். பி. யிடம் கேட்டோம்....

“கவர்னர் மாற்றப்படுவார் என்று மறுபடி வதந்தி அடிபடுகிறதே?”

“தமிழகத்தின் மேதகு ஆளுனராக சென்னா ரெட்டி அவர்களே நீடிப்பார் என்று உறுதியாகச் சொல்கிறேன். மார்ச் 13 அன்று அவர்தான் சட்ட மன்றத்தில் கவர்னர் உரையைப் படிக்கப் போகி றார்.”

“அரசு தயாரித்துக் கொடுக்கும் உரையை அப்படியே படிக்காமல், சிலவற்றை விட்டு விடு வார் என்றெல்லாம் செய்திகள் அடிபடுகிறதே?”

“சென்னா ரெட்டி அவர்கள் இதற்கு முன் இரு மாநிலங்களில் கவர்னராகவும், ஆந்திராவில் இருமுறை முதல்வராகவும் பதவி வகித்தவர். ஆகவே, அரசியல் சட்டப்படி, கொடுக்கப்பட் டுள்ள, அதிகார வரம்புக்குள் நின்று, கடமை களையும் பொறுப்புக்களையும் செவ்வனே செய்து முடிப்பார்.”

“உதாரணமாக ‘எனது அரசு தமிழ் மாநாட் டைச் சிறப்பாக நடத்தி முடித்தது’ என்ற வரிகள் உரையில் இருக்குமானால் கவர்னர் படிப்பா ரென்று நினைக்கிறீர்களா?”

“கண்டிப்பாகப் படிப்பார்! படிப்பார்!!”

“காங்கிரஸை விட்டு நீக்கப்பட்ட ஆறு சட்ட மன்ற உறுப்பினர்கள் ‘இன்னமும் நாங்கள் காங்கிரஸில்தான் இருக்கிறோம்; எங்கள் தலைவர் நரசிம்மராவ்தான்!’ என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக் கிறார்களே?”

“அந்தச் சட்டமன்ற உறுப்பினர் கள் ஆறாண்டு காலத்துக்கு அகில இந்தியத் தலைமை யால், கட்சியை விட்டு நீக்கி வைக்கப்பட்டுள்ளார்கள். இடைத்தேர்தல்களில் காங் கிரஸுக்கு எதிராக வேலை செய்த அவர்கள், காங்கிரஸ் காரர்களே அல்ல! இந்த விஷயத்தில் சபாநாயகர் நடந்து கொண்ட விதத்தை எதிர்த்து நீதிமன்றம் சென் றுள்ளோம்.”

“சில ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரிகளை மத்திய புலனாய்வுத் துறை கண்காணிப்பதாகச் சொல்கிறீர்கள். ஊழல், லஞ்ச லாவண்யத்தின் ஊற்றுக்கண்களை விட்டுவிட்டு, குட்டி தேவதைகளை மட்டும் கண்காணித்தால் போதுமா?”

“சில அமைச்சர்களும் கண்காணிப்புக்கு உள் ளாகியிருக்கிறார்கள். அதிகாரிகள் உண்மை களைக் கக்கும்போது ஊற்றுக்கண்கள் உலகத் துக்கு வெட்டவெளிச்சமாகிவிடும்.”

“மறுபடியும் புலிகள் நடமாட்டம் என்றெல் லாம் நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால், மத்திய அமைச்சரவைச் செயலாளர் ‘எல்.டி.டி.ஈ. நட மாட்டம் இல்லை’ என்று சொல்லியிருக்கிறாரே?”

“ ‘புதிதாக எந்த மாறுதலும் கவனத்துக்கு வர வில்லை’ என்று ஜாக்கிரதையாகவே சொல்லி யிருக்கிறார். விரைவில் திரை விலகும்.”


“தமிழக காங்கிரஸ் தலைவரும் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதால், உங்கள் சபை நட வடிக்கைகளில் ஏதேனும் பிரச்னைகள் இருக் குமா?”


“ஒன்றும் இருக்காது. இருவரும் கலந்தாலோ சித்துச் செயல்படுவோம். முன்பு பாராளுமன் றத்தில் காங்கிரஸைச் சேர்ந்த ஸ்டீபன் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தார். அகில இந்தியத் தலைவர் இந்திரா காந்தி சாதாரண உறுப்பின ராக இருந்திருக்கிறார். இதில் ஒரு பிரச்னையு மில்லை.”

“இந்த சட்டமன்றத் தொடரில் நீங்கள் எழுப்பப் போகும் பிரச்னைகள் என்னென்ன?”

“விலைவாசி, சட்டம் - ஒழுங்கு, நெசவாளர் பிரச்னை, தொழில் வளர்ச்சிக்கு ஊக்குவிப்புத் தராதது, அண்ணா பல்கலைக் கழக நில விவகாரம், மருத்துவக் கல்லூரி கட்டணம் அதி கரிப்பு என்று நிறைய ‘எரி யும்’ பிரச்னைகள் உள்ளன. குறிப்பாக, உள்ளாட்சித் தேர்தல்களை உடனே நடத்த வேண்டுமென்று வலியுறுத்துவோம்.”

சந்திப்பு : **ஸ்ரீனிவாசன்**





அழகு காட்டிய மாரடோனா!

❖ தங்கள் அழகைக் காட்டிய கஷ்மிதாவுக்கும், ஐஸ்வர்யாவுக்கும் பெரும் வெகுமதிகள் கிடைத்தன. ஆனால் அழகு காட்டிய மாரடோனா அபராதம் செலுத்தியதுதான் மிச்சம். ஆச்சரியமாயிருக்கிறதா? அர்ஜெண்டினாவிலுள்ள ரேஸிங் க்ளப்பில் கால்பந்து கோச்சாகத் தற்போது பணியாற்றுகிறார் மாரடோனா. இவர் பயிற்சி அளித்த அணிக்கெதிராக ரெஃப்ரிக்கள் முடிவெடுத்தபோது, அவர்களைப் பார்த்து விதவிதமாக முகத்தைக் கோணி அழகு காட்டியிருக்கிறார். வந்தது வினை! 'அழகு' காட்டியதற்காக 2,100 டாலர் அபராதமாகச் செலுத்த வேண்டியதாயிற்று!

❖ பெல்ஜியக் கடற்கரையில் நான்கு திமிங்கிலங்கள் இறந்து கிடந்தன. இதனால் பிரிட்டனுக்கும், நெதர்லாந்துக்குமிடையே ஒரு குடுமிப்பிடி சண்டை நடந்து கொண்டிருக்கிறது. திமிங்கிலங்கள் எந்த நாட்டுக்குச் சொந்தமானவை என்றா? சேச்சே! அவற்றின் உடலில் மிக மிக அதிகமான அளவில் நச்சு ரசாயனங்கள் காணப்படுகின்றனவாம். அதற்குக் காரணம் கடல் நீரில் தொழிற்சாலைக் கழிவு கலப்பதுதான் என்பதால், வட கடலில் இப்படி தொழிற்சாலைக் கழிவுகளைக் கலக்க விட்டது யார் என்பது பற்றித்தான் கருத்து மோதல்.


• சல்மான் ருஷ்டி


• மாரடோனா


• முராயாமா

❖ பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட ஹான்ஷின் நெடுஞ்சாலை நசுங்கிய பாத்திரம் போல் காணப் பட்டது! ஒரு மாதம் கூட ஆகவில்லை; அதற்குள் ஏதோ பி.ஸி. சர்க்கார் அங்கு சென்று வந்தது போல் இன்று கம்பீரமாகப் பழையபடி காட்சியளிக்கிறது. தொழில் நுட்பமும் சுறுசுறுப்பும் அப்படி! ஜப்பானியர்களா, ஒற்றைக் காலில் நிற்கும் பறவையா! நம் தெருவில் உள்ள பள்ளங்களைக் கூட சரியாக்காத நமது அரசாங்கத்தை நினைத்து வெட்கப் படுவது தவிர வேறென்ன செய்ய முடிகிறது.


❖ இத்தாலி– உஃப் உஃப்; ஆஸ்திரியா– வாவ் வாவ், ரொமேனியா – ஹேம் ஹேம், நார்வே – வவ் வவ். இதெல்லாம் என்ன என்கிறீர்களா? 'இந்தியா – லொள் லொள்' என்றும் குறிப்பிட்டிருந்தால் கண்டுபிடித்திருப்பீர்கள். ஆம். வெவ்வேறு நாட்டு நாய்கள் எப்படியெல்லாம் குரைக்கின்றன என்பதுதான் இந்தப் பட்டியல்...! இதை ஆராய்ச்சி செய்து(!) கண்டுபிடித்தவர் பிரடெரிக் மார்ஷ் என்ற ஐரோப்பிய மார்க்கெடிங் கன்சல்டன்ட்.

❖ தலை தப்புவதற்காக ஆறு ஆண்டுகளாக தலைமறைவாக இருக்கும் சல்மான் ருஷ்டி ஒரு ஆசையை வெளியிட்டிருக்கிறார். இமயமலை அடிவாரத்திலுள்ள ஒரு வீடு தமக்குச் சொந்தமானதென்றும், அதில் தாம் வந்து தங்க விரும்புவதாகவும் அறிவித்திருக்கிறார். என்ன இருந்தாலும் அவர் பிறந்த மண்ணாயிற்றே. அதில் வந்து தங்குவதற்கு என்ன தடை என்கிறீர்களா? அவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை நமது அரசு செய்யவேண்டியிருக்குமே! 'சாத்தானின் கவிதைகளை'த் தடை செய்த இந்தியா, சல்மான் வருகையைத் தடை செய்யுமா, வரவேற்குமா? பார்ப்போம்!

❖ ஜப்பான் பிரதமர் டோமிசி முராயாமா, பட்ஜெட்டில் நூறு பில்லியன் யென், வித்தியாசமான ஒரு காரியத்துக்காக ஒதுக்கியிருக்கிறார். உலகப் போரின் போது ஜப்பானின் அட்டூழியங்களால் பாதிக்கப்பட்ட பிற நாட்டினருக்கு இந்த நிதி உதவுமாம்! கூடவே அப்படி பாதிக்கப்பட்டவர்களிடம் பொதுவான மன்னிப்பு ஒன்றையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்!

— குல்லூ

எறும்பார் ரிப்போர்ட் :



கமிஷன் முகத்தில் கரி!

"நான் வந்ததைக் கூட கவனிக்காமல் அப்படி என்ன சுவாரஸ்யமாகப் படிச்சுக்கிட்டிருக்கே?" - திடீரென்று ஒரு குரல் கேட்கவே சுற்றுமுற்றும் பார்த்தேன்.

"நான் இங்கிருக்கிறேன் ஓய்!" என்றார் எறும்பார், படித்துக் கொண்டிருந்த பேப்பரின் விளிம்பில் கம்பீரமாக நின்றபடியே!

"வேறென்ன..? எல்லாம் இந்த நிலக்கரி இறக்குமதி ஊழலை விசாரிக்கறதுக்காக சந்துர்க்கர் கமிஷன் போட்டாங்களே... அதைப் பத்தித்தான்!" என்றேன்.

"அதுதான் செயல்படவேயில்லையே! அப்புறமென்னய்யா சுவாரஸ்யம்?" என்று ஆழம்பார்த்தவர், "சரி சரி... பேப்பரை மடிச்சு வை!" என்றபடி பேப்பர் விளிம்பிலிருந்து எதிரி ஃபைல்களின் அடுக்கு மேல் குதித்து உட்கார்ந்தார்.

"உனக்கு நினைவிருக்கா..? 93 மத்தியில் தமிழ்நாட்டு அனல்மின் நிலையங்களுக்கான நிலக்கரித் தேவைகளைப் பூர்த்தி செய்யறதுக்காக இருபது லட்சம் டன் நிலக்கரியை ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்ய முடிவு செய்தது தமிழக அரசு. அப்படி இறக்குமதி செய்யறதுக்கு டெண்டர் கேட்டாங்க. நியாயமா, குறைந்த விலையை 'கோட்' செஞ்சவங்களுக்குத்தானே டெண்டரைக் குடுக்கணும்...? அப்படிச் செய்யாம, அதிக விலையை 'கோட்' செய்தவங்களுக்கு டெண்டர் குடுத்தாங்க! அதுக்குக் காரணம் என்னன்னு நான் சொல்லித் தெரிய வேணாம்..."

"ஆமாம்! இதுக்கு என்ன ஞான திருஷ்டியா வேணும்!"

"ஞான திருஷ்டி வேணாம். ஆனா துப்பறியற மூளை வேணும். முதன்முதல்ல மோப்பம் புடிச்சு, வாழப்பாடியார் நீதிமன்றத்தில் ஒரு வழக்குப் போட்டார். டெண்டரில் மோசடி ஒரு பக்கமிருக்க, ஆஸ்திரேலிய நிலக்கரியில் ஈரத்தன்மை அதிகம் என்கிறதால அதன் எரிப்பு சக்தியும் குறைவு... அதனால் உடனடியா நிலக்கரி இறக்குமதிக்குத் தடைவிதிக்கணும்னு வாதாடினார்."

"ஆமாம்! அதுதான் வாழப்பாடியோட ஆரம்பகால அட்டாக்குகள்ல ஒண்ணு..."

"அட்டாக், செய்தா சும்மாயிருப்பாங்களா! விஷயம் கோர்ட்டுக்குப் போனா வண்டவாளங்கள் வெளிப்பட்டுடும்னு உடனடியா அரசு ஒரு வேலை செய்தது. ரிட்டயர்ட் நீதிபதி சந்துர்க்கர் தலைமையில் ஒரு விசாரணை கமிஷன் போட்டுது. அந்த கமிஷன் ஆறு மாசத்தில் அறிக்கை தரணும்னு ஒரு காலக்கெடுவையும் நிர்ணயிச்சது.." என்றார் எறும்பார்.

"அமரர் கல்கி என்ன சொல்லியிருக்காரு தெரியுமா?... 'ஒரு விஷயத்தை அமுக்கணும்னா அதன் தலையிலே கல்லைப் போடலாம்; இல்லைன்னா கமிஷனைப் போடலாம்..' அப்படின்னு ஒரு தலையங்கத்துல எழுதியிருக்காரு."

"சரியான நெத்தியடி! ஆனா இந்த கமிஷனுக்கே ஆபத்து வந்ததே..! தி.மு.க.வைச் சேர்ந்த வக்கீல் ஒருத்தர், 'இறக்குமதியெல்லாம் மத்திய அரசின் சுங்கத் தீர்வை சம்பந்தப்பட்டது; இது பத்தி விசாரிக்க மாநில அரசு கமிஷன் போடுறது சரியில்லை!' அப்படின்னு ஒரு வழக்குப் போட்டார். அந்த வழக்கில் தீர்ப்பு சொன்ன நீதிபதி பக்தவத்சலம், 'நிலைமைகள் status quo படியே இருக்கட்டும்!'னுட்டார். அதாவது, கமிஷன் நியமிக்கப்பட்டுப் பணிகள் துவங்காத அந்த நிலையிலேயே நீடிக்கட்டும் அப்படின்னு அர்த்தம். இதையே சாக்கா வைச்சுக்கிட்டு காலத்தை ஓட்டிட்டாங்க..."

"அப்புறம் என்ன நடந்தது?"

"நீர் கேட்ட இதே கேள்வியைத்தான் நான் வாழப்பாடியோட வக்கீலான செல்வராஜ் கிட்டே கேட்டேன்."

"அவர் என்ன சொன்னார்...?"



"வாழப்பாடியாரின் நோக்கமே இந்த நிலக்கரி இறக்குமதி ஊழலை எப்படியாவது சி.பி.ஐ.யின் விசாரணைக்குக் கொண்டு வந்துடணும்ங்கறதுதானாம். அதனால், அப்படி ஒரு கோரிக்கையை ரிட் மனுவா தாக்கல் செஞ்சாங்களாம். அதை விசாரிச்ச பெஞ்ச், 'ஏற்கெனவே கமிஷன் போடப்பட்டு விட்டதால் எல்லாத்தையும் அங்கே போய்ச் சொல்லுங்க'ன்னுட்டுதாம்!"

"அப்புறமென்ன, கமிஷன்கிட்டேயே போய் மனுவைச் சமர்ப்பிக்க வேண்டியதுதானே?"

"அதுக்குள்ள கமிஷனுக்குக் கொடுத்த மூறுமாசக் கால கெடு முடிஞ்சு போச்சு! அந்த கமிஷனே காலாவதியாகிப் போச்சே! அப்புறம் எங்கே போய்ச் சமர்ப்பிக்கிறது? ஆனாலும் வாழப்பாடி விடலை. சந்தூர்க்கர் கமிஷனை மறுபடியும் புதுப்பிக்க ஒரு ரிட் மனு போட்டார். இந்த முறை அவருக்கு வெற்றி கிடைச்சிடுச்சு..."

"இருந்தாலும் ஏற்கெனவே நீதிபதி பக்தவத்சலம் சொன்ன தீர்ப்புப்படி நிலைமைன் status quo படிதானே இருக்க முடியும்?"

"இப்படித்தான் சில பேர் குழப்பிக்கறாங்க... அந்த status quo என்கிறது முதல் கமிஷனுக்குத்தான்; புதுப்பிக்கப்பட்ட கமிஷனுக்கு அது செல்லுபடியாகாதுன்றார் செல்வராஜ்."

"ஆக, ஒருவழியா விசாரணை தொடங்கிடும்னு சொல்லுங்க..."

"ஊஹூம்! சிக்கல் இருக்கே! அரசு ஆணை போட்டு மூணு மாசமாகியும் கமிஷனுக்கு ஒரு ஆபீஸ் கூடத் தரலையாம்!"

"நிலக்கரி ஊழலை விசாரிக்க கமிஷன் நியமிச்சு, அந்தக் கமிஷன் முகத்துலயே கரி பூசறாங்க!"

"போட்டியே ஒரு போடு! இந்த வழக்கை விசாரிச்சுக்கிட்டிருந்த நீதிபதி லட்சுமணன், ஒரு கட்டத்துல, 'நிலக்கரி இறக்குமதி தொடர்பான எல்லா ரெக்கார்டுகளையும் கோர்ட்டுல சமர்ப்பிக்கணும்'னு உத்தரவு போட்டார்... அதுக்கப்புறம் அவர் பையன் கஞ்சா வைச்சிருந்ததாச் சொல்லி, கைது செய்யப்பட்டதெல்லாம் ஞாபகமிருக்கா...?"

"நல்லா நினைவிருக்கு... அதுமட்டுமில்ல, இறக்குமதியான நிலக்கரி தரமாயில்லைன்னு சுங்க இலாகா சொல்லிடுச்சு; அதுக்கு சுங்கவரிச் சலுகை தரமுடியாதுன்னு மறுத்துடுச்சு!... அப்புறம் மத்திய அரசைச் சரிக்கட்டி அந்த நிலக்கரியைக் கொண்டு வந்து சேர்த்தாங்க... தகராறு செஞ்ச சுங்க அதிகாரிக்கு மாற்றல் உத்தரவு வந்தது... எல்லாம் நினைவுக்கு வருது..."

"ஹூம்!" என்று பெருமூச்சு விட்டார் மிஸ்டர் எறும்பு. "எல்லாம் உனக்கும் எனக்கும் மட்டும் நினைவிருந்து என்ன பிரயோஜனம்? ஓட்டுப் போடும் போது ஜனங்களுக்கு இதெல்லாம் ஞாபகமிருக்கணுமே!"

தகவல்கள் : **கௌசல்யா**

ஸ்ரீ கந்தசுவாமி
பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1990
பதிவு அலுவலகம்: 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை- 600 002.
கிளை அலுவலகம்: 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-600 015. போன்: 459569



பிக்சட் டிபாசிட்

46நாள்	3மாதம்	6மாதம்	ஆண்டு	2ஆண்டு	3ஆண்டு	4ஆண்டு	5ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21%

5 வருடங்கள்
ரூ.50,000/-
அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும் தொகை
ரூ. 25,000	60 மாதம்	ரூ. 70,000


சொத்துக்கள் மீது கடன்

- வீடு / ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும்.
- மாத வட்டி ரூ.1.85 மட்டுமே
- விரைந்த சேவை.
- சென்னை மாநகராட்சி இருக்க வேண்டும்.



நகைக்கடன்

- குறைந்த வட்டிக்கு கிடைக்கும்
- 10 கிராமுக்கு ரூ.3000 வழங்கப்படும்.
- R.D. கட்டத் தேவையில்லை
- எந்த சார்ஜும் வசூலிப்பதில்லை



பாதுகாப்புப் பெட்டக வசதியும் உண்டு.

பென்ஷனர் நலத்திட்டம்

20% P.a ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும் காலம் 1 ஆண்டு வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

சேர்மன்:
P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
முதன்மை அறங்காவலர்,
ஸ்ரீகந்தக்கோட்டம்,
சென்னை-600 003.
ஆலோசகர்
பார்க் டவுன் பெனிபிட்
பண்டு லிட்.



இயக்குநர்கள் குழு
R.விவேகானந்தன் B.Com.,
(Chairman : Park Town Benefit Fund Ltd.)
A.சுப்பிரமணியன்
V.சண்முகவடிவு B.A.,
V.விஜயகோபால் B.Com., D.C.P.
M.ராஜேந்திரன்
P.ஏகாம்பரம்

பங்குதாரர்களுக்கு மட்டும்

H.O. Friday Holiday (It is a P.B. Group Concern) B.O. Tuesday Holiday

சம்பளக்காரர் கொடுத்து அழுகிறார்;

குமுறல்



சிதம்பரம் நகரம் எங்கும் பத்துப் பதினைந்து ஆட்டோக் களிலும் சைக்கிள் ரிக்ஷாக்களி லும் இரவு பத்து மணி வரை லவுட் ஸ்பீக்கர் அலறல்! எதற் காக? லாட்டரி சீட்டு குலுக்க லாம்! அதற்காக நகரையே குலுக்கி விட்டார் கள்! இந்த லாட்டரி சீட்டு அத்துமீறல்களை அடக்கவும் ஒரு சேஷன்தான் வரவேண்டும்.

சிதம்பரம், என்.எம். கிருஷ்ணா.



சென்னை பர்மா பஜாரில் ஒரு கேல்குலேட்டர் "என்ன விலை?" என்று விசாரித்தேன். முதலில் பொருளைக் கையில் கொடுத்து விட்டனர். விலை அதிகமாக இருக்கவே, "வேண்டாம்" என்றேன். சட்டையைப் பிடித்துக் கொண்டு "உன்னைக் கொடுத்து விட்டுப் பொருளை எடுத்துப் போ" என்று மிரட்டினர்! இது போல கட்டாயத் திணிப்பு தினந்தோறும் நடைபெறுகிறது. பொருள் தரமானதா என்று அறியவும் வாய்ப்பில்லை.

சென்னை - 56, இதப்ரியன்.



உப்பிலியப்பன் கோயிலில் பக்தர்கள் கால் அலம்ப வசதியாக நடைபாதையிலேயே பள்ளம் வெட்டி, அதில் குழாய் நீர் ஓடுகிறது. நல்ல ஏற்பாடுதான். ஆனால் கால் அலம்பிய நீர் பிறகு கோயிலின் திருக்குளத்தில் போய் விழுவதைக் காணத் தான் மனம் சங்கடப்படு கிறது.

கும்பகோணம், ஆர்.ஏ. பத்மநாபன்.



மாதச் சம்பளம் பெறும் என் போன்ற ஏராளமான பேருக்கு வருமான - வரியைக் கழித்துக் கொண்டு பாக்கியைத் தான் தருகிறார்கள். ஆனால் ஹர்ஷத் மேத்தா 1200 கோடி வரி பாக்கி! சினிமா நட்சத்திரங்கள் அமிதாப்பச்சன், ரஜினிகாந்த், கமல்ஹாசன் போன்றோர் லட்சக்கணக்கில் வரி பாக்கி! மாதச் சம்பளக்காரர்கள்தான் ஏமாந்த சோணகிரிகளா? ஏன் இந்த பாரபட்சம்?

பெங்களூர் - 72, ப. மூர்த்தி.



சாலை விபத்துக்கள், அடிதடி சண்டைகள், தற் கொலை முயற்சி போன்ற வற்றில் பாதிக்கப்பட்டவர் களுக்குத் தனியார் மருத்துவ மனைகளில் சிகிச்சை அளிக்க மறுப்பதுடன், முதலுதவி கூடச் செய்வ தில்லை. மனித நேயமின்றி அரசு மருத்துவ மனைக்குக் கைகாட்டுகிறார்கள். போலீஸ், வழக்கு, சாட்சி என்று அலைய அஞ்சி இவ் வாறு செய்கிறார்கள். இந்த நிலை மாற அரசு தகுந்த சட்டம் இயற்றக் கூடாதா? அருகில் உள்ள மருத்துவ மனையை அணுகாமல் தொலை தூரம் செல்வதற்குள் பலர் இறந்தே விடுகின் றனரே!


56 APO (ராணுவப் பணி),
வி.கே. ராஜாகந்தரம்.



சென்னை போர்ட் டிரஸ்ட் நிர்வாக அலுவலகம் முன்பு இந்திரா காந்தி சிலை ஒன்று கடந்த இரண்டு ஆண்டுகளாக "டார் பாலீ"னுக்குள் மூடி மறைக்கப்பட்டுக் கிடக் கிறது. சிலையைத் திறந்து வைக்க நேரு ஆன நாயக சோஷலிஸப் பேரவை எடுத்துக் கொண்ட முயற்சிகள் இன்று வரை பலன் தரவில்லை. முந்நாள் பாரதப் பிரதமருக்கு இப்படி ஒரு அவமரியாதையா?

சென்னை - 23,
வி.ஆர். சந்திரன்.

சினிமா ஸ்டார் தப்பி நழுவுறார்!




ERRICA
ஆயுர்வேத
ஹேர்
டானிக்


Kalki Shopping Page

Kalki Shopping Page

SANTOSH SILK MILL DEPOT

WHOLESALER

No. 39, GODOWN STREET, MADRAS - 600 001.



MANUFACTURER OF SANTOSH CALASSIC SAREES

Our Distributors :

Sree Krishna

CUT PIECE COLLECTION PRIVATE LIMITED

(wholesale & Retail)

Near Flower Bazaar Police Station

39, GODOWN STREET, MADRAS-1 TEL : 589596

(1) Suitings; (2) Shirtings; (3) Sarees & Matching Blouses;
(4) Dress Materials; (5) Lungies & Dhothies & Cotton Sarees.

Special Gift for purchase above Rs. 1000/-

24% P.A. + GIFT

ஸ்ரீ ராமபிரானுக்கு பாலம் அமைக்க சின்னஞ்சிறு அணிலும் மண் சுமந்தது.
உங்கள் பொருளாதார முன்னேற்றத்துக்கு பாலம் அமைக்க நாங்களும் உதவுகிறோம்.

NATARAJ OFFERS

■ 90-நாள் 'டெபாஸிட்'. ■ விரும்பினால் மீண்டும் ரினிவல் செய்து கொள்ளலாம். ■ ஒவ்வொரு ரினிவலுக்கும் இலவச பரிசு உண்டு. ■ 12-மாத டெபாஸிட். ■ வட்டிக்கும், அசலுக்கும் முன்னதாகவே 'செக்' பெற்றுக் கொள்ளலாம்.

■ 36-மாத டெபாஸிட் இரட்டிப்புத் திட்டம். ■ 36-மாதங்களுக்கு ரூ. 12000 டெபாஸிட் செய்து 3 சவரன் தங்கம் பெறும் 'கோல்டன் ஆப்பர்ட்யூனிட்டி' திட்டம். ■ 'நடராஜன்' என்ற பெயர் உள்ளவர்களுக்கான தங்கக்காசு பரிசுத் திட்டம். ■ சீட்டு குரூப்பில் (30% சீலிங்) சீட்டு எடுக்க முடியாதவர்களுக்கு கடன் வசதி திட்டம். ■ மாதத் தவணையில் 'பண்ணைவீடு' சொந்தமாகும் திட்டம்.

மேலும் தகவல் அறிய : Phone: 4342098, 4840150

NATARAJ FINANCE & INVESTMENTS
NATARAJ CHITS (TAMILNADU) Pvt. Ltd.,
NATARAJ ESTATES – FARM HOUSE PROMOTERS
"Shanthi Complex", 3rd Floor, 26, Ranganathan St.,
T. Nagar, Madras – 600 017.
B.O. 1-B, Kamarajar Road, Kancheepuram – 631 501 (UPSTAIR)

NATARAJ OIL MILLS & NATARAJ EXPORTS OVERSEAS (Regd. OFFICE)

'பாட்டுப் பாடவா' படத்தின் மூலம் டைரக்டராகவும் அறிமுகமாகியிருக்கிறார், ஒளிப்பதிவாளரான பி.ஆர்.விஜயலட்சுமி. ஒரு பெண்ணாக இருப்பதாலேயே சினிமா என்கிற கனவு தேசத்தின் அனுபவங்கள் வித்தியாசமானதாக இருக்கிறதா? பல்வேறு கேள்விகளுக்கு இந்தப் பேட்டியில் வெளிப்படையாகப் பதிலளிக்கிறார் விஜயலட்சுமி...

"**சா**தாரணமாக சினிமாவில் பிரவேசிக்க நினைக்கும் பெண்கள் பெரிய நடிகையாகப் புகழ்பெற வேண்டும் என்கிற ஆசையில்தான் பிரவேசிப்பார்கள். நீங்கள் மட்டும் ஒளிப்பதிவாளராகப் பிரவேசித்ததற்கு என்ன காரணம்?"

"நடிகையாக இருப்பதில் ரசிகர்களிடையே 'பாபுலாரிட்டி' கிடைக்கும் என்பது உண்மைதான். ஆனால், அதற்காக நான் எனது சொந்த வாழ்க்கையின் 'பிரைவசி'யையே இழக்க வேண்டியிருக்கும். சுதந்திரமாகத் தெருவில் நடந்து கூடப் போக முடியாத ஒரு வாழ்க்கையில் எனக்கு விருப்பமில்லை. ஆனால், ஒளிப்பதிவாளர் போன்ற டெக்னீஷியன்களுக்கு அந்தப் பிரச்னை இல்லை. இதன் காரணமாகத்தான் இதை நான் தேர்ந்தெடுத்தேன்."

"ஆரம்பத்திலேயே சினிமா ஒளிப்பதிவாளராக வர வேண்டும் என்கிற லட்சியத்தோடுதான் வந்தீர்களா அல்லது ஒரு விபத்து போல் தற்செயலாகத்தான் வந்தீர்களா?"

"நான் எல்லோரையும் போல் ஒரு சராசரிக் கல்லூரி மாணவியாகத்தான் ஹோம் சயன்ஸ் படித்துக் கொண்டிருந்தேன். படிப்பு முடிகிற தறுவாயிலேயே எனக்குத் திருமணமும் நடந்து விட்டது. ஒரு புதிய வாழ்க்கையின் சராசரிக் கனவுகளோடுதான் நானும் புகுந்த வீட்டுக்குச் சென்றேன். அங்கே எனது அன்பைவிட பணத்தையே அதிகம் எதிர்

"பெண்ணென்று என்னைத் தனிமைப்படுத்திக் கொள்வதில்லை!"




• "பாண்ட், சர்ட் போட்டுக் கொண்டு..."

பார்த்தார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்புக்கு என்னால் ஈடுகொடுக்க முடியாததால், எனது மணவாழ்க்கை என்பது ஒன்பதே மாதங்களில் முறிந்து போய்ப் பிறந்த வீட்டுக்கே திரும்பிவர வேண்டியதாகி விட்டது. அதுவரை நான் கொண்டிருந்த கணவன், குழந்தைகள், குடும்பம் என்கிற எனது நியாயமான கனவுகள் சிதைக்கப்பட்ட போதுதான் வெளியுலகத்தைப் பற்றிய ஒரு விழிப்புணர்ச்சியே எனக்கு ஏற்பட்டது. பிறகுதான் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்கிற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அது ஓர் எண்ணம் மாத்திரமல்ல- அப்படி நிற்க முடியாவிட்டால்- நான் வெளிப்படையாகவே சொல்கிறேனே- தற்கொலை செய்து கொள்ள வேண்டுமே தவிர, பிறர் நிழலில் வாழக் கூடாது என்கிற வெறியே எனக்கு ஏற்பட்டது. அதன் விளைவுதான் நான் ஒளிப்பதிவாளராகப் பிரவேசம் செய்தது."

"சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்கிற ஒரு நிலை ஏற்பட்டபோது நீங்கள் ஏன் ஏதாவதொரு வேலைக்குப் போகாமல் சினிமாவுக்குள் காலடி எடுத்து வைத்தீர்கள்?"

"எனது தந்தை பந்துலு ஒரு டைரக்டர். என் அண்ணனும் ஆரம்பத்தில்





''கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய''

சினிமாவில்தான் சம்பந்தப்பட்டிருந்தார். அதனால், சினிமா உலகம் எனக்கு மறைமுகமாகவாவது அறிமுகமாகியிருந்தது. அதன் காரணமாகத்தான் ஒளிப்பதிவாளர் அசோக்குமார் அவர்களிடம் நான் உதவியாளராகச் சேர்ந்தேன்."

"சாதாரணமாகப் பெண் ஒளிப்பதிவாளர்கள் அரிது என்கிற நிலையில், நீங்கள் முதன் முதலாக வேலைக்குப் போகும்போது, ஒரு விதத் தயக்கமும் ஏற்படவில்லையா?"

''ஆரம்பத்தில் இருந்தது. அப்போது அசோக்குமாரிடம் சுஹாசினியும் உதவியாளராக இருந்தார். அது எனது தயக்கத்தைப் போக்கி விட்டது. ஆயினும் நான் முதன் முதலாக உதவி ஒளிப்பதிவாளராக 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' படத்தில் பணியாற்றச் சென்றபோது, சுஹாசினி அந்தப் படத்தின் ஹீரோயினாகிவிட்டார். அதனால் நான் தனியாகி விட்டேன்!"

"சாதாரணமாக, வேலை பார்க்கிற இடங்களில் ஒரு பெண்ணாக இருப்பதாலேயே வருகிற பிரச்னைகள் உங்களுக்கும் வந்திருக்கின்றனவா?"

''அப்படிப்பட்ட பிரச்னைகள் ஏதும் எனக்கு வந்ததில்லை. காரணம், நான் பணி செய்கிறபோது, எப்போதும் என்னை ஒரு பெண்ணாக- என்னை நானே வேறுபடுத்திக் கொண்டு- தனிமைப்படுத்திக் கொண்டு- நான் நடந்து கொள்வதில்லை. நானும் மற்ற ஆண்களைப் போலவே பேண்ட்-சர்ட் போட்டுக் கொண்டுதான் போகிறேன் என்பதால் அவர்களும் என்னை வேறுபடுத்தி நடத்தியதில்லை என்றுதான் கருதுகிறேன்."

''நீங்கள் பேண்ட-சர்ட் அணிந்து கொண்டு போவதுகூட நீங்கள் ஒரு பெண்

என்கிற-அப்படி மற்றவர்கள் தனிமைப் படுத்தி நடத்துவார்களோ என்கிற-உங்களின் பயங்கொண்ட மனநிலையை மறைப்பதற்காகத்தானோ என்னவோ?"

"உங்களின் இந்தக் கேள்வியில் எந்த அளவுக்கு உண்மையிருக்கிறதோ தெரியவில்லை. ஆனால், என்னைப் பொறுத்தவரை பேண்ட்-சர்ட் என்பது வசதியான டிரெஸ் என்கிற அளவில்தான் போட்டுக் கொள்கிறேன்."

"இன்றைய சினிமாக்களில் செக்ஸ், வன்முறைக் காட்சிகள் அதிகம் இருப்பது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"என்னுடைய 'பாட்டுப் பாடவா' படத்தில் அப்படி எதுவுமே இல்லையே!"

"நீங்கள் முப்பது படங்களுக்கு மேல் உதவி ஒளிப்பதிவாளராகப் பணியாற்றியிருக்கிறீர்கள். பத்தொன்பது படங்களுக்குத் தனியாகவும் ஒளிப்பதிவு செய்திருக்கிறீர்கள். அந்த வகையில் நான் பொதுவாகக் கேட்கிறேன்...."

"கதையோடு ஒட்டி வந்தால்- அந்தக் கதைக்கு அது மிகவும் அவசியம் என்கிற நிலையில்- அப்படியிருப்பது ஒன்றும் தவறில்லை என்பதுதான் எனது கருத்து. உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். 'முந்தானை முடிச்சு' படத்தில் நான் அப்போது உதவி ஒளிப்பதிவாளர். ஊர்வசி குழந்தைக்குப் பால் கொடுப்பது போல் ஒரு காட்சி. அதில் நடிக்க அவர் முதலில் மறுத்து விட்டார். ஆனால், அந்தக் காட்சி படத்தோடு ஒட்டி வர வேண்டியது மிகவும் அவசியம் என்பதால், அது ஊர்வசிக்கு ஆபாசம் என்று தோன்றினாலும் எனக்குத் தோன்றவில்லை. நானும் அந்தக் காட்சி அவசியம் என்பதை எடுத்துச் சொன்னேன். அப்படியும் ஊர்வசி பலருக்கு முன்னிலையில் அப்படி நடிக்கக் கூச்சப்பட்டார். எனவே, லைட், கேமரா ஆங்கின் என்று அனைத்தையும் தயார் செய்து விட்டு டைரக்டர் உட்பட அனைவரும் வெளியே சென்று விட்டனர். நான், ஊர்வசி, குழந்தை ஆகிய மூவரும் தான்! நான்தான் அந்தக் காட்சியை எடுத்தேன். அப்போது நான் மட்டுமே அதை ஒளிப்பதிவு செய்திருந்தாலும் பிறகு தியேட்டரில் லட்சக்கணக்கானவர்கள் அதைப் பார்க்கத்தானே செய்தார்கள்! அதை ஊர்வசி நினைத்த மாதிரி யாரும் ஆபாசம் என்று சொல்லவில்லையே!"

"வெறும் ஆடைக் குறைப்பு மட்டும்தான் ஆபாசம் என்பதில்லை. சாதாரணமாக நடந்து போகும் ஒரு பெண்ணைப் படம் பிடிக்கும்போது எடுக்கப்படுகிற குளோசப் ஷாட்டுகளைக் கொண்டே கூட ஆபாசப் படுத்த முடியும். அப்படியொரு ஷாட்டை இதுவரை நீங்கள் எடுக்க நேர்ந்திருக்கிறதா?"

"நல்லவேளையாக அப்படியொரு சந்தர்ப்பம் ஏற்பட்டதில்லை."

"அப்படியொரு சந்தர்ப்பம் உருவானால் உங்கள் நிலை என்ன?"

"நான் ஒளிப்பதிவாளராக இருக்கும் பட்சத்தில் டைரக்டரிடம் எடுத்துச் சொல்வேன்."

"அவர் வேண்டுமென்று வற்புறுத்துகிற போது?"

"அந்த நடிகையும் அதற்குச் சம்மதிக்கிற போது- டைரக்டரும் வற்புறுத்துகிறபோது, எனது சொந்த அபிப்பிராயங்களில் எப்படி நான் பிடிவாதமாக இருக்க முடியும்? படம் பிடித்துவிடுவேன். ஆனால், அப்படித் திணிக்கப்படுகிற ஆபாசக் காட்சிகளால் மட்டுமே ஒரு படம் வெற்றி பெற்று விடாது என்று உறுதியாகச் சொல்லுவேன். அதோடு சென்சாரின் கெடுபிடியும் இறுகியிருக்கிறது. அதற்காக நன்றியும் சொல்கிறேன்!"

"நீங்கள் இத்தனை படங்களுக்கு ஒளிப்பதிவு செய்திருந்தும் கூட நீங்கள் ஓர் ஒளிப்பதிவாளராகத் தனித்து அறியப்படாததற்கு என்ன காரணம்?"

"ஒரு சினிமா என்பது முழுக்க முழுக்க டைரக்டரின் மீடியாதான். அவருக்குத்தான் முழு சுதந்திரம். ஒளிப்பதிவு உள்பட மற்ற எல்லாமே டைரக்டருக்கான துணைக் கருவிகள்தான். எனவே, ஓர் ஒளிப்பதிவாளர் என்கிற முறையில் நான் கதையோடு ஒட்டி தான் போக முடியுமே தவிர- டைரக்டருக்குத் துணையாகத்தான் இயங்க முடியுமே தவிர- தனியாக எனது திறமைகளைக் காட்டுவது என்பது முடியாது; அப்படிச் செய்யவும் கூடாது என்று கருதுபவள் நான். இதுதான் காரணம்!"

"இன்றைய சினிமாக்கள் பெரும்பாலும் விஷுவலாக இருப்பதில்லை என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா? அப்படியானால் ஓர் ஒளிப்பதிவாளர் என்கிற முறையில் உங்களுக்கு அதுபற்றியதோர் ஆதங்கம் இருக்க வேண்டுமே?"

"நீங்கள் சொல்வதை முழுமையாக இல்லையென்றாலும் ஓரளவுக்கு ஒப்புக் கொள்வதில் எனக்குத் தயக்கமேதும் இல்லை. ஆயினும் அது பற்றிய ஆதங்கம் ஏதும் எனக்குக் கிடையாது. காரணம், ஒரு படத்தின் டைரக்டர் என்ன எதிர்பார்க்கிறாரோ அதை மட்டும் கொடுப்பதுதானே எனது வேலை!"

"பாட்டுப் பாடவா படத்தில் நீங்கள் டைரக்டர் மற்றும் ஒளிப்பதிவாளர். இந்த நிலையில் இந்த இரண்டு விதமான வேலைகளில் உங்களுக்குள் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது வேறுபாடுகள் ஏற்பட்டதா?"

"ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிந்தது... அதாவது நான் டைரக்டராகப் பணியாற்றிய போது, ஒளிப்பதிவுக்கு வேறு யாரையாவது போட்டிருக்கலாமே என்று பலமுறை தோன்றியது. காரணம், ஒரே சமயத்தில் இரண்டு வேலைகளைச் செய்வதற்குள் எனக்குப் போதும் போதும் என்றாகி விட்டதுதான்."

"ஒளிப்பதிவாளர், டைரக்டர். இந்த



இரண்டில் ஒன்று என்கிற நிலையில் நீங்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள்?"

"ஒளிப்பதிவிலேயே நான் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. கே. விஸ்வநாத் போன்ற விஷுவல் டைரக்டர்களிடம் நான் ஒளிப்பதிவாளராகப் பணியாற்ற வேண்டும் என்கிற ஆசை இன்னும் நிறைவேறாமலேயே இருக்கிறதே!"

"டைரக்டர் மகேந்திரன் படங்களில் தான் நீங்கள் உதவி ஒளிப்பதிவாளராகப் பணியாற்ற ஆரம்பித்தீர்கள். பாக்யராஜின் 'சின்னவீடு' படத்தில்தான் தனி ஒளிப்பதிவாளராகப் பணியாற்றத் துவங்கினீர்கள். இந்த இரண்டு பேரிடம் பணியாற்றியதிலும் ஏதேனும் வித்தியாசம் இருந்ததா?"

"மகேந்திரன் அவர்களின் படங்கள் கிளாசிக்! பாக்யராஜ் அவர்களின் படங்களில் தான் கமர்ஷியல் சினிமா என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டேன்."

"இரண்டும் இருவேறு விளிம்புகள் இல்லையா?"

"உண்மைதான். ஆயினும் இந்த இரண்டையுமே என்னால் முழுமையாக ரசிக்க முடிகிறது என்பதும் உண்மைதான்!"

"அப்படியானால் உங்களுக்குள் இருக்கிற தனித்தன்மைதான் என்ன?"

"பாட்டுப் பாடவா படப்பிடிப்பின் போது, மனநல மருத்துவமனையில் ஏற்பட்ட அனுபவங்கள் என்னை மிகவும் பாதித்தன. சாப்பாட்டுச் செலவு உட்பட ஒரு நோயாளிக்கான தினசரித் தேவைகளுக்காக அரசாங்கம் தருவது வெறும் பத்து ரூபாய் தான். இது எப்படிப் போதும் என்பது எனக்கு இன்னமும் புதிராகவே இருக்கிறது. அதோடு அவர்கள் எப்படி மனநலம் பாதிக்கப்பட்டார்கள் என்பதெல்லாம்கூட ரொம்பவும் அனுதாபத்துக்குரிய சம்பவங்கள். இதையெல்லாம் சமூகத்திற்கு எடுத்துச் சொல்லும் விதமாக ஒரு டாகுமெண்டரி எடுக்க வேண்டும் என்று எனக்கு அப்போதே தோன்றிவிட்டது. ஒருவேளை இதுதான் எனது தனித்துவமாக இருக்க வேண்டும் என்று கருதுகிறேன். ஆயினும் எனது தனிப்பட்ட இயல்புகளை மற்றவர்களிடம் நான் எப்படி எதிர்பார்க்க முடியும்? அதனால்தான் இருவேறு விளிம்புகளையும் என்னால் ரசிக்க முடிகிறதோ என்னவோ!"


" 'பாட்டுப் பாடவா' படத்தை நீங்கள் டைரக்ட் செய்ததாகச் சொல்வது முழு உண்மையல்ல என்றும் வேறு ஒரு டைரக்டரின் துணையோடுதான் படம் முழுமையாக முடிக்கப்பட்டதென்றும் சொல்லப்படுவது எந்த அளவுக்கு உண்மை?"

"அதில் சிறிதளவும் உண்மையே இல்லை. இந்தப் படத்தின் கதையை ஓர் உண்மைச் சம்பவத்தின் அடிப்படையில்தான் நான் எழுதினேன். அதை நானே டைரக்ட் செய்ய வேண்டுமென்று தயாரிப்பாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்கத்தான் நான் அதைச் செய்தேன். ரொம்பவும் நீட்டாக- சென்சாரில் ஒரு வெட்டுக் கூட விழாமல்- செய்திருக்கிறேன். தியேட்டரில் நானும் ரசிகர்களோடு ரசிகையாக உட்கார்ந்து படம் பார்த்த போது, யாரும் எந்தக் காட்சியைக் கண்டும் நெளியவில்லை என்பதை நேரடியாகப் பார்த்து சந்தோஷப்பட்டேன். இந்த நிலையில் இப்படியொரு வதந்தியா? நிஜமாகவே எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது."

பேட்டி: **இளங்கோவன்**

அட்டை வண்ணப்படமும்

படங்களும்: **கேமரா திருஞானம்**



வரிசையாய்
ஒண்ணொண்ணா
வெடிச்சிட்டிருக்கே..!
எங்கே போய்
விடப்
போறேனோ..?
நீதித்
துறையையும்
ஊழல்
பெருச்சாளி
களை..!
அனுமதிக்க
மாட்டோம்!
பம்பாய்
வழக்கறிஞர்கள்
சங்கம்
பம்பாய்
உயர்நீதிமன்ற
தலைமை நீதிபதி
பட்டாச்சார்ஜி
இந்தாங்க
...
பரிசு..!
நிலக்கரி இறக்குமதியில்
மீண்டும் 140 கோடி
ஊழல் குற்றச்சாட்டு
சு. சுவாமி
முதல்வர்



கல்கி



1995
மார்ச் 5
பவ
மாசி 21
மலர் : 53
இதழ் : 31

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

கையேந்தி நிற்கிறார் என்.டி.ஆர்.!

'பூரண மதுவிலக்கு' என்றும், 'இரண்டு ரூபாய்க்குக் கிலோ அரிசி' என்றும் தேர்தல் பிரசாரத்தில் முழக்கி விட்டு, இப்போது வாக்குறுதியை நிறைவேற்றியே ஆக வேண்டிய நிர்பந்தத்தில் உள்ள என்.டி.ஆர்., மத்திய அரசிடம் கையேந்தி நிற்கிறார். "நான் பிச்சை கேட்கவில்லை இதுபோன்ற மக்கள் நலத் திட்டங்களுக்கு நிதி உதவ வேண்டியது மத்திய அரசின் கடமை, தட்டிக் கேட்பது எங்கள் உரிமை" என்று என்.டி.ஆர். வாதாடவும் செய்கிறார்.

என்.டி.ஆரின் திட்டங்கள் நல்ல திட்டங்களே என்பதில் இரண்டாவது கருத்து கிடையாது. ஆனால் காரிய சாத்தியமான திட்டங்களா என்றும் பார்க்க வேண்டும். என்.டி.ஆர். அடைந்த வெற்றியைப் பார்த்து விட்டு வேறு மாநிலங்களிலும் தேர்தல் பிரசாரத்தின் போது காங்கிரஸாகும் சரி, பிற கட்சிகளும் சரி, கிலோ இரண்டு ரூபாய் அரிசி திட்டத்தை மக்களுக்கு உறுதி அளித்துள்ளன. இவர்கள் பதவிக்கு வந்தால் தங்கள் பங்குக்கு இவர்களும் மத்திய அரசிடம் உதவி கோருவார்கள். ஆந்திராவுக்கு இரண்டாயிரம் கோடி வழங்கி விட்டு இவர்களுக்கு இல்லை என்று மத்திய அரசு கூற முடியாது. இவ்வாறு பல்லாயிரம் கோடிகளை வாரி வழங்கும் மத்திய அரசு என்ன செய்யும்? அந்த இழப்பை ஈடுகட்ட மத்திய பட்ஜெட்டில் வரிகளை உயர்த்தும். அந்த வரிகளை ஆந்திர மக்கள் உள்பட அனைவருமேதான் கொடுக்க வேண்டியிருக்கும். கடைசியில் பாமரன்தான் பரிதவிக்கப் போகிறான்.

ஏழை மக்களுக்கு உதவ வழி, இலவசங்களையும் மான்யங்களையும் அதிகரித்துக் கொண்டே போவது அல்ல. வேலை வாய்ப்புக்களையும் அதன் மூலம் அவர்கள் வருவாயையும் பெருக்குவதுதான். இதற்கு ஏற்ப பொருளாதாரக் கொள்கை தனியார் துறை மூலம் செயல்படும்போதே, அரசாங்கம் தன் பங்குக்கு தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் (சாலைகள், நீர்ப்பாசனம், மின் உற்பத்தி போன்றவை) பெருக்குவதன் மூலமும் பெருமளவுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கலாம்.

வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தேர்தல்களில் வென்று பதவிக்கு வந்தாலும் தலைவர்களிடையே அடிப்படையான அம்சங்களில் இணக்கம் வேண்டும். ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்து காரிய சாத்தியமான திட்டங்களை வகுத்து மக்களுக்கு உதவ வேண்டும். தலைக்குத் தலை நாட்டாண்மை தேசப் பொருளாதாரத்தை நாசமாக்கும்.

பாகிஸ்தான் மீது விழுந்த இடி!

ஜெனிவாவில் மக்கள் உரிமைக் கமிஷன் மாநாட்டில் பேசிய ஃபாரூக் அப்துல்லா, பாகிஸ்தானை வாங்கு வாங்கு என்று வாங்கி வெலவெலத்துப் போகச் செய்திருக்கிறார். "இளைஞர்களுக்கு பயங்கரவாதத்தில் பயிற்சி தந்து பள்ளிக்கூடங்களையும் ஆஸ்பத்திரிகளையும் கொளுத்த அனுப்பி வைக்கும் உங்களுக்கு மனித உரிமை பற்றிப் பேச என்ன அருகதை இருக்கிறது? சுதந்திரம் பற்றிப் பேசுகிறீர்கள்; துப்பாக்கி சுதந்திரமா கேட்கிறீர்கள்? உங்கள் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீரப் பகுதியில் என்றைக்காவது தேர்தல் நடத்தியிருக்கிறீர்களா?" என்றெல்லாம் கேட்டு, பிய்த்து உதறியிருக்கிறார். ஒவ்வொரு இந்தியனின் நன்றிக்கும் பாத்திரமாகியிருக்கிறார்.

இதனால் கலக்கமடைந்த பாக் பிரதிநிதி, ஃபாரூக்கை "இந்திய அரசின் கைக்கூலி" என்றும், "உங்கள் தந்தை ஷேக் அப்துல்லா நீங்கள் பேசுவதைக் கேட்க நேர்ந்தால் நெளிவார்" என்றும் நையாண்டி செய்த போது, ஃபாரூக் கம்பீரமாக, "ஆம், நான் ஷேக் அப்துல்லாவின் மகன்தான்; அந்த கௌரவத்தை என்னிடமிருந்து உங்களால் பறித்து விட முடியாது! நான் காஷ்மீரிதான்; அந்தப் பெருமையை உங்களால் மறுக்க முடியாது! நான் மாபெரும் இந்தியாவின் குடிமகன்தான்; அந்தக் கௌரவத்தை உங்களால் எனக்குத் தராமல் இருக்க முடியாது!" என்று இடிமுழக்கம் செய்திருக்கிறார்.

பாகிஸ்தானின் பொய்ப் பிரசாரங்கள் மீது விழுந்த பலமான இடி!

அவ்வாண்டு லாகூரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டுக்கு ஜவாஹர்லால் நேரு தலைமை தாங்கினார். அவரது தலைமையுரை இந்திய இளைஞர்களுக்கு அகிம்சையின் மகத்துவத்தை வலியுறுத்தியதோடு, வெள்ளைக்காரனுக்கு எதிராக அனைவரும் போராட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியது. முழுச் சுதந்தரமே காங்கிரஸின் குறிக்கோள் என்ற அவரது அறைகூவல் பலத்த கையொலியுடனும் ஆரவாரத்துடனும் ஏற்கப்பட்டது.

காந்தியின் மீது சற்றே அவநம்பிக்கை கொண்டிருந்தவர்களுங்கூட, இளைய நேருவின் கனல் பறந்த பேச்சைக் கேட்டதும் மனம் மாறினார்கள்.

சட்டமறுப்பு இயக்கத்தில் மட்டுமல்லாது, வரிகொடா இயக்கத்திலும் ஈடுபட வேண்டுமெனும் தீர்மானமும் இளைய நேருவின் தலைமையில் நிறைவேறியது. வெறும் பேச்சளவில் இருந்த டொமினியன் நிலை என்பதையாகிலும் அவ்வாண்டு இறுதிக்குள் இந்தியாவுக்குத் தரவேண்டுமென்ற காங்கிரசின் கோரிக்கை இங்கிலாந்து அரசால் நிறைவேற்றப்படாததால், அந்தக் கெடு தீர்ந்துவிட்ட நிலையில், ஜவாஹர்லால் நேரு அவ்வாண்டு டிசம்பர் 31 ஆம் நாளில், ரவி நதித்திடல் நோக்கி மாபெரும் ஊர்வலத்தை நடத்திச் சென்றார். சரியான நள்ளிரவு நேரத்தில் அவ்வூர்வலம் நிகழ்ந்தது. ரவி நதிக்கரையில் மூவண்ணக் கொடி ஏற்றப்பட்டு, பூரண சுதந்திரமே இந்தியாவின் குறிக்கோள் என்பதற்கான சூளுரை அங்கு குழுமி இருந்த கிட்டத்தட்ட மூன்று இலட்சம் மக்களால் மேற்கொண்டு உரைக்கப்பட்டது. வரும் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாளைச் சுதந்திர நாளாகக் கொண்டாடத் தீர்மானிக்கப் பட்டது. அதன் பின் ஒவ்வோர் ஆண்டும் அக்கொண்டாட்டம் தொடருமென்றும் இளைய நேரு அறிவித்தார். வரும் ஏப்ரல் 6 இலிருந்து 13 ஆம் நாள் வரை 'தேசிய வாரம்' கொண்டாட வேண்டுமென்ற காந்திஜியின் யோசனை ஏற்கப்பட்டது. அவ்வாரத்தில் மதுக்கடைகள் முன்பு மறியல் செய்தலும் அந்நியத் துணி மறுப்புப் போராட்டங்களில் மக்கள் ஈடுபட வேண்டும் என்பதும் காந்திஜியின் விருப்பமாக இருந்தது.

லாகூர் காங்கிரசின் விளைவுகளை 'இந்தியா பிரிட்டனிடமிருந்து விவாகரத்துப் பெற்றது போல் இருக்கிறது' என்று சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் - ராஜாஜி - விமர்சித்தது பெருஞ்சிரிப்புடன் ரசிக்கப் பட்டது.

லாகூர் மாநாட்டுப் பந்தலிலேயே அனைத்திந்திய மதுவிலக்கு மாநாடும் ராஜாஜியின் தலைமையில் நடந்தது. 'சாராயத்தில் நல்ல சாராயம் கெட்ட சாராயம் என்பதாய்க் கிடையாது. சில விரைந்து கொல்லும், சில மெல்லக் கொல்லும். எனினும், 'நல்ல சாராயம்' கிடைப்பதில்லை என்பதற்காக நச்சுச்சாராயத்தைக் குடிக்கத் தயாராக இருப்பவர்களைப் பற்றி நாம் கவலைப்படத் தேவை இல்லை. 'நச்சுச்சாராயம் குடித்துச் செத்தாலும் சாவேனே ஒழிய, சாராயம் குடிப்பதை நிறுத்தமாட்டேன்' என்று கூறிச் சாகும் சிலருக்காக நாம் உயர்ந்த நோக்கத்துக்கான முயற்சியைக் கைவிடலாகாது' எனும் ராஜாஜியின் கருத்துப் பெரிதும் கொண்டாடப்பட்டது.

சபர்மதியில், அடுத்த ஆண்டு - 1930, பிப்ரவரி 14 ஆம் நாளில் - கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில், மகாத்மா காந்தியின் சட்டமறுப்புப் பற்றிய யோசனை ஏற்கப்பட்டது. இந்திய மக்கள் அகிம்சையின் தத்துவத்தைப் பரவலான முறையில் புரிந்து கொள்ளாமையால் அவர்கள் அதற்குத் தகுதி பெறவில்லை என்று அதுகாறும் சொல்லிக் கொண்டிருந்த காந்தியடிகள் தமது கருத்தை மாற்றிக் கொண்டது, காங்கிரஸ் இயக்கம் சாரமற்ற தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதாய் அதன் மீது அதிருப்தி கொண்டிருந்த மற்றத் தலைவர்களுக்கு - முக்கியமாய் இளந்தலைமுறையினர்க்கு - மகிழ்ச்சியளித்தது.

நாடு முழுவதும் மக்கள் கடலோரப் பகுதிகளில் உப்பு எடுக்க வேண்டுமென்று காந்தி அறிவித்தார். வெள்ளை அரசின் உப்புவரிக்கு எதிரான அறப்போராகும் அது என்றார். 'நம் நாட்டுக் கடற்பகுதியிலிருந்து உப்பெடுக்கும் உரிமை நமக்கு உண்டு; அதற்கு நாமெதற்கு வெள்ளைக்காரனுக்கு வரி செலுத்த வேண்டும்' எனும் எளிமையான வாதம் துளியும் கல்வியறிவற்ற மக்கள் மனங்களிலும் கூட ஆழமாக இறங்கியது. அரசிடமிருந்து ஆதாயங்கள் பெறும் சிலவகை ஊழியர்களும், மாணவர்களும், அரசோடு ஒத்துழைத்து வரும் வக்கீல்களும் தத்தம் பணிகளைத் துறக்கவேண்டுமென காந்தியடிகள் அறைகூவல் விடுத்தார். ஆனால், தமது வழக்கத்துக்கு இணங்க, வைசிராய்க்குக் கடிதமெழுதித் தாம் செய்யவிருந்தது பற்றித் தெரிவித்தார்.

- நாட்கள் நகர,

மலைக்கொடி

ஜோதிர்லதா கிரிஜா

உப்புச் சத்தியாக்கிரத்தையும் அதன் விளைவுகளையும் நாடே பரபரப்புடன் எதிர்நோக்கி நின்றது. இங்கிலாந்து அரசோ இன்னும் அதிகப் பரபரப்புடன் ஆயத்தங்கள் செய்யலாயிற்று.

நாடு தழுவிய உப்புச் சத்தியாக்கிரகம் நடந்து முடிந்த பிறகு அமராவதிக்கு ஒரு கடிதம் வந்தது.

54

உறையின் மீது பவித்திராவின் கையெழுத்தைப் பார்த்ததும் அமராவதிக்குக் கை கால்கள் இயங்க மறுத்தன. அஞ்சனா உறையை உடைத்துக் கடிதத்தை உருவிக் கொண்டே கண்கலங்கினாள்.

அன்புள்ள அம்மா!

சௌக்கியமா? நான் சௌக்கியம். தங்கமும் சௌக்கியம். இத்தனை நாட்களாய்க் கடிதம் எழுதாததற்கு மன்னிக்கவும். இங்கே கட்டுப்பாடுகள் அதிகம். எந்த ஊரிலிருந்து கடிதம் எழுதுகிறேன் என்பதைக் கூடச் சொல்லக் கூடாதென்பது மேலிடத்து உத்தரவு. தபால் முத்திரை சரியாக விழுந்திருந்தால், நீயே பார்த்துக் கண்டுபிடித்துக் கொள்!

இந்த ஊரில் உள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் எங்கள் இயக்கத்தினர் யாவரும் அங்கத்தினர்கள். காங்கிரஸ்காரர்களைப் போல் அவர்களின் கூட்டங்களில் கலந்து கொள்ளுவது. ஊர்வலங்களில் கலந்து கொள்ளுவது போன்றவற்றைச் செய்வோம். ஆனால் காங்கிரஸ் அலுவலகம் வேலை செய்யாத நாட்களிலும், நேரங்களிலும் எங்கள் இயக்கத்தின் இரகசியக் கூட்டங்கள், ஆலோசனைகள் ஆகியவை நடைபெறும்!

எனக்கும் தங்கத்துக்கும் தினமும் தேகப்பயிற்சிகள் சொல்லித் தருகிறார்கள். துப்பாக்கிப் பயிற்சியும்தான். பயப்படாதே அம்மா. வெள்ளைக்காரன் என்றாலே அவனைச் சுட வேண்டும் என்பதில் எனக்கு நாட்டமே இல்லை. பொல்லாதவன் என்று நிச்சயமாய்த் தெரிய வருகிற ஆளை மட்டுமே நானும் தங்கமும் சுடுவதாக இருக்கிறோம்.

எங்கள் தலைவர் யார் என்று நீ கேட்கவில்லையே? அவர்தான் சூர்யா சென் எனும் பள்ளிக்கூட ஆசிரியர். பெரும்பாலும் மாணவர்கள்தான் அவர் பயிற்சி அளிக்கும் புரட்சியாளர்கள்.



கூடிய விரைவில் இந்தியா முழுவதும் பேசப்படப்போகும் ஒரு பெரிய காரியத்தை நாங்கள் செய்யப் போகிறோம். அது இன்னதென்பதை இப்போது நான் சொல்ல மாட்டேன். நடந்து முடிந்த பிறகு, 'இதுதான் நான் அன்று கடிதத்தில் எழுதியது' என்று கட்டாயம் உனக்கு எழுதுவேன்!

அப்பாவிடமிருந்து கடிதம் வந்திருக்கு மென்று நம்புகிறேன். அங்குள்ள நிலை பற்றி அறிய எனக்கு மிகவும் ஆவலாக இருந்தாலும், உன்னிடமிருந்து பதில் பெற வழி இல்லாததால், அதை அடக்கிக் கொள்ள வேண்டியதாகிறது. ஒரே ஒரு தரந்தான் பார்த்தேன் என்றாலும், அப்பாவின் முகம் என் உள்ளத்தில் அப்படியே பதிந்துவிட்டது. அந்தத் தழும்பு முகத்தில் ஏற்படுவதற்கு முன்னால் அப்பா மிக அழகாக இருந்திருக்க வேண்டும்.

தங்கம் தன் நமஸ்காரங்களைத் தெரிவிக்கச் சொல்லுகிறான். எங்களைப் பற்றி நீங்களெல்லாம் கவலைப்பட வேண்டாம். தாத்தாவிடம் என் அன்பைச் சொல்லவும். பெரியம்மாவிடமும்தான். கங்கா வந்தால் இந்தக் கடிதத்தைக் காட்டவும்.

அன்புள்ள,
பவித்ரா.'

கதவு தட்டப்பட்டது. எழுந்து போய்க் கதவைத் திறந்த ராமசாமி வெளியே நின்றிருந்த மணவாள நாயுடுவையும் அப்துல் சலாமையும் உற்சாகமாய் உள்ளே அழைத்து வந்து உட்காரவைத்தார்.

"என்ன ஓய்! காந்தியோட மகிமையைப் பார்த்தீரா? தண்டி யாத்திரை அமோகமா நடந்து முடிஞ்சுடுத்து. வேதாரண்யத்துல ராஜாஜி நடத்தின உப்புச் சத்தியாக்கிரகமும் வெள்ளைக்காரனை ஒரு கலக்குக் கலக்கிடுத்து. நாடு முழுக்க இப்படி ஒரு போராட்டம் வெற்றிகரமா நடக்கும்னு வெள்ளைக்காரன் நெனச்சே இருக்க மாட்டான்."

"தோல்வியை இயக்கம் தழுவணும்ங்கிற நோக்கத்தில்தானே காந்தியைப் பிடிச்சு முதல்ல ஜெயில்ல போட்டுட்டான்!"

"ஆனா காந்தியோட சாமர்த்தியம் ஜெயிச்சுடுத்தே! உப்பு எடுக்கக் கடலோரப் பகுதிகள்ல மட்டுந்தான் முடியும். அதனால வேற விதமான சட்ட மறுப்புக்களையும் செய்யலாம்னுட்டாரு. அதனால நாடு முழுக்க சத்தியாக்கிரகம். ஒருத்தர் கைதானா சத்தியாக்கிரகத்துக்கு அடுத்தடுத்து ஒவ்வொரு தலைவரா வந்துக்கிட்டேயிருந்தாங்க. அப்பாஸ் தியாப்ஜிக்கு அப்புறம் நம்ம சரோஜினி நாயுடு வழிநடத்தின யாத்திரையைப் பத்தி அமெரிக்க ஜர்னலிஸ்ட் ஒரு ரிப்போர்ட்

மோட்டார் சைக்கிள் பரிசுப் போட்டி - 26



இதுதான் கடைசிவாரப் போட்டி!

இந்த முறை பரிசுப் பொருளான மோட்டார் சைக்கிள் பற்றியே போட்டியும் அமைகிறது!

கீழே உள்ள வாக்கியங்களில் மோட்டார் சைக்கிளில் உள்ள உதிரிப் பாகங்களில் சில ஒளிந்து கொண்டிருக்கின்றன. குறைந்தபட்சம் பத்துப் பாகங்களின் பெயர்களையாவது நீங்கள் எழுதியனுப்ப வேண்டும்.

கடந்த 25 வாரங்களாகச் சேர்த்து வைத்திருக்கும் கூப்பன்களையும் இதோடு சேர்த்து மொத்தமாக எங்களுக்கு அனுப்புங்கள். அதிகபட்ச சரியான விடைகளை எழுதி வெற்றிபெறும் ஒருவருக்கு மோட்டார் சைக்கிள் பரிசு! ஒருவருக்கு மேல் அதிகபட்ச விடைகளைச் சரியாக எழுதியிருந்தால் குலுக்கல் முறைதான். ஆறுதல் பரிசுகளும் உண்டு.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. உறை மீது "மோட்டார் சைக்கிள் பரிசுத் திட்டம்" என்று குறிப்பிடவும். முடிவு தேதி : 20.3.95.

உதிரிப் பாகங்கள் ஒளிந்துள்ள வாக்கியங்கள்:

1. டேனியலுக்கு ப்ரேக் டான்ஸ் ஆடப் பிடிக்கும்.
2. அவன் வெறும் சீட்டுக் கட்டு ராஜாதான்.
3. அசோக் மிகவும் டயர்டாக உணர்ந்தான்.
4. பரங்கியர் கூட்டத்தை வெளியேற்றுவோம் என்று முழக்கமிட்டனர் மக்கள்.
5. தனது காதலைப் புரிந்து கொள்ளாத ரமணியை "நீயொரு சரியான டியூப்லைட்!" என்று கத்தினாள் பார்கவி.
6. எசி சேரில் சாய்ந்தபடியே கேபிள் டீ.வி.யில் படம் பார்த்துக் கொண்டிருந்தார் சங்கரன்.
7. மூக்குக் கண்ணாடியைத் துடைப்பது போலப் பாஸ் போக்குக் காட்டினார்.

ஒளிந்துள்ள உதிரிப் பாகங்கள்: 1 ....

2.........................3..........................4..........................

5.........................6..........................7..........................

8.........................9..........................10........................

பெயர் : ....

முகவரி : ....

....

எழுதி இருக்கான் பாரும், அடாடாடா!"

"பத்திரிகைக்காரங்க யாருமே வரக்கூடாதுன்னு வெள்ளைக்காரன் தடை உத்தரவு போட்டிருந்தானே?"

"வெப் மில்லர்ங்கிற அந்த ஜர்னலிஸ்ட்டை பல்சார் ஸ்டேஷன்ல வலுக்கட்டாயமா ட்ரெய்ன்லேர்ந்து இறக்கி விட்டுட்டாங்க. ஆனா அந்தாளு ஒரு சரக்கு ரயில்ல ஏறிண்டு தராசனா ஸ்டேஷன் வரைக்கும் வந்துட்டு அங்கேருந்து போராட்ட ஸ்தலம் திங்ரி வரைக்கும் கிட்டத்தட்ட ஆறு மைல் தொலைவு நடந்தே போயிருக்காரு... படிக்கிறேன், கேளுங்க... மிஸஸ் சரோஜினி நாயுடு முதலில் எல்லாரையும் மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்யக் கட்டளை இட, எல்லாரும் அப்படியே செய்தார்கள். பிறகு அவர் சொன்னார்: 'காந்திஜியின் உடல் சிறையில் இப்போது இருந்தாலும், அவரது ஆன்மா நம்முடன்தான் இருக்கிறது. இந்தியாவின் கௌரவம் இப்போது உங்கள் கைகளில் இருக்கிறது. எப்படிப்பட்ட நிலையிலும் நீங்கள் வன்முறையில் ஈடுபடக்கூடாது. நீங்கள் அடிக்கப்படுவீர்கள்; ஆனால் நீங்கள் தடுக்கக்கூடாது! அடிகளைத் தவிர்ப்பதற்காக நீங்கள் உங்களின் ஒரு கையைக் கூட உயர்த்தலாகாது.' - அவரின் சுருக்கமான இந்தப் பேச்சுக்குச் சத்தியாக்கிரகிகளிடமிருந்து ஆரவாரக் கூக்குரலும், வாழ்த்தொலிகளும் கிளம்பின. சத்தியாக்கிரகிகளின் அணிவகுப்பு மெதுவாகவும் மௌனமாகவும் அரை மைலுக்கு அப்பாலிருந்த உப்புவண்டல்களை நோக்கிச் சென்றது. சுமார் இருபது பேர் காயம்பட்டவர்களைச் சுமந்து செல்லும் சிவப்புத் துணியாலான தூக்குக் கட்டில்களுடன் தொடர்ந்தனர். அணிவகுப்பின் முதல் வரிசையில் காந்தியின் மகன் மணிலால் காந்தி இருந்தார். உப்புவண்டல்களை நெருங்கும் நேரத்தில் அவர்கள் புரட்சிக் கோஷங்களை எழுப்பினார்கள். "இன்குலாப் ஜிந்தாபாத்" என்ற கோஷத்தைத் திரும்பத் திரும்ப எழுப்பினார்கள்.

காக்கி உடையும் தொப்பியும் அணிந்த நானூறு சூரத் போலீஸ்காரர்கள் உப்பளங்களைக் காத்து நின்றனர். ஆறு வெள்ளைப் போலீஸ் அதிகாரிகள் அவர்களுக்கு உத்தரவிட அங்கு இருந்தனர். போலீஸ்காரர்கள் எல்லார் கைகளிலும் இரும்புப்பூண் போட்ட குண்டாந்தடிகள். உப்பளங்கள் உயரமான தடித்த கம்புவேலிகளால் பாதுகாக்கப்பட்டிருந்தன. அவ்வேலிக்குள் துப்பாக்கி ஏந்திய இருபத்தைந்து போலீஸ்காரர்கள் இருந்தனர். உப்பளங்களை நெருங்க இன்னும் நூறு கஜ தூரம் இருந்த கட்டத்தில் அந்தப் பெருங்கூட்டம் நின்று கொண்டது. அங்கே முழு அமைதி நிலவியது. முதலில் ஒரு சிலர் அடங்கிய அணி உப்பளத்தை நெருங்கியது. ஒரு புதிய சட்டத்தின் பெயரைச் சொல்லிப் போலீசார் அவர்களைக் கலைந்து போகச் சொன்னார்கள். அதைக் காதில் வாங்காமலே அந்தச் சிறு அணி மௌனமாகவும் அமைதியாகவும் முன்னேறியது. வெளியிலிருந்து நூறு கஜ தூரத்தில் நான் நின்றிருந்தேன். அதிகாரிகள் கட்டளை பிறப்பித்தனர். அவ்வளவுதான். பல போலீசார் தங்கள் குண்டாந்தடிகளால் சத்தியாக்கிரகிகளின் மீது சரமாரியாக அடிமழை பொழிந்தார்கள். அடிகள் எல்லாம் அவர்களின் தலைகள் மீதுதான். அடிகளைத் தவிர்க்க யாரும் ஒரு கையைக் கூடத் தூக்கவில்லை. சீட்டுக்கட்டின் சீட்டுக்களை நிமிர்த்தி வைத்து விட்டு, தொட்டால் சரியுமே - அப்படி மளமளவென்று சரிந்தார்கள். பிளந்த மண்டைகளும், உடைந்த தோள்களுமாய், இரத்தம் பீறிட, சிலர் வலியால் முனகியபடியும் சிலர் மயக்கமுற்றும் விழுந்தார்கள். முதல் அணி இவ்வாறு சரிந்ததும் தூக்குத்



"நேத்து என் மனைவிக்கும் எனக்கும் பயங்கர சண்டை. நான் மாமூல் வாங்கறது அவளுக்கு அவமானமா இருக்காம்."

"அப்புறம் எப்படி சமாளிச்சே?"

"ஒரு இருபது ரூபாய் கொடுத்து வாயை அடைச்சேன்!"



- வி. பி. கிருஷ்ணசாமி

தூளிகளுடன் காத்திருந்தவர்கள் காயமடைந்தவர்களைத் தூக்கிக் கொண்டு முதலுதவிக் கொட்டகைக்கு விரைந்தார்கள். அடுத்த அணி வேறொரு தலைமையுடன் புறப்பட்டது. 'திருப்பி அடிக்காதீர்கள். அடிகளைத் தவிர்க்கக் கையைத் தூக்காதீர்கள்' என்று தலைவர்கள் அறிவுறுத்தியவாறாக இருந்தனர். தங்களில் சிலர் சாகவும் கூடும் என்பது தெரிந்திருந்தும் அவர்கள் அமைதி காத்து முன்னேறி அடிவாங்கி விழுந்த வண்ணம் இருந்தார்கள். அவர்கள் முகங்களில் தயக்கமோ அச்சமோ சிறிதும் புலப்படவில்லை. விழுந்த பிறகு யாரும் பெருங்குரலில் கத்தவோ, அழவோ இல்லை. வெறும் முனகல்கள் மட்டுமே கேட்டன...."

"என்னய்யா அநியாயம் இது? இந்த உப்பு வரியில அவனுக்கு வருஷத்துக்கு ஆறு கோடி ரூபா கிடைக்கிறது. அவன் இந்த நாட்டில சுரண்டுற மொத்தத் தொகையோட ஒப்பிட்டா இது சுண்டைக்காய். இதுக்குப் போய் இப்படி விளாசித் தள்ற ராட்சசனா

நாளைக்கு நமக்குச் சுதந்தரம் கொடுக்கப் போறான்? நான் நம்பல்லேங்காணும்...''

''ஜாலியன்வாலாபாக் படுகொலையப்ப காந்தி என்ன சொன்னார்? 'இது ஒரு ஆரம்பந்தான். இன்னும் எவ்வளவோ, மோசமான நிலைகளை நாம சந்திக்க வேண்டி வரும்' அப்படின்னார், இல்லையா?''

மேலும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பின் காப்பியைக் குடித்து விட்டு மணவாள நாயுடு புறப்பட்டுப் போனார்....

அவ்வாண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் நாள் 'யங் இண்டியா' வில் பெண்களுக்குக் காந்தியடிகள் விடுத்த அறைகூவல் பல்லாயிரக்கணக்கான பெண்களை நூல் நூற்பிலும், மறியலிலும் உடனடியாக ஈடுபட வைத்தது. அதுகாறும் வீட்டைவிட்டு வெளியே போகும் வழக்கமே இருந்திராத பெரிய இடத்துப் பெண்கள், நடுத்தர வர்க்கத்துப் பெண்கள், வைதீகக் குடும்பத்துப் பெண்கள் ஆகியோரெல்லாம் அவர் கூறிய பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டனர். பெண்களுக்குள் ஏற்பட்ட வியக்கத்தக்க இம்மாற்றத்தால் ஆண்களுக்கு இன்னும் அதிகமாய்ச் சாதிக்க வேண்டும்' எனும் ஆவேசம் வந்தது.

காங்கிரஸ் சட்டவிரோதக் கட்சி என அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் அலுவலகங்கள் சூறையாடப்பட்டன. இந்தியா முழுவதுமே சிறைப்பட்டது போன்ற ஓர் உணர்வு மக்களிடம் நிலவியது.

'கூடிய சீக்கிரம் இந்தியா முழுவதும் பேசப்படப் போகும் ஒரு பெரிய காரியத்தை நாங்கள் செய்யப் போகிறோம்' என்று பவித்ரா தனது கடிதத்தில் தெரிவித்ததைப் படித்ததிலிருந்து வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தாள் அமராவதி. காந்தியடிகள் உப்புச் சத்தியாக்கிரம் தொடங்கிய சில நாட்களில் - ஏப்ரல் 18 ஆம் நாள் - சிட்டகாங் ஆயுதக் கிடங்கு கொள்ளையடிக்கப்பட்டது. தொலைபேசி, தந்தித் தொடர்பகங்கள் அழிக்கப்பட்டு, சிட்டகாங் அறவே துண்டிக்கப்பட்டது. இவற்றைச் செய்த புரட்சியாளர்களுக்கும் வெள்ளையர்க்கும் ஜலாலாபாத் குன்றில் நடந்த போரில் 82 வெள்ளையரும் 11 புரட்சியாளர்களும் மாண்டது ஆகியவை பற்றிய செய்திகளைப் படித்து அமராவதி வீட்டார் மிரண்டு போனார்கள். பவித்ரா தன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது இதுபற்றித்தான் என்று தீர்மானித்ததில் அவர்களது நிம்மதி அறவே பறி போயிற்று. புரட்சியாளரில் சிலர் தப்பிச் சென்ற செய்தி மட்டும் சிறிது நம்பிக்கையளிப்பதாக இருந்தது.

சைமன் கமிஷனின் சிபாரிசுகளை அமல்படுத்துதல் மட்டுமல்லாது வேறு

இந்தியப் பிரச்னைகளையும் விவாதிக்கும் பொருட்டு லண்டனில் ஒரு வட்ட மேஜை மாநாடு கூட்ட இங்கிலாந்து அரசு முடிவெடுத்தது. ஆனால் காங்கிரஸ் அதில் பங்கேற்க முடியாதென்று திட்டவட்டமாக அறிவித்து விட்டது. மற்ற இந்தியக் கட்சிகள் பலவற்றினுடையவும் பிரதிநிதிகள் நவம்பர் 12 ஆம் நாள் தொடங்கி 1931, ஜனவரி 19 ஆம் நாள் வரை நடந்த அம்மாநாட்டில் கலந்து கொண்டார்கள். கூட்டாட்சி அமைப்பு முறையும், இறுதியில் டொமினியன் அந்தஸ்து அளிப்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டன. அம்மாநாடு நடந்த நேரத்தில் காங்கிரஸ் தலைவர்கள் அனைவருமே உப்புச் சத்தியாக்கிரகத்தின் விளைவாகச் சிறைகளில் இருந்தனர். வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்ட லிபரல் கட்சியின் தேஜ் பகதூர் சாப்ருவும், சீனிவாச சாஸ்திரியாரும் எந்த முடிவும் எடுப்பதற்கு முன்னால் காந்தி, நேரு ஆகிய தலைவர்களைச் சந்தித்துப் பேச விரும்பினார்கள். பேசவும் செய்தார்கள். இதற்கிடையே காந்தியடிகளையும் மற்ற எல்லாத் தலைவர்களையும் இங்கிலாந்து அரசு ஜனவரி 19 ஆம் நாளன்று சிறையிலிருந்து விடுவித்தது. காந்தியடிகள் பங்கேற்காத எந்த மாநாட்டு முடிவும் இந்திய மக்களுக்குச் சம்மதமாக இராது என்பதை அரசு புரிந்து கொண்டதே இதற்கு அடிப்படையாகும்.

மேற்கொண்டு பேச்சுவார்த்தைக்குத் தம்மைச் சந்திக்க வைசிராய் இர்வின் தயாராக இருந்ததையறிந்த காந்தியடிகள் நாள் குறித்துக் கொண்டு தில்லியில் வைசிராயைச் சந்தித்தார்.

பிப்ரவரி 17 ஆம் நாளிலிருந்து தொடங்கி மார்ச்சு 5 ஆம் நாள் வரை தொடர்ந்த காந்தி-இர்வின் பேச்சு வார்த்தையின் விளைவுகள் எல்லாருக்கும் திருப்தியளித்ததாய்ச் சொல்ல முடியாது. சட்ட மறுப்பு இயக்கத்தைக் கைவிட காந்தியடிகள் ஒப்புக் கொண்டது குறிப்பாக ஜவாஹர்லால் நேருவுக்கும் சுபாஷ் சந்திர போசுக்கும் அறவே பிடிக்கவில்லை. பதிலாக அரசியல் கைதிகள் அனைவரும் சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்னும் நிபந்தனையைக் காந்தியடிகள் விதிக்க, அது ஏற்கப்பட்டது. அடுத்த வட்டமேஜை மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்ள இவ்வுடன்படிக்கை அடிகோலியது.

காந்தியடிகள் வைசிராய்க்குச் சரிக்குச் சரியான அந்தஸ்துப் பெற்றதில் இந்தியா வெங்கும் மகிழ்ச்சி வெள்ளந்தான்.

இந்தப் பேச்சுவார்த்தை நடந்த போது கங்கா தில்லியின் வீதிகளில் தனக்கு அறிமுகமான புரட்சியாளன் ஒருவனுடன் சுற்றிக் கொண்டிருந்தான்.

(தொடரும்)



இன்னுமொரு ஞாபகம்

பஸ் கோவையை நெருங்கிக் கொண்டிருந்தது. அரை குறை தூக்கம் கலைந்து விழித்தேன். இடுப்பெல்லாம் வலித்தது. மெட்ராஸிலிருந்து கோயமுத்தூருக்குப் பன்னிரண்டு மணி நேரப் பயணமாகி விட்டது. நிமிர்ந்து உட்கார்ந்தேன். சின்னக் கொட்டாவி ஒன்று நிதானமாய் ரிலீஸ் ஆனது.

கண்கள் அனிச்சையாய்த் திரும்பி என் வரிசை பக்க வாட்டு ஸீட்டில் அந்தப் பெண்ணைத் தேடின. 'மடையா! அவள்தான் திருச்சியிலேயே இறங்கி விட்டாளே!'

யோசனைக் குதிரை பின்னோக்கி - அந்தப் பெண்ணை நோக்கி ஓடியது.

சித்ரன்

(25 வயது சித்ரனின் முதல் இன்னிங்ஸ் இச் சிறுகதை...)



என்ன ஒரு அழகான பெண்!!! சென்னையில் தனியாய் ஏறினாள். வழியனுப்ப யாராவது வந்திருந்தார்களோ என்று கவனிக்கவில்லை. நான் அவளை கௌதமி, மாதுரி, மனீஷா கொய்ராலாக்களுடன் ஒப்பிட்டதில் மற்றவர்கள் தோற்றார்கள். இது தனி சௌந்தர்யம். என் வரிசை ஸீட்டில் அவள் உட்கார்ந்ததற்கு எனது போன ஜென்மத்து புண்ணியங்கள் காரணமாயிருக்கலாம். ஆனால் –

அவள் இடதுகால்!?

பஸ் படிகளில் ஏறும் போது அவள் நிறையவே சிரமப்பட்டதாய் உணர்ந்தேன். ஊனம். மெதுவாய் விந்தி விந்தி நடந்து ஸீட்டுக்கு வந்தாள். ஒரு கையில் சின்ன சூட்கேஸ். 'அழகைக் கொடுத்தது இயற்கையெனில் காலில் குறையைக் கொடுத்தது எது? விதியா?' என்னை நானே கேட்டுக் கொண்டேன். திடீரென்று அந்தப் பெண்ணை எனக்கு ரொம்ப பிடித்துப் போனது.

என் தலைக்கு மேலுள்ள லக்கேஜ் கேரியரில் அவள் சூட்கேஸை வைக்க உதவினேன். புன்னகைத்தாள். அவளோடு பேச வேண்டும் என்றெழுந்த ஆவலை கட்டுப்படுத்திக் கொண்டேன். கழுத்தில் தாலி இல்லாததைக் கவனித்தேன்.

திருச்சியில் அவள் இறங்கிக் கொண்டாள். அவளைப் பற்றின யோசனைகள் மனத்தை விட்டு இறங்காமல் கோவை வரை பிடிவாதமாய் வந்து விட்டன. ஊனமுற்ற அந்த அழகான பெண்ணிற்கு எந்த மாதிரி எதிர்காலம் காத்துக் கொண்டிருக்கிறது? சிந்தனைகள் வட்டமடித்தன.

"பஸ் ஸ்டாண்டு கேட்டது யாரு? இறங்குங்க..."

கண்டக்டர் கத்தினார். அதற்குள்ளாகவா கோயமுத்தூர் வந்து விட்டது?

நான் வேகமாய் எழுந்து, லக்கேஜ் கேரியரிலிருந்து சரக்கென்று என் சூட்கேஸை உருவிக் கொண்டு இறங்கினேன்.

ராம் நகரில் என் அறைக்கு வந்து, பல் விளக்குவதற்காக பேஸ்ட் எடுக்க சூட்கேஸைத் திறந்தவன் திகைத்து நின்றேன்.

'மைகாட்!'

அந்த சூட்கேஸுக்குள் இரண்டு புடைவைகள், ரவிக்கைகள் ஒரு சுரிதார் மற்றும் உள்ளாடை எல்லாம் தென்பட—

இது என் சூட்கேஸ் இல்லை!

அதிர்ச்சியிலிருந்து மீளாமல் அதை மூடி மேல்புறம் பார்த்தேன். 'எஸ். நீலா' என்று ஆங்கிலத்தில் பெயர் தாங்கின ஸ்டிக்கர் ஒட்டியிருந்தது.

உண்மை உறைத்தது. உடலில் கலவரம் தொற்றிக் கொண்டது. சூட்கேஸ் கைமாறி விட்டது. எப்படி? எப்படி? யோசிக்க ஆரம்பித்தேன். எங்கே வைத்திருந்தேன் அதை! தலைக்கு மேலேயே லக்கேஜ் கேரியரில். அங்கிருந்துதான் திரும்ப எடுத்.... ஆம்! அந்த திருச்சிப் பெண்! அவள் சூட்கேஸையும் நான்தானே வாங்கி அதே இடத்தில் வைத்தேன். அதுவும் கூட இதே மாதிரிதானே இருந்தது. இல்லை. அதுதான் இது. என்னுடையது மாதிரியே. நிறம், உருவம், அளவு எல்லாம்.

என்னுடைய சூட்கேஸை அவள் எடுத்துக் கொண்டு போயிருப்பாள். 'அந்த சூட்கேஸுக்குள் என்னுடைய அந்த..! 'கடவுளே!' என் அடிவயிற்றில் ஒரு பயம் மெள்ள கிளர்ந்தெழுந்து கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

ஒருவேளை அவள் ஏதாவது ஃப்ராடு கேஸோ? ச்சே! இருக்காது. அந்தக் குழந்தை முகத்தைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை.

எஸ். நீலா!

இதுதான் அவள் பெயரா? இந்த நீலாவை நான் எங்கே போய்த் தேடுவேன்? நான் அந்தப் பெட்டியை மறுபடி திறந்து புரட்டி அட்ரஸ் எதுவும் கிடைக்குமா என்று பார்த்தேன். வெறும் துணிகள். கோல்கேட் பேஸ்ட், பிரஷ்

மற்றும் பெண்கள் சமாசாரங்கள். இரண்டு புத்தகங்கள் - 'மைக்ரோஸாஃப்ட் சி', 'லிவ் அண்ட் டேக்'. ஒரு சின்ன பர்ஸ். இருநூற்றிப் பன்னிரண்டு ரூபாய் ஐம்பது பைசா அதில் இருந்தது. ஒரு காலி இன்லேண்ட் லெட்டர். அட்ரஸ் மட்டும் இல்லை.

ஆனால் என் சூட்கேஸுக்குள் இருக்கிற பொருட்கள்? வெறும் பொருட்களா அவை? உடைகள், ஷேவிங் செட்டை விடுங்கள். மற்றதெல்லாம்....

என் ஐம்பத்து மூன்று கவிதைகள் தாங்கிய ஸ்பைரல் போட்ட ஒரு குயர் நோட்டு. வித்யாவின் கழுத்து மணிமாலையிலிருந்து அறுந்து விழுந்த மணிகள், கடிதங்கள், மேலும் கடிதங்கள், சாலை விபத்தொன்றில் பலியான என் உயிர் நண்பன் எனக்கெழுதிய ஒரே ஒரு கடிதம், கையில் பொம்மை பஸ் வைத்துக் கொண்டு போஸ் கொடுத்த என் ஒரே குழந்தை ஃபோட்டோ, அழகான பூனைக் குட்டிகள் படம் போட்ட - குழந்தை ராஜி என் பிறந்த நாளுக்குப் பரிசளித்த - போல்ஸ்கா நாட்டு ஸ்டாம்புகள், என் ஐடென்டிடி கார்டு, தாத்தா ஞாபகமாய் வைத்திருந்த பாக்கு சீவுகிற கத்தி, ஜீவா பரிசளித்த தி. ஜானகிராமன் புத்தகங்கள், என் சிறுகதை வெளியான ஆனந்த விகடன் புத்தகத்தின் ஒரே பிரதி. பேனாக்கள், கண்ணாடி க்ளாஸ், ஒரு காய்ந்த சூட்டுக்காய், சிவப்புக் கல் பதித்த கவரிங் மோதிரம், இடுப்பு பெல்ட், ஆடியோ கேஸட், வளையல் துண்டு, மயிலிறகு, என் டயரி, அதற்குள் நான் மிக முயற்சித்துப் பெற்ற அருமை வித்யாவின் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ... இன்னும் சில பொருட்கள்.

என்னைப் பொறுத்தவரை இது எல்லாமே பொக்கிஷங்கள். குப்பை என்று எதுவும் கிடையாது. கேட்பதற்குச் சிரிப்பாய்க் கூட இருக்கும். 'கத்தக் கிறுக்கனா இருக்க' என்று சிலர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பொருட்கள் எல்லாமே ஒவ்வொருவருடைய நினைவுகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டு கிடக்கிற பொக்கிஷங்கள். எப்போதாவது எடுத்துப் பார்க்கும் போது கிடைக்கும் அந்த இனிமையான பழைய நினைவுகளுக்காய் ஒவ்வொன்றையும் பொக்கிஷமாய் பத்திரப்படுத்தியிருந்தேன். ஒவ்வொரு பொருளும் ஒவ்வொருவர் ஞாபகம்.

போச்சு! எல்லாம் போச்சு!


லீவில் ஊருக்குப் போன நான் இவை எல்லாவற்றையும் எப்போதும் என்னுடனேயே வைத்திருக்கலாமே என்று சூட்கேஸுக்குள் அடைத்துக் கொண்டு வந்தேன். நிமிடத்தில் எல்லாவற்றையும் இழக்க வேண்டியதாய்ப் போயிற்று. பிரமை பிடித்த மாதிரி இருந்தது. அழுகை கூட வரும் போல் தோன்றியது. உணர்வுகளைச் சிரமப்பட்டு அடக்கினேன். ஜீரணிக்க முடிகிற இழப்பாய்த் தோன்றவில்லை இது.

வெளியே வந்து ட்ராவல் ஏஜென்ஸிக்கு நம்பிக்கையில்லாமல் ஃபோன் பண்ணிப் பார்த்தேன். நினைத்த மாதிரியே அவள் அட்ரஸ் எதுவும் கிடைக்கவில்லை. பேர் சொல்லிவிட்டுப் பணம் கட்டினால் கோயமுத்தூர் கொண்டு வந்து இறக்கி விடுகிறார்கள். ஸீட் நம்பர்கள் எழுதின லிஸ்டில் பெயருக்கு நேரே ஒரு கையெழுத்து. அட்ரஸ் எங்கேயிருந்து கிடைக்கும்? என்ன ட்ராவல் ஏஜென்ஸி நடத்துகிறார்களோ!

என் சூட்கேஸில் என் ஐடென்டிடி கார்டு இருக்கிறதே. அதில் என் அட்ரஸ்!

லேசாய் எனக்கு உயிரும் நம்பிக்கையும் மீண்டு வந்தது. அவள் பெட்டி என்னிடமிருக்க, அவள் என்னை நிச்சயம் தொடர்பு கொண்டுதான் ஆக வேண்டும். அதுவரை காத்திருக்கலாம்.

ஒரு வாரம் மகா சோகமாய்க் கழிந்தது. என் பெட்டி இனி எனக்குக் கிடைக்காது



விசேஷமா, எடு அரிவாள்மணையை!

கல்யாணமான புதிதில் என் கணவருடைய கிராமமான பெரிய கிருஷ்ணாபுரத்தில் தங்கியிருந்தேன். ஒரு நாள் நான் வாசலுக்கு வந்து பார்த்த போது, எல்லாப் பெண்களும் கையில் அரிவாள்மணைகளுடன் வேகவேகமாகச் சென்று கொண்டிருந்தனர். எதற்காக இப்படி? அதிர்ச்சியோடு என் மாமியாரைக் கேட்டேன். "இங்குள்ள யாராவது ஒருவர் வீட்டில் விசேஷமென்றால் சமையலுக்கு ஒரே யொரு ஆள் மட்டும்தான் வைப்பார்கள். அவர் சமையல் மட்டும்தான் செய்வார். எனவே, இங்குள்ள எல்லா வீட்டுப் பெண்களும் போய்க் கறிகாய் நறுக்கிக் கொடுப்பது போன்ற வேலைகளைச் செய்வோம்!" என்று தாமும் ஓர் அரிவாள்மணையைத் தூக்கிக் கொண்டு, கோடி வீட்டில் மஞ்சள் நீராட்டு விழாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். அந்த பரோபகாரத்தைப் பார்க்கச் சந்தோஷமாயிருந்தது.

சிதம்பரம் – 1, எம். சிவகாமசுந்தரி.

என்று நான் தொண்ணூற்றைந்து சதவீதம் முடிவு செய்து விட்டேன். அவளின் 'மைக்ரோஸாஃப்ட் சி'யைப் புரட்டினேன். ஒரு மண்ணும் புரியவில்லை. 'இவ் அண்ட் டேக்'கை நடுநடுவில் படித்துப் பார்த்தேன்.

அடுத்த வாரம் அந்தப் பார்சல் வந்தது. ஆச்சரியம். ஏக குஷியானேன். என்னுடைய பொக்கிஷப் பெட்டி! பாதுகாப்பாய் வந்து சேர்ந்திருந்தது. குரியர் சர்வீஸ் வாழ்க. நான் சந்தோஷத்தால் வானத்துக்கும் பூமிக்கும் குதித்தேன்.

சூட்கேஸை அவசரமாய்த் திறந்தேன். நான் வைத்தபடி இல்லாமல் எல்லாம் கலைந்திருந்தன. ஆனால் எல்லாமே இருந்தன. சாய்ந்த கையெழுத்து. பெயர் பார்த்தேன். நீலா. எஸ். நீலா. அவளேதான். நிதானமாய்ப் படித்தேன்.

'டியர் மிஸ்டர் பிரபாகர்....

இதோ உங்கள் உடைமை. (உங்களுடையதுதானென்று நினைக்கிறேன்.) அது போல் என்னுடையது உங்களிடமிருக்குமென்று நம்புகிறேன். எல்லாவற்றிற்கும் காரணம் நான்தான். என் கவனக்குறைவு. மன்னிப்பீர்களா?

உங்கள் பெட்டியை அது பூட்டப்படாததால் திறந்து, குடைந்தும் பார்த்தேன் – உங்கள் அனுமதியில்லாமல். மறுபடியும் மன்னிக்கவும். பெட்டியின் விஷயங்கள் ரொம்ப சுவாரஸ்யமாயிருந்தன. நீங்கள் எந்த மாதிரி ஆள்? பிடிபடவில்லை.

கடிதங்களைப் படிக்க மனம் வரவில்லை. நாகரிகம் காரணம். கவிதை நோட்டை மூன்று மணி நேரம் செலவழித்துப் பொறுமையாய்ப் படித்தேன். அத்தனையும் வாவ்! எனக்கு ரொம்பப் பிடித்தது. நீங்கள் ஒரு கலைஞன் என்று புரிகிறது.

ஃபோட்டோவில் சிரிக்கும் அந்தக் கறுப்பு குழந்தை யார்? ரொம்ப ஸ்வீட். ஐடென்டிடி கார்டின் ஃபோட்டோவில் நீங்கள் சுமார்தான்.

ஆனந்த விகடன் புத்தகத்திற்கு எதற்கு அட்டையெல்லாம் போட்டு வைத்திருக்கிறீர்கள்? அதுவும் பழைய..ய்ய புத்தகம். நான் உங்களின் தி. ஜானகிராமன் புத்தகங்களை ஆழ்ந்து படித்துக் கொண்டிருக்கும் போது ரூம்மேட் பானு அந்த சூட்டுக்காயை நிலத்தில் தேய்த்து, 'சுள்'ளென்று சூடு வைத்த இடம் இன்னும் வலிக்கிறது. அந்த ஆடியோ கேஸட் கேட்க முடியவில்லை. பிழைத்தீர்கள்!

மேலும் வளையல் துண்டு, மயிலிறகு, மோதிரம், மணிமாலை... ஃபோட்டோவில் அந்தப் பெண். யார் அது? உங்கள் மனசுக்குள் இருப்பவளா? தப்பாய்க் கேட்டிருந்தால் ஸாரி..! கத்தி எதற்கு?

என் பெயர் நீலா. மெட்ராஸில் தனியாய் பஸ் ஏறி திருச்சியில் இறங்கின கொஞ்சூண்டு அழகான பெண். கவனித்திருப்பீர்கள். (வேறொன்றையும் கவனித்திருக்கலாம்.) திருச்சியில் ஹாஸ்டலில் தங்கிப் படிப்பு. முகவரி கீழே...

என் பெட்டி ப்ளீஸ்...

– நீலா.


கீழே முகவரி இருந்தது. யப்பா! ஒன்றை விட்டு வைக்கவில்லை. புரட்டி எடுத்திருக்கிறாள். எனக்கு அதனால் கோபம் வரவில்லை. அவள் ஆர்வத்தை நினைத்துப் புன்னகை வந்தது.

இன்டரஸ்டிங் கேர்ள். இவளைப் போய் ஃப்ராடு என்றெல்லாம் நினைத்தேனே! ரொம்ப வெளிப்படையான டைப் போலும்.

'நீலா' என்று ஒருமுறை சொல்லிப் பார்த்துக் கொண்டேன். அவள் முகம் முழுசாய் நினைவுக்கு வராமல் கலைந்து கலைந்து போனது. ஒரே தடவை பார்த்தது. என் பொக்கிஷத்தைத் திருப்பி என்னிடமே ஒப்படைத்தவள்.

நீலாவின் சூட்கேஸை ஒழுங்குபடுத்தினேன். என் மதிப்பான ஒரே கவிதை நோட்டை எடுத்தேன். அதன் உள் அட்டையில், 'நீலாவுக்கு... நன்றியுடன் ப்ரபாகர்' என்றெழுதி அதையும் அவள் சூட்கேஸில் வைத்தேன். ரொம்ப சந்தோஷமாயிருந்தது. சூட்கேஸை ரொம்ப சிரத்தையாய் பார்சல் செய்து அவள் முகவரி எழுதி அனுப்பி வைத்தேன்.

அப்புறம்.. அவளின் அந்தக் கடிதத்தை அழகாய் மடித்து.. என் மற்ற பொக்கிஷங்களோடு அதையும் சேர்த்து பத்திரபடுத்தி வைத்திருக்கிறேன். மற்றொரு ஞாபகச் சின்னமாய்!



"நீ லவ் லெட்டர் எழுதினதுக்கு பதில் வந்திடுச்சா, என்னன்னு...?"

"முதல்ல, தப்பு இல்லாம, தமிழ் எழுதக் கத்துக்க. அப்புறம், லவ் பண்ணலாம்ன்னு, அட்வைஸ் பண்ணிட்டா..."

— ஆர். வசந்தகுமார்

பார்த்திபன் கனவு

2. சந்திப்பு

மாமல்லபுரத்தில் கலைத் திருவிழா வழக்கம்போல் நடந்து கொண்டிருந்தது. இவ்வருஷம் சக்கரவர்த்தி திருவிழாவுக்கு விஜயம் செய்யவில்லை. சில காலமாகச் சக்கரவர்த்தி ஏதோ துக்கத்தில் ஆழ்ந்திருப்பதாகவும், அதனால்தான் கலை விழாவுக்கு வரவில்லையென்றும் ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். வேறு சிலர், சக்கரவர்த்தி கொஞ்ச காலமாகப் பல்லவ நாட்டிலேயே இல்லையென்றும், அவருடைய குமாரன் இலங்கையிலிருந்து திரும்பிய பிறகு அவனிடம் இராஜ்ய பாரத்தை ஒப்புவித்து விட்டு மாறு வேஷத்துடன் தேச யாத்திரை போயிருக்கிறார் என்றும் சொன்னார்கள்.

ஆனால், சக்கரவர்த்தியின் குமாரன் மகேந்திரனும், குமாரி குந்தவி தேவியும் இவ்வருஷம் கலைவிழாவுக்கு விஜயம் செய்திருந்தபடியால், மாமல்லபுர வாசிகள் சிறிதளவும் உற்சாகம் குன்றாமல் விழாவைச் சிறப்பாக நடத்தினார்கள்.

கலை விழாவின் காட்சிகளையும், கற்பாறைகளில் செதுக்கிய அற்புதமான சித்திரங்களையும், ஆங்காங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த இசை விருந்து, நாட்டியம், கூத்து ஆகியவைகளையும் பார்த்து அனுபவித்துக் கொண்டு கப்பலிலிருந்து இறங்கிய நமது இரத்தின வியாபாரி குறுக்கும் நெடுக்குமாகப் போய்க் கொண்டிருந்தான்.

அவனுடைய முகத்தில் அபூர்வமான கிளர்ச்சி தோன்றியது; கண்களில் அளவில்லாத ஆர்வம் காணப்பட்டது. எவ்வளவுதான் பார்த்த பிறகும் கேட்ட பிறகுங் கூட அவனுடைய இருதய தாகம் தணிந்ததாகத் தெரியவில்லை. பார்க்கப் பார்க்க, கேட்கக் கேட்க, அந்தத் தாகம் அடங்காமல் பெருகிக் கொண்டிருந்ததென்று தோன்றியது. அந்த அதிசயமான சிற்பக் காட்சிகளையும், உயிருள்ள ஓவியங்களையும் பார்க்கும் போதும், ஊனையும் உள்ளத்தையும் உருக்கும் இசை அமுதத்தைப் பருகும் போதும் அவன் அடைந்த அநுபவம் ஆனந்தமா? அல்லது அசூயையா? அல்லது இரண்டும் கலந்த உணர்ச்சியா?

இரத்தின வியாபாரிக்குப் பக்கத்தில் தலையிலும் தோளிலும் மூட்டைகளைச் சுமந்து கொண்டு ஒரு குள்ளன் போய்க் கொண்டிருந்தான். அவனுடன் இரத்தின வியாபாரி ஜாடை காட்டிப் பேசுவதைப் பார்த்தால் குள்ளனுக்குக் காது செவிடு என்று ஊகிக்கலாம். அவன் செவிடு மட்டுமல்ல - ஊமையாகக்கூட இருக்கலாமென்றும் தோன்றியது. தன்னுடைய நடவடிக்கைகளைப் பற்றி வேறு யாருக்கும் தெரியப்படுத்த முடியாமலிருக்கும் பொருட்டே நமது இரத்தின வியாபாரி அத்தகைய ஆளைப் பொறுக்கி எடுத்திருக்க வேண்டும்.

ஆமாம்; அந்த இளம் வர்த்தகனின் நடவடிக்கைகள், கவனித்துப் பார்ப்பவர்களின் உள்ளத்தில் சந்தேகத்தை உண்டு பண்ணுவனவாய்த்தான் இருந்தன. அவன் ஆங்காங்கு சிற்பக் காட்சியோ, சித்திரக் காட்சியோ உள்ள இடத்தில் சிறிது நேரம் நிற்பான். சிற்பங்களையும் சித்திரங்களையும் பார்ப்பதோடல்லாமல் பக்கத்தில் நிற்கும் சிற்பிகளையும் கவனிப்பான். அவர்களில் யாராவது ஒருவன் தனித்து நிற்க நேர்ந்தால் அவனை நெருங்கி முதுகைத் தட்டி, "உன்னிடம் ஒரு விஷயம் பேச வேண்டும்; கொஞ்சம் ஒதுக்குப்புறமாக வருகிறாயா?" என்று கேட்பான். இரத்தின வியாபாரியின் கம்பீரத் தோற்றத்தையும் களையான முகத்தையும் பார்த்த யாருக்குத்தான் அவன் பேச்சைத் தட்ட மனம் வரும்? அவன் சொற்படியே கொஞ்சம் தனியான இடத்துக்கு அவர்கள் வருவார்கள். அவர்களிடம் அவ்வர்த்தகன்

அமரர் கல்கி

கடல்களுக்கு அப்பால் தான் வசிக்கும் தேசத்தைப் பற்றியும், அந்த தேசத்தின் வளம், செல்வம் ஆகியன பற்றியும் பிரமாதமாக வர்ணிப்பான். கரிகாலச் சோழ சக்கரவர்த்தியின் காலத்தில் கடல் கடந்து சென்ற தமிழர்கள்தான் அத்தேசத்தில் வசிக்கிறார்களென்றும், அவர்களுக்குத் தாய்நாட்டிலுள்ளவை போன்ற திருக்கோவில்களும் சிற்பங்களும் இல்லையே என்ற ஒரு குறையைத் தவிர வேறு குறையே கிடையாதென்றும் எடுத்துச் சொல்வான்.

"அந்தத் தேசத்துக்கு நீ வருகிறாயா? வந்தால் திரும்பி வரும்போது பெருஞ் செல்வனாகத் திரும்பி வரலாம். அந்த நாட்டில் தரித்திரம் என்பதே கிடையாது. தெருவெல்லாம் இரத்தினக் கற்கள் இறைந்து கிடக்கும்!" என்று சொல்லி, குள்ளன் தூக்கிக் கொண்டு வந்த பையிலிருந்து ஒரு பிடி இரத்தினக் கற்களை எடுத்து அவர்களிடம் காட்டுவான்.

இரத்தின வியாபாரியின் பேச்சிலேயே அநேகமாக அந்தச் சிற்பி மயங்கிப் போயிருப்பான். கை நிறைய இரத்தினக் கற்களைக் காட்டியதும் அவன் மனத்தை நிச்சயப்படுத்திக் கொண்டு தன்னுடைய சம்மதத்தைத் தெரிவிப்பான். அப்படிச் சம்மதம் தெரிவிக்கும் ஒவ்வொருவரிடமும் பெரிய இரத்தினம் ஒன்றைப் பொறுக்கிக் கொடுத்து, "அடுத்த அமாவாசையன்று புலிக்கொடி உயர்த்திய கப்பல் ஒன்று இந்தத் துறைமுகத்துக்கு வரும். அந்தக் கப்பலுக்கு வந்து இந்த இரத்தினத்தைக் காட்டினால் கப்பலில் ஏற்றிக் கொள்வார்கள்" என்பான் நமது இளம் வர்த்தகன்.

கலைத் திருவிழா நடந்த மூன்று தினங்களிலும் இரத்தின வியாபாரி மேற்சொன்ன காரியத்திலேயே ஈடுபட்டிருந்தான். மூன்றாவது நாள் விஜயதசமியன்று அவன் வீதியோடு போய்க் கொண்டிருக்கையில் திடீரென்று எதிர்பாராத ஒரு காட்சியைக் கண்டான். (எதிர்பாராததா? அல்லது ஒரு வேளை எதிர்பார்த்ததுதானா? நாம் அறியோம்.) ஆம்; அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நங்கை முன் போலவே பல்லக்கில் சென்ற காட்சிதான்.

மூன்று வருஷத்துக்கு முன்பு பார்த்ததற்கு இப்போது அந்தப் பெண்ணின் முகத்தில் சிறிது மாறுதல் தோன்றியது. அன்றைக்கு அவளுடைய முகம் சூரியன் அஸ்தமித்த பிறகு நீலக் கடலில் உதயமாகும் பூரண சந்திரனைப் போல் பசும்பொன் காந்தியுடன் பிரகாசித்தது. இன்றோ அதிகாலை நேரத்தில் மேற்குத் திசையில் அஸ்தமிக்கும் சந்திரனைப் போல் வெளிறிய பொன்னிறமாயிருந்தது. அப்போது முகத்தில் குடி கொண்டிருந்த குதூகலத்துக்குப் பதிலாக இப்போது சோர்வு காணப்பட்டது. விஷமம் நிறைந்திருந்த கண்களில் இப்போது துயரம் தோன்றியது. இந்த மாறுதல்களினாலே அந்த முகத்தின் சௌந்தரியம் மட்டும் அணுவளவும் குன்றவில்லை; அதிகமாயிருந்ததென்றும் சொல்லலாம்.

வீதியோடு போய்க் கொண்டிருந்த இரத்தின வியாபாரி தனக்குப் பின்னால் கூட்டத்தில் ஏதோ கலகலப்புச் சத்தம் உண்டாவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். காவலர் புடை சூழ சிவிகை வருவதைக் கண்டான். அச்சிவிகையில் இருந்த பெண் தன் இருதய மாளிகையில் குடி கொண்டிருந்தவள்தான் என்பதை ஒரு நொடியில் தெரிந்து கொண்டான். அச்சமயத்தில் அவன் நெஞ்சு விம்மிற்று, கண்களில் நீர் ததும்பிற்று. இம்மாதிரி சந்தர்ப்பம் நேருங்கால் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி அவன் யோசித்து வைத்திருந்ததெல்லாம் சமயத்துக்கு உதவவில்லை. வீதி ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டான். பல்லக்கின் பக்கம் பார்க்காமல் திரும்பி வேறு திசையை நோக்கினான்.

அவன் இருந்த இடத்தைச் சிவிகை தாண்டியபோது தன்னை இரண்டு விசால

ஆனந்தம்

நாம் பெரிசாக ஆசைப்பட்டுத் தேடிப் போகாமல் அதுவாகவே வந்து கலப்பில்லாத ஆனந்தம் தருவதாகவும் சில வஸ்துக்கள் இருக்கின்றன. கொஞ்சம் விச்ராந்தியாயிருக்கலாமென்று பீச்சில் போய் உட்காருகிறோம்; அல்லது மொட்டைமாடியில் போய் உட்காருகிறோம். நமக்கு அன்று பூர்ணிமை என்று தெரியாது. ஆனால் தலையைத் தூக்கிப் பார்த்தால் பூர்ண சந்திரன் வெண்ணெய்க்கட்டி மாதிரி அழகாகத் தெரிகிறது; குளுகுளு என்று சந்திரிகையைக் கொட்டுகிறது. நாம் ஆசைப்படாமலே ஆனந்தம் கிடைக்கிறது. இந்த ஆனந்தத்துக்காக நாம் எந்தக் கஷ்டமும் படவில்லை. இதற்கு அப்புறமும் இந்த அநுபவத்தால் ஒரு கெடுதலும் வரப்போவதில்லை. எல்லாம் ஸரிதான். ஆனாலும் இந்த ஆனந்தமும் எத்தனை நாழி சாச்வதம்? அது உள்ளளவும்கூட அதாவது ராத்ரி பூரா நம்மால் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடிகிறதா? உசந்தால் ஒரு மணி பார்க்கிறோம்.



அப்புறம் அந்த ஆனந்தம் நிற்கிறதா? ஆனாலும் இன்றைக்குப் பார்த்ததில் 'ஹாபிட்' மாதிரிக் கொஞ்சம் ஏற்பட்டு விட்டது. நாளைக்கும் சந்த்ரனைப் பார்க்கிறோம். ஆனால் அது இன்று மாதிரி இல்லை. கொஞ்சம் மூளியாகத்தானிருக்கிறது. இன்று பூர்ணமாகப் பார்த்து விட்டதாலேயே நாளைக்கு மூளியாகப் பார்க்கும் போது என்னவோ போல் இருக்கிறது. 'எப்போ பூர்ணிமை வரும்? எப்போ வரும்?' என்று இன்னும் ஒரு மாஸத்துக்கு அப்புறம் அதேநாள் வருகிற வரைக்கும் ஒரு ஆசை அடித்துக் கொண்டேயிருக்கிறது. அதாவது முதலில் பூர்ணிமைக்காக ஆசைப் படாவிட்டாலும், அதைப் பார்த்து ஆனந்தப் பட்டபின் ஆனந்தமே ஆசையை உண்டாக்கி விடுகிறது. இப்படி எதிர்பாராமல் தானாகவே ரொம்ப ஆனந்தமாக வருகிறதும், பிற்பாடு அது வராதா, வராதா என்று எதிர்பார்க்க வைக்கிற ஆசையை ஏற்படுத்திவிடுகிறது. எந்த ஆனந்தமானாலும் அது நிரந்தரமாய் இருப்பதில்லையாதலால், அந்த ஆனந்தத்துக்குக் காரணமான வஸ்து ஏதோ ஒரு ஸமயத்தில் மட்டுமே நமக்குக் கிட்டுவதாய் இருந்து கொண்டு மற்ற ஸமயங்களிலெல்லாம் அதற்காக நம்மைத் தவிக்கப் பண்ணிக் கொண்டிருக்கிறது.

நல்லதில்லாததுகளைப் போலவே நல்லதின் விஷயத்திலும் இப்படியே இருக்கிறது. ஈச்வர தர்சனம் க்ஷணகாலம் கிடைத்து அவன் மறைந்து போய் விட்டானானால் அப்புறம் அந்த தர்சன ஆசை பக்தனைப் பைத்தியமாக, வெறியனாக ஆக்கிவிடுகிறது. அதை ஒரு உத்தமமான விரஹ தாபமாகச் சொல்கிறார்கள். அந்த பாவத்திலே தான் மாணிக்கவாசகர், ஸ்ரீ க்ருஷ்ண சைதன்யர் எல்லாம் கதறு கதறு என்று கதறி மூர்ச்சைபோட்டு விழுந்திருக்கிறார்கள். சென்ற நூற்றாண்டில் இப்படியே (ராமக்ருஷ்ண) பரமஹம்ஸரைச் சொல்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

மான கரிய கண்கள் கூர்ந்து நோக்குவது போல் அவனுக்கு உணர்ச்சி உண்டாயிற்று. திரும்பிப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அளவு மீறிப் பொங்கிற்று. பல்லைக் கடித்துக் கொண்டு அவன் வேறு திசையையே பார்த்துக் கொண்டிருந்தான். பல்லக்கு கொஞ்ச தூரம் முன்னால் போன பிறகுதான் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தான். பல்லக்கில் உட்கார்ந்திருந்த பெண் தன் மீது வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அடுத்த கணம் அவனுடைய கண்கள் மறுபடியும் கீழே நோக்கின.

ஆனால் பல்லக்கு மேலே போகவில்லை; நின்று விட்டது. பல்லக்குடன் போய்க் கொண்டிருந்த வீரர்களில் ஒருவன் இரத்தின வியாபாரியை நோக்கி வந்தான். அருகில் வந்ததும், "அப்பா! தேவிக்கு உன்னிடம் ஏதோ கேட்க வேண்டுமாம்; கொஞ்சம் வந்து விட்டுப்போ!" என்றான்.

இரத்தின வியாபாரி அவனுடன் பல்லக்கை நோக்கிப் போனான். அந்தச் சில வினாடி நேரத்துக்குள் அவனுடைய உள்ளத்தில் என்னவெல்லாமோ எண்ணங்கள் கொந்தளித்தன. 'இந்தப் பெண் யாராயிருக்கும்? எதற்காக நம்மை அழைக்கிறாள்? நம்மை அடையாளங் கண்டு கொண்டாளோ? அப்படியானால் இத்தனை நாளும் நம்மை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருந்ததாக ஏற்படுகிறதே? இவள் உயர் குலத்துப் பெண் என்பதில் சந்தேகமில்லை. ஒரு வேளை சக்கரவர்த்தியின் மகளாகவே இருக்குமோ? ஐயோ! அவ்விதம் இருந்து விட்டால்....!

இரத்தின வியாபாரி பல்லக்கை நெருங்கி வந்து அந்தப் பெண்ணின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். அப்பப்பா! அவளுடைய பார்வைதான் எவ்வளவு கூரியது? பெண்களின் கண்களை வாளுக்கும் வேலுக்கும் இதனால்தான் ஒப்பிடுகிறார்கள் போலும்!

ஆமாம்; குந்தவி அவனுடைய கண்களின் வழியாக அவனது இருதயத்தையே ஊடுருவி அதன் இரகசியத்தைக் கண்டு பிடிக்க விரும்புகிறவளைப் போலேதான் பார்த்தாள். இவ்விதம் சற்று நேரம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, "ஐயா! நீர் யார்? இந்த தேசத்து மனுஷர் இல்லை போலிருக்கிறதே?" என்றாள்!

"ஆம். தேவி! நான் கடலுக்கப்பால் உள்ள செண்பகத்தீவில் வசிப்பவன். இரத்தின வியாபாரம் செய்வதற்காக இவ்விடம் வந்தேன். என் பெயர் தேவசேனன்" என்று மனமனவென்று பாடம் ஒப்புவிக்கிறவனைப் போல் மறுமொழி கூறினான் இரத்தின வியாபாரி.

அவனுடைய படபடப்பு குந்தவி

தேவிக்கு வியப்பை அளித்திருக்க வேண்டும். மறுபடியும் சிறிது நேரம் மௌனமாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "எந்தத் தீவு என்று சொன்னீர்?" என்றாள். "செண்பகத் தீவு - செண்பகத்தீவு-செண்பகத் தீவு- கேட்ட ஞாபகமாய் இருக்கிறதே! அந்தத் தீவை ஆளும் அரசன் யாரோ?"

"செண்பகத் தீவின் பூர்வீக அரச வம்சம் நசித்துப் போயிற்று. சோழ நாட்டு இளவரசர் விக்கிரமர்தான் இப்போது எங்கள் அரசர்."

இவ்விதம் சொன்னபோது குந்தவியின் முகத்தில் உண்டான பிரகாசத்தை இரத்தின வியாபாரி கவனிக்காமல் போகவில்லை. அந்தத் தேசப் பிரஷ்டனை இன்னும் இவள் நினைவு வைத்துக் கொண்டுதானிருக்கிறாள்! ஆனால் இவள் யார்? இவ்வளவு முக காந்தியும் சௌந்தரியமும் உள்ளவள் ஒரு வேளை...? அத்தகைய சந்தேகமே இரத்தின வியாபாரிக்குத் திகில் உண்டாக்கிற்று.

அப்போது குந்தவி, ''நீர் இரத்தின வியாபாரி என்பதாகச் சொன்னீரல்லவா?" என்று கேட்டாள்.

''ஆம், அம்மா; இதோ இந்தக் குள்ளன் தலையில் உள்ள மூட்டைகளில் மேன்மையான இரத்தினங்கள் இருக்கின்றன. வேணுமானால் இப்போது எடுத்துக் காட்டுகிறேன்."

''இப்போது வேண்டாம், வீதியில் கூட்டம் சேர்ந்து போகும். சாயங்காலம் அரண்மனைக்கு வாரும்'' என்றாள் குந்தவி.

அரண்மனை!... இந்த வார்த்தையைக் கேட்டதும் அந்த இளம் வர்த்தகனுடைய முகமானது அப்படி ஏன் சிணுங்குகிறது?

அந்தச் சிணுக்கத்தைக் குந்தவி கவனித்தாளோ, என்னவோ தெரியாது. எதையோ மறந்து போய் நினைத்துக் கொண்டவள் போல், ''ஆமாம்; சாயங்காலம் கட்டாயம் அரண்மனைக்கு வாரும். சக்கரவர்த்தியின் குமாரி குந்தவி தேவிக்கு இரத்தினம் என்றால் ரொம்பவும் ஆசை. கட்டாயம் உம்மிடம் வாங்கிக் கொள்வாள். ஒரு வேளை இந்த மூட்டையிலுள்ள இரத்தினங்கள் அவ்வளவையும் வாங்கிக் கொண்டாலும் வாங்கிக் கொள்ளலாம்'' என்றாள்.

இரத்தின வியாபாரி பெருமூச்சு விட்டான். மனத்திலிருந்த பெரிய பாரம் ஏதோ ஒன்று நீங்கியவன் போலத் தோன்றினான்.

''அப்படி எல்லாவற்றையும் ஒரே இடத்தில் விற்றுவிட வேண்டுமென்ற ஆசை எனக்கில்லை. இந்தத் தேசத்தில் இன்னும் பல இடங்களையும் சுற்றிப் பார்க்க விரும்புகிறேன். உங்களுக்கு வேண்டிய இரத்தினங்களை நீங்கள் வாங்கிக் கொண்டால் போதும்'' என்றான்.

''அதற்கும் நீர் அரண்மனைக்குத்தான் வந்தாக வேண்டும். கட்டாயம் வருகிறீரா?''

''வருகிறேன்; ஆனால் அரண்மனைக்குள் வந்து யார் என்று கேட்கட்டும்?''

''குந்தவி தேவியின் தோழி மாதவி என்று கேட்டால் என்னிடம் அழைத்து வருவார்கள்."

''தடை ஒன்றும் இராதே?''



"ஒரு தடையும் இராது. இருக்கட்டும். இப்படி நீர் இரத்தின மூட்டைகளைப் பகிரங்கமாக எடுத்துக் கொண்டு சுற்றுகிறீரே! திருடர் பயம் இல்லையா உமக்கு?"

"நன்றாகக் கேட்டீர்கள்! நரசிம்ம பல்லவ சக்கரவர்த்தியின் ஆட்சியில் திருட்டுப் பயமும் உண்டா?" என்றான் இரத்தின வியாபாரி.

குந்தவி புன்னகையுடன், "அப்படியா? எங்கள் சக்கரவர்த்தியின் புகழ் அப்படிக் கடல் கடந்த தேசங்களில் எல்லாம் பரவியிருக்கிறதா? சந்தோஷம். நீர் சாயங்காலம் அவசியம் அரண்மனைக்கு வருகிறீர் அல்லவா?" என்று கேட்டாள்.

"கட்டாயம் வருகிறேன்" என்றான் வியாபாரி.

பிறகு, குந்தவியின் கட்டளையின் பேரில் பல்லக்கு மேலே சென்றது. இரத்தின வியாபாரி நின்ற இடத்திலேயே நின்று பல்லக்கு ஜனக்கூட்டத்தில் மறையும் வரையில் அந்தத் திசையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன அப்பா? எத்தனை நேரம் ஒரே பக்கம் பார்ப்பாய்? கண்விழி பிதுங்கப் போகிறது" என்று ஒரு கடூரமான குரலைக் கேட்டு அந்த இளம் வர்த்தகன் திடீரென்று காலால் நெருப்பை மிதித்தவன் போல்



The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil Weekly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication : Madras
2. Periodicity of Publication : Weekly
3. Name of Printer : V. Murali
   Nationality : Indian
   Address : AA-117, Shanthi Colony, Anna Nagar, Madras - 600 040.
4. Name of Publisher : V. Vaidyanathan
   Nationality : Indian
   Address : 6-A, Warren Road, Mylapore, Madras - 600 004
5. Name of Editor : Seetha Ravi
   Nationality : Indian
   Address : 5, III Seaward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Madras - 600 041

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.1995

V. Vaidyanathan
Publisher

துள்ளித் திரும்பிப் பார்த்தான். ஒரு கருநிறக் குதிரைமேல் சாக்ஷாத் மாரப்ப பூபதி அமர்ந்து தன்னை ஏளனப் பார்வையுடன் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

3. மாரப்பன் புன்னகை

விக்கிரமன் செண்பகத்தீவில் இருந்த காலத்தில் தாய் நாட்டையும், தாய் நாட்டில் உள்ளவர்களைப் பற்றியும் அடிக்கடி சிந்தனை செய்வான். அருள்மொழி, சிவனடியார், பொன்னன், வள்ளி, காஞ்சி நகர்ப் பெண் ஆகியவர்கள் அவனுடைய உள்ளத்தில் இடைவிடாமல் தோன்றுவார்கள். அவர்களுக்கிடையில், மாரப்ப பூபதியும் சில சமயம் அவனுடைய நினைவுக்கு வருவான். அப்போது விக்கிரமனுடைய உள்ளமும் உடலும் அருவருப்பினாலும் அவமானத்தினாலும் கருங்கிப் போகும். சித்தப்பா தன்னை வஞ்சித்து நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டாரென்று சிராப்பள்ளி மலையில் அவன் புலிக் கொடியை உயர்த்த முயன்ற அன்றைத் தினமே வெளியாகிவிட்டது. அந்த முயற்சிக்கு மாரப்ப பூபதி பூரண உதவி செய்வதாய் வாக்களித்திருந்ததற்கு மாறாக அவர் அச்சமயம் அருகில் வராமலே இருந்து விட்டது மாத்திரமில்லை, - அவரே முன்னதாகப் பல்லவ சேனாதிபதிக்குத் தகவல் தெரிவித்தவர் என்பதும் அவனைச் சிறைப்படுத்திக் காஞ்சிக்குக் கொண்டு போன வீரர்களின் பேச்சிலிருந்து தெரிந்து விட்டது.

ஆகையால், மாரப்ப பூபதியைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் விக்கிரமனுடைய உள்ளம் கசந்ததோடு, நாவும் கசந்தது. சோழ வம்சத்தில் இப்படிப்பட்ட மனிதர் ஒருவரும் பிறந்ததை எண்ணி எண்ணி அவன் மனம் குன்றினான்.

இவ்வாறு அவனுடைய அருவருப்புக்கும் அவமான உணர்ச்சிக்கும் காரணமாயிருந்த மாரப்ப பூபதி, இப்போது சற்றும் எதிர்பாராத சமயத்தில் திடீரென்று எதிரில் நின்றதும், விக்கிரமனுக்கு எப்படியிருந்திருக்குமென்று சொல்லவும் வேண்டுமா?

இரத்தின வியாபாரியின் முகத்தில் தோன்றிய திகைப்பை மாரப்ப பூபதி கவனித்தவனாய், "ஏனையா இப்படி மிரளுகிறீர்? ஏதோ திருடனைப் பற்றிப் பேச்சு நடந்ததே? ஒருவேளை நான்தான் திருடன் என்று நினைத்துக் கொண்டீரோ?" என்று சொல்லி மீண்டும் ஏளனச் சிரிப்பு சிரித்தான்.

இதற்குள் விக்கிரமன், ஒருவாறு சமாளித்துக் கொண்டு விட்டான்.

"இந்த நாட்டுத் திருடர்கள் எப்படியிருப்பார்கள் என்று எனக்குத் தெரியாது, ஐயா! நான் இந்த நாட்டான் அல்ல. ஆனால் நரசிம்ம சக்கரவர்த்தியின் ஆட்சியில் திருட்டுப் புரட்டே கிடையாதென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகையால் நீர் திருடராயிருக்க முடியாது" என்றான்.

"அசலூர்க்காரனாயிருந்தாலும் அகம்பாவத்தில் மட்டும் குறைச்சல் இல்லை. நீர் எந்தத் தேசம், ஐயா? உமது பெயர் என்ன? எதற்காக இந்த நாட்டுக்கு வந்திருக்கிறீர்?" என்று பூபதி கேட்டான்.

"உமக்குத் தெரிந்தேயாக வேண்டுமானால் சொல்கிறேன். என் பெயர் தேவசேனன்; இரத்தின வியாபாரம் செய்ய வந்திருக்கிறேன்."

"ஓகோ! இரத்தின வியாபாரம் செய்வதற்கா வந்திருக்கிறீர்? அப்படியா சமாசாரம்? இரத்தின வியாபாரி ஒவ்வொரு கல் தச்சனாகக் கூப்பிட்டு எதற்காக இரகசியம் பேச வேண்டும்? பல்லவ நாட்டிலிருந்து சிற்பிகளைக் கலைத்து அழைத்துப் போகிறவர்களுக்கு நரசிம்ம சக்கரவர்த்தி என்ன தண்டனை விதிப்பார் தெரியுமா?"

"எனக்குத் தெரியாது! ஐயா! நான்தான் அயல் நாட்டான் என்றேனே? இவ்வளவு விசாரணை புரியும் நீர் யார் என்று எனக்குத் தெரியவில்லையே?"

மாரப்ப பூபதி கடகடவென்று சிரித்தான். "நான் யார் என்று தெரியவில்லையா? நல்லது; வெண்ணாற்றங்கரைப் போர்க்களத்தில் உயிரைவிட்ட பார்த்திப மகாராஜாவுக்கு உடன் பிறந்த சகோதரன் நான்! தற்சமயம் சோழ நாட்டின் பிரதம சேனாதிபதி...!"

இப்படிச் சொல்லிய போது இரத்தின வியாபாரியின் முகத்தில் ஏதாவது மாறுதல் தெரிகிறதா என்று மாரப்பன் உற்றுப் பார்த்தான். ஒன்றும் தெரியாமல் போகவே, "என்னுடைய கீர்த்தி உம்முடைய காதுக்கு எட்டிவிராவிட்டாலும், வீராதி வீரரும் சூராதி சூரருமான பார்த்திப மகாராஜாவின் புகழ் கண்டிப்பாக எட்டியிருக்க வேண்டுமே? அந்தப் பெயரைக் கூட நீர் கேட்டதில்லையா? அப்படி எந்தக் கண்காணாத தேசத்து மனுஷர் ஐயா நீர்?" என்று கேட்டான்.

இரத்தின வியாபாரி சற்று யோசிப்பவன் போல் காணப்பட்டான். பிறகு அவன் மாரப்பனை ஏறிட்டுப் பார்த்து, "ஆமாம், பார்த்திப மகாராஜாவின் புகழை நிச்சயம் கேள்விப்பட்டிருக்கிறேன். அவருடைய புதல்வர் விக்கிரமர்தான் இப்போது எங்கள் செண்பகத் தீவுக்கு அரசர். நான் அவருடைய பிரஜை. ஆகையால் பார்த்திப மகாராஜாவைப் பற்றிக் கெடுதலாகவோ பரிகாசமாகவோ எதுவும் என் காது கேட்கச் சொல்ல வேண்டாம்!" என்றான்.

மாரப்பனுடைய முகத்தில் இப்போது சிறிது திகைப்புக் காணப்பட்டது. ஆயினும் அவன் உடனே சமாளித்துக் கொண்டு கூறினான்:- "ஓஹோ! அவ்வளவு ராஜபக்தியுள்ள பிரஜையா நீர்? உம்முடைய முகத்தில் விழித்தாலே புண்ணியம், ஐயா! அதனால்தான் உம்மை விட்டுப் போகவே மனம் வரமாட்டேன் என்கிறது. ஆமாம், உமது பெயர் என்னவென்று சொன்னீர்?"

"தேவசேனன்."

"தேவசேனன் - ஆகா! என்ன திவ்யமான பெயர்! - இவ்வுலகில் பெயர், புகழ் எல்லாம் பொய் என்று சொல்வது எவ்வளவு பிசகு? உம்முடைய பெயருக்காகவே உம்மிடம் இரத்தினம் வாங்கலாம். இருக்கட்டும்; கோமகன் குந்தவி தேவி இரத்தினம் வாங்குவதற்குத்தானே உம்மை அரண்மனைக்கு வரச் சொல்லியிருக்கிறார்கள்?"

"கோமகள் குந்தவி தேவியா? யாரைச் சொல்கிறீர்?" என்று இரத்தின வியாபாரி உண்மையான வியப்புடனே கேட்டான்.

"இப்போது பல்லக்கில் போனாளே, அந்தத் தேவியைத்தான்!"

"அவள் குந்தவி தேவியின் தோழி மாதவி அல்லவா?"

"ஓஹோ! உன்னிடம் அப்படி ஒரு பொய் சொல்லி வைத்தாளாக்கும். அப்பாவுக்கு ஏற்ற பெண்தான். நீ இந்தத் தேசத்து மனுஷன் அல்லவென்று நிச்சயமாய்த் தெரிகிறது. அல்லது இந்தத் தேசத்தைவிட்டு வெளியேற்றப் பட்டவனாயிருக்க வேண்டும்...."

இந்த இடத்தில் மாரப்பபூபதி தனக்குத் தானே பேசிக் கொண்டான். பிறகு திடீரென்று தேவசேனனை உற்றுப் பார்த்து, "ஆமாம்; உங்கள் தேசத்து ராஜா விக்கிரமன் என்று சொன்னீரே? அவனுடைய தாயார் அருள்மொழி ராணிக்கு நேர்ந்த விபத்தைப் பற்றி அவனுக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

இந்தக் கேள்வியினால் மாரப்பபூபதி என்ன எதிர்பார்த்தானோ. அது சித்தியாகிவிட்டது. இத்தனை நேரமும் மாறாமல் பதுமை போலிருந்த இரத்தின வியாபாரியின் முகம் மாறிவிட்டது. அளவிலாத பீதியுடனும் ஆத்திரத்துடனும், "என்ன? அருள்மொழி ராணிக்கு என்ன?" என்று அவன் அலறிக் கொண்டு கேட்டான்.

மாரப்பன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

அதே சமயத்தில், அவர்களுக்குப் பின்னால் வெகு சமீபத்தில் ஒரு பெரும் கோலாகல கோஷம் எழுந்தது. "வாதாபியை அழித்து வாகை சூடிய நரசிம்ம பல்லவேந்திரர் வாழ்க!" "ஜய விஜயீ பவ!" என்று ஏக காலத்தில் அநேகம் குரல்களிலிருந்து வாழ்த்தொலிகள் கிளம்பி ஆரவாரித்தன. "சக்கரவர்த்தி வருகிறார். சக்கரவர்த்தி வருகிறார்" என்று பலர் பேசுவது காதில் விழுந்தது.

(தொடரும்)

"காணாமல் போன ஃபைல் கிடைச்சுட்டதாமே!"

"ஆமாம்... நாற்காலி ஆடுதுன்னு யாரோ அண்டக் கொடுத்து வச்சிருந்தாங்க!"

— கே.வி.



என் கடவுளுக்கு நைவேத்தியம் காட்டி சாப்பிட வேண்டும்?



- ஒவ்வொரு பதார்த்தத்திலும் ஜீவனுண்டு. அதையறுத்து சமைப்பதனால் தோஷம் உண்டாகின்றது. அவைகளை கடவுளுக்கு ஆராதனைசெய்து சாப்பிட்டால் அந்த தோஷம் நிவாரணையாகும்.
- யஞ்ஞத்தினால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள், சந்தோஷமடைந்து இஷ்ட்டமான போகங்களைக் கொடுப்பார்கள். ஆதலால் நீங்கள் சாப்பிடுவதற்குமுன் அன்னமும் பதார்த்தங்களும் கடவுளுக்கு காட்டி ஆராதனை செய்து அந்த சேஷத்தைச் சாப்பிடவேண்டும்.
- இந்திராதி தேவதைகளும் ஜனங்களுக்கு ஜீவனார்த்தமாகிய பதார்த்தங்களைக் கொடுப்பதற்கு மழையைப் பெய்விக்கப் பகவானால் நியமிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் அவர்களால் விளைவித்துக் கொடுக்கப்பட்ட பதார்த்தங்களை மறுபடியும் அவர்களுக்கு அர்ப்பணம் செய்வதனால் அவர்களை சந்தோஷித்து மறுபடியும் பிரதி வருஷங்களிலும் மழையை விருத்து செய்து கொண்டே வருவார்கள். அதனால் ஜனங்கள் க்ஷேமமாய் விருத்தியடைவார்கள்.

ஆதாரம்: ஜீவப்ரஹமைத்ய வேதாந்த ரஹஸ்யம்

ஆகையால் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும்.

திருமண வைபவங்களுக்கு சீர் முறுக்கு, சீர் அதிரசம், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால் அப்பம் முதலியவை வழங்கப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2-வது மெயின் ரோடு காந்தி நகர், அடையாறு
சென்னை-20 போன் : 412557

Ad-Ventures

பாட்டு பாடவா

ஆஹா!

1. காமிரா : கலக்கல். ஒவ்வொரு ஃபிரேமுக்கும் ஒரு பூங்கொத்து தரலாம்!

2. கலை : அசத்தல். அழகுணர்ச்சியுடன் செயல்பட்டிருக்கிறார்கள்.

3. காஸ்டியூம்ஸ் : எல்லா இடத்திலும் ஜோர்! ஆனால், குடும்ப விஷயம் பேசுவதென்றால் ஹீரோயின் உடனே புடைவை கட்டியே ஆக வேண்டுமா?

4. லாவண்யா : மிஸ் இந்தியா ரேஞ்சில் ஒரு கதாநாயகி! இயல்பான நடிப்பு. (கொஞ்சம் அழவும் கற்றுக் கொண்டால் தாய்மார்களை அசத்திவிடலாம்.)

5. இசை : இசையென்னும் இன்ப வெள்ளத்தில் நீந்த வைத்திருக்கிறார் ராஜா. (வெற்றிகரமான இரண்டாம் அத்தியாயம்... ஆரம்பமா?)

ஊஹூம்!

1. கதை : காதலை யார் விட்டுக் கொடுப்பது என்று அண்ணன் - தம்பிக்குள் ஒரே பாசப் போட்டி. எத்தனை முறை பார்த்தாச்சு!

2. எஸ். பி. பி. : திரும்பத் திரும்ப உடம்பு குண்டாயிருப்பதாகக் கிண்டல் செய்யப்படும் ரோல்களில் நடிக்கணுமா?

3. அனாவசியமாய் ஒரு சண்டை.

ஒரு ஊஹூம் கதையை வைத்துக் கொண்டு ஆஹா சொல்லும்படி திரைக்கதை அமைத்தது பி. ஆர். விஜயலட்சுமியின் வெற்றிதான்.

- துளசி



களிப்பு

காலையில் எழும் போதே மனசுக்குள் பொறி தட்டியது. சரஸ்வதி பக்கத்தில் கையைத் துழாவினாள். பூந்துவாலையாய் ஷ்யாம் கையில் பட்டான். இன்றைக்கு இவனைப் பிரிய வேண்டும். மூன்று மாத விடுமுறை முடிந்து, மறுபடியும் வேலைக்குப் போக வேண்டும்.

சந்துரு இருந்திருந்தால் இப்படியொரு நிலை வந்திருக்காது. என்ன ஒரு சந்தோஷமான வாழ்க்கை! எப்படி முடிந்து போனது? ஸ்கூட்டரின் சக்கரம் மட்டும் முழுசாய்... எல்லாமே நைந்து கிடந்தது. எல்லாமே.... சந்துருவும், சந்தோஷமும். மிஞ்சின சந்தோஷத்துளி ஷ்யாம். வயிற்றில் மூன்று மாசம்.

அதனாலேயே மாமியார் அவனை வெறுத்தாள். 'எம் மகனைக் கொன்ன படு பாவி. பிறக்கும் முன்னயே விழுங்கிட்டான்' என்று கரித்தாள். ஒரு நிமிடத்தில் அவளை, புகுந்த வீட்டை விட்டொழியலாம். ஆனால் எங்கே போக? மூன்று வயசு வந்த பெண் பிள்ளைகளோடு லாட்டரி அடிக்கும் அப்பா விடமா? முடியாது. எனவே எல்லாமே பொறுத்துப் போக வேண்டும்.

“நீ வேலைக்குப் போனா என்னால இவனைப் பாத்துக்க முடியாதும்மா.”

“பார்த்துக்க வேணாம். நா, ஒரு ஆள் வச்சுக்கறேன்.”

“முடியாதும்மா. அது அவனையும் பாத்துக்கற மாதி ஆயிடும். இந்த சனியன க்ரெஷ்ல விட்டுடு.”

“இது சனியன் இல்ல அத்தை. உங்க சந்துருவோட.....”

“ஷ்... எம்மகன பிரிச்ச சனி!”

அதற்குமேல் அவளிடம் பேச முடியாது. க்ரெஷில் விடவா? மூன்று மாச சிசுவையா? சரியாய்த் தலைநிற்காத தருணத்திலா? பேசாமல் இன்னும் கொஞ்ச நாள் லீவ் போடலாமா? முடியாது, பாதிச் சம்பளம் அடியாகிவிடும். ஷ்யாமுக்காக சேமிப்பு அவசியம். மிக அவசியம்.

பஸ் பிடித்து அப்பா வீட்டுக்குப் போனாள். செண்பகா வளர்ந்திருந்தாள். இவள் பார்த்துக் கொள்வாளா?

“மாவு, பாட்டில் எல்லாம் கொண்ணாந்துடறேன். சரியா?”

“கட்டாயமா நான் பாத்துக்கறேன்க்கா.”

சொல்லும் போது மனசில் சந்தோஷம் பொங்கிற்று.

வீட்டுக்கு வந்ததும் மாமியார் கேட்டாள்.

“க்ரெஷா?”

“இல்ல. செண்பகா பாத்துக்கறேன்னா.”

“அங்கேயே விடப் போறியா?”

“இல்ல. சாயங்காலம் வர்றச்ச கூட்டிட்டு வந்துருவேன்.”

“கஷ்டமில்லயா உனக்கு?”

“நீங்க பாத்துக்கறேங்கறீங்களா?”

அவள் மௌனமானாள். அதற்குப் பிறகு பேச்சுக் கூட குறைந்த மாதிரியிருந்தது.

காலையிலேயே ஷ்யாமைக் குளிப்பாட்டி சாம்பிராணி போட்டு லாக்டோஜன், பேரக்ஸ் ப்ளெயின் என்று எடுத்து வைத்துக் கொண்டது சிரமமாகத்தானிருந்தது. செண்பகாவிடம் பத்துத் தடவை லாக்டோஜன் கலக்குவதைச் சொன்னாள்.

“சரிக்கா, கவலைப்படாதே!”

படாது எங்கு இருக்க முடிகிறது? இந்த துருதுரு கண்ணையும் புஷ்டியான பிஞ்சுக் காலையும் பிரிய மனசில்லையே! சந்துரு.... நீ இருந்திருந்தால் சத்தியமாய் நான் வேலைக்குப் போக மாட்டேன். அத்தனை இறுக்கமும் உடைய, சரஸ்வதி அழுதாள்.

“சொ... நம்பிக்கை இல்லையாக்கா எம்மேல?”

“இல்ல. பிள்ளை பாத்துப் பழக்கமில்லையே.”

“நீ மட்டும் பழக்கப்பட்டவளா?”

அப்பா - கடைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தவர் - நின்றார்.

“இங்க வந்து இருந்துடேன் சரஸ்வதி?”

“முடியுமாப்பா?”

“கஷ்டமில்லம்மா.”

“செண்பகா கல்யாணம் தடைப்படலாம்.”

“அதெல்லாம் அந்தக் காலம் சரஸ்வதி.”

“யோசிக்கலாம்பா.”

இன்னுமொரு பத்து தடவை செண்பகாவுக்குச் சொல்லித் தந்தாள்.

“அடிக்கடி கக்குவான்டி. பத்திரம்.”

மனசில்லை. மனசில்லை. இருந்தும்

புறப்பட்டாள். ஆபீஸில் வேலை காத்திருந்தது. மனசுக்குள் ஷ்யாம். பாலை முழுசாக நிப்பிளில் கொண்டு வராது கொடுப்பாளா? பிள்ளைக்குப் புரையேறுமே? பார்த்துக் கொள்வாளா? மத்யான லஞ்ச் அவரில் போய் விடலாமா?

"என்ன? என்ன விஷயம் சரசு? ஏன் பதர்றே?"

"ஷ்யாமை...."

"க்ரெஷா?"

"இல்ல. செண்பகா பாத்துக்கறா?"

"என் மக என் மாமியார்ட்ட இருக்க மாட்டா. க்ரெஷ் ஆயாட்ட இருப்பா. என் மாமியாரோட குணம் என் மகளுக்குச் சின்னதுலயே தெரிஞ்சிப் போச்சு." பெரிதாய் காமினி சிரித்தாள்!


பெரிதாய் அவள் சிரிக்க, பெரிதாய் பயம் வந்தது.

'பேசட்டும் அத்தை!'

அப்பா பேசமாட்டார். போய் விடுவார். அவர் சொல்வது போல அவருடனே போய் இருக்கலாம். இந்த மாதிரி பேச்சுக் கேட்க வேண்டாம்.

மத்யானத்துக்கு மேலே தாங்க முடியவில்லை. முதல் நாளே லீவா என்பது போல மானேஜர் பார்த்தார்...

"ப்ளீஸ் சார்! குழந்தை..." கண் கலங்கிற்று. எப்படியிருக்கிறானோ? மார்பில் பால் முட்டிற்று. இப்படியொரு அவஸ்தையிலா எல்லோரும் பிள்ளையை விட்டுவிட்டு வேலைக்குப் போய் வருகிறார்கள்?



இதை நினைத்துப் பார்க்கவில்லை. நினைத்துப் பார்த்திருந்தால் முன்னமே ஒரு நாள் விட்டிருந்திருக்கலாம். புருஷன் இறந்து ஒரு வருஷத்துக்குள் அடிக்கடி புகுந்த வீட்டுக்குக் கூட மாமியார் விடவில்லை. மாமியார் குணம் தெரிந்து, அப்பாவும் அவ்வப்போது தான் எட்டிப் பார்ப்பார். வந்தவுடனேயே குறைகள் எழும்.

'சந்துரு போய் ஒரு வருஷமாகலே. அதுக்குள்ள சரசு பொட்டு வச்சிக்கறா!'

'.....'

'நீங்க சொல்லப்படாதா?'

'.....'

'நாலுபேர் நாலு விதமா பேசமாட்டாங்க?'

எப்படி? பஸ் தெய்வமாய் வந்தது. வீடு கிட்டே வரவர, ஷ்யாமின் அழுகைச் சத்தம் கேட்கிறதா என்று துடித்தது. வீட்டுக்குள் நிசப்தம். கதவைத் தட்டினதும் செண்பகா திறந்தாள்.

"பிள்ளை...."

"ஷ்... கத்தாதே... தூங்கறான்."

"அழுதானா?"

"இல்ல. பாலுக்காக அழுதான். அதுக்கு முன்னாலயே நீ சொன்ன டயமுக்கு கலக்கி வச்சிட்டேன். உடனே கொடுத்திட்டேன்க்கா. ஏன் மதியமே வந்துட்டே? தலைவலியா?"

"இல்ல...." நெஞ்சு படபடப்பு அடங்கவில்லை. ஷ்யாமை நெஞ்சோடு அள்ளினாள்.

"நான் சரியாப் பாத்துக்க மாட்டேனோன்னு பயமாக்கா?"

செண்பகாவின் கை தோளில் விழுந்தது. அந்த ஆதரவு மனசை இளக்க, கண் கலங்கிற்று.

"பழகிடும்க்கா."

சரஸ்வதி சிரித்தாள்.

தமயந்தி

கி.ராஜேந்திரன்

இனி போலீஸ் உத்யோகம் பார்க்க முடியாது என்று தெரிந்த பிறகு, எங்கே போவது, என்ன செய்வது? லைப்ரரி? கிளப்? சினிமா? எதிலே மனம் லயிக்கப் போகிறது? வீடே கதி என்று ஃபிளாட்டுக்கு வந்து சேர்ந்து கதிரி போட்டான்; ஹூட்ஹூரம் புரட்டினான். உள்ளம் அழுது கொண்டிருக்க எது ரசிக்கும்?

ஃபோன் எடுத்து நளின் காரியாலய நெம்பர் தட்டி, "மே ஐ...?"

"ஹூ இஸ் காலிங்?"

"ஹர் ஹஸ்பண்ட்..."

"ஹாய்" என்று அவள் குரல் ஒலிக்க, "வீட்டுக்கு வா, வரியா? உடனே?"

"வரேன், தொண்ணூத்தொன்பது பர்சண்ட். முடியலேன்னா ஃபோன் பண்றேன்" என்றாள்.

பர்மிஷன் கேட்டு, லீவு எழுதிக் கொடுத்து, ஸ்கூட்டி ஸ்டார்ட் செய்து வந்து சேர இருபத்தைந்து நிமிஷம் பிடிக்கும். ஆறு தடவை கையைச் கட்டுக் கொண்டு, டிகாக்ஷன் இறக்கி, பால் சுட வைத்து, கலந்தபோது வாசல் கதவு, சாவியில் கிளிக்கித் திறந்தது.

''ம்ம்ம்ம்'' – மணத்தை நுகர்ந்து, "ஒரு வேளை மட்டுமே காப்பி உத்தரவு என்ன ஆச்சு?" என்று சிரித்தாள்.

"சிரிக்காதே!" என்று கத்தினான்.

நளினி முகம் மொட்டாக, அவனை நெருங்கி, தோளில் அழுத்தமாய்க் கைபதித்து, முதுகில் தலை சாய்த்தாள்.

"ஸாரி, நான் ஊகிச்சிருக்கணும். ஏதோ பேட் நியூஸ் இல்லேன்னா ஃபோன் பண்ணி வரவழைச்சிருக்கப்போறதில்லே!"

டைனிங் டேபின் முன் காப்பி கோப்பைகளுடன் அமர்ந்து, இருகரங்கள் அருந்த இருகரங்கள் பின்னிக் கொண்டன.

"வேலை போயிடுச்சு."

அவன் உள்ளங்கையைக் கன்னத்தில் வைத்து அரை நிமிட மௌனத்துக்குப் பிறகு, "நிஜமா சொல்லுங்க, நீங்க எதிர்ப்பார்க்கலையா?"

தலை ஆட்டினான்.

"அப்ப ஏன் இத்தனை கோபம்?"

"அநீதி என்பதால். உத்யோகம் முக்கியமில்லே; இது இல்லாட்டா இன்னொண்ணு. நான் கடமையைச் செய்தேன். அதுக்குப் பாராட்டு கிடைக்காட்டா பரவாயில்லே; தண்டனை கிடைக்குதே!"

''இன்றைய இந்தியா இப்படித்தான் இருக்கு. உங்களுக்குத் தெரியும்தானே?"

"அதனால்தான் கோபம் ஜாஸ்தியாறது. அசத்யமேவ ஜயதேங்கிறதை எப்ப மாத்தி அமைக்கிறது?"

"நம்ம கொள்ளுப் பேரங்க காலத்துல...?"

"முடியாது. இன்னிக்கு, இப்பவே!"

"உங்களால என்ன செய்ய முடியும்? அதிகார பலமும் இல்லே."

"என்னை மேலும் சோர்வடையச் செய்ய உன்னை வரச் சொல்லலே."

அவள் பெருமூச்சுவிட்டாள். பின்புறமாக வந்து அவன் நெஞ்சில் கைகள் பதித்து,



“திரும்பத் திரும்ப ஸாரி சொல்றதுல அர்த்த மில்லே. ஐ வில் ஹெல்ப் யூ” என்றாள்.

“'எப்படி உதவப் போறே?”

“அலசுவோம். நடந்தது என்ன? ரெண்டு புலிகள் வராங்க; மந்திரி வீட்டு மதில் ஏறி குதிக்கிறாங்க...”

“மந்திரி சின்னவீடு செட்அப் பண்ணை ணும்னு கூட நினைக்கலே. கவர்மெண்ட் பங்களாவிலேயே தன் மனைவி பார்த்துக் கிட்டு இருக்கிறப்பவே ஸ்டெப்னியோட பெட்ரூமுக்குள் போய் கதவு சாத்திக்கிறார். மாண்பு மிகுன்னு நிரூபிக்கிறார்!”

“நீங்க தேடிப் போன புலிகள் மாயமாய் மறைஞ்சுடறாங்க... எனக்கு என்ன தோணுதுன்னா...”

“சொல்லு.”

“மையப்புள்ளி, மந்திரி மனைவி.”

ராஜ்கமல் மனத்தில் மின்னல்களாக சாத்தியக் கூறுகள் பளிச்சிட்டன. கண்கள் மீண்டும் ஒளி பெற,

நளினியின் உள்ளங்கைகளை அள்ளி எடுத்து முத்தமிட்டான்.

ஃபோன் எடுத்து நெம்பர்கள் அழுத்தி, “சௌந்தர், ஐ நீட் யுவர் ஹெல்ப்” என்றான்.

“யூ ஆர் அண்டர் ஸஸ்பென்ஷன் பிரதர்!”

“அதனால்தான் ‘ஹெல்ப்’கேட்கிறேன் இல்லாட்டா ‘உத்தரவு’ போட மாட்டேனா?”

“கரெக்ட்தான்! சொல்லு. சாத்தியப் படுமா பார்க்கிறேன்.”

“சாத்தியப் படாததைக் கேட்க மாட் டேன். மந்திரி மாரிசாமியின் அஃபிஷியல் மனைவியோட பின்னணி வேணும்.”

“ஒரு மணி நேரம் டயம் கொடு; வீட்டில தானே இருக்கே!”

“ஆமாம். அரை மணி தரேன்.”

முப்பத்திரண்டாவது நிமிஷம் சௌந்தர் ஃபோன் செய்தான்: “பேரு காந்திமதி. திருச்சி. விவசாயக் குடும்பம். 1988ல் பதி னெட்டு வயசில் கல்யாணம். மனைவி வந்த முகூர்த்தம்தான் மாரிசாமி அரசியலில் முன்னேறி,



தலைமையின் நம்பிக்கை பெற்று, தேர்தல்ல வெற்றி அடைஞ்சு மந்திரியா னார்னு மாரிசாமியின் பெற் றோர் நம்பறாங்க. அதனால காந்திமதிகிட்ட ரொம்பப் பிரியம். அவ சீதாலக்ஷ்மி கல்லூரியிலே படிச்சுக்கிட்டிருக் கிறப்ப கல்யாணம் நடந்துச்சு. அத்தோட காலேஜுக்கு முழுக்கு. போஸ்டல் டிகிரி வாங்க நினைக்க, அதுல இழுபறி. இன்டரஸ்ட் போயி டுச்சு. குழந்தைகள் இல்லே. ஃப்ரெண்ட்ஸ் ரொம்ப குறைச் சல். வெளியே போறது கிடை யாது. மந்திரி அழைச்சுப் போக வும் மாட்டார். வேறென்ன வேணும்?”

“போதும், தாங்க்ஸ்.”

நளினியிடம் திட்டம் விவரிக்க, “நான் ரெடி.”



அவமானம்!

காந்தி சிலை
கவிழ்ந்தது தலை
மந்திரி
மாலை இட்டதால்
-பொன். குமார்.

என்றான். ''மாரிசாமி வீட்டு ஃபோன் நெம்பர் என்ன?''

"அந்த ஃபோன் லைன போலீஸ்ல டாப் செய்திருப்பாங்க, டேஞ்சர். அவ ஃபோனுக்கு வரவும் மாட்டா. சுலபமா தட்டிக் கழிச்சுடுவா."

''நேர்லயே போறேன். இப்பவே புறப்படறேன். மந்திரி கோட்டைக்குப் போயிருப்பார். தனியாதான் இருப்பா.''

அவன் அவள் தோள்களைப் பற்றினான். "ஜாக்கிரதையா இருப்பியா? மாரிசாமி ரொம்பப் பொல்லாதவன்."

அவள் இலேசாகச் சிரித்து ''எப்படி ரோல் மாறுது பார்த்தீங்களா?'' என்றாள். "பெண்டாட்டியை இப்படி பயன்படுத்தறோமேன்னு நினைக்காதீங்க. உங்களுக்கு உதவுறது எனக்குப் பெருமைதான்'' என்று கன்னம் தட்ட, அவன் மலர்ந்தான்.

"கிரீச் கிரீச்'' என்று ஏகச் சத்தம் கேட்க, ஜன்னல் வழியே பார்த்தார்கள். இரண்டு பூனைகள் மதில்மேல் நின்று, ஒன்றைப் பார்த்து ஒன்று பற்களைக் காட்டி, மீசை உயர, கருவிக் கொண்டிருந்தன. ஜிவ்வென்று உடல்கள் சிலிர்த்து, முடிகள் நெட்டுக்குத்தாய் நின்றன. ஒரு கட்டத்தில் உறுமல் நின்று, ஒன்றன் மீதொன்று பாய்ந்து பிராண்டிக் கொண்டு உருண்டு விழ, கீழ் ஃபிளாட்டில் குடியிருந்தவர், "சூ"என்று விரட்டி ஒரு காலி தகரடப்பா வீச, ஓடிப் போயின.

"நல்ல சகுனம்!" என்று சொல்லி மாறாத புன்னகையுடன் மறைந்தாள் நளினி.

மந்திரி வீட்டு வாசலில் ஆட்டோவில் இறங்கி, செக்யூரிடியிடம் "மந்திரி அம்மாவைப் பார்க்கணும்'' என்று தயக்கத்தை விடுவித்துக் கொண்டு கூற, அவன் ஏற இறங்கப் பார்த்து, ''மந்திரியோட அம்மாவைப் பார்க்க லால்குடிக்குப் போகணும்'' என்றான்.

''ஒரு மரியாதைக்கு அம்மான்னு சொன்னேன். சம்சாரத்தைத்தான் குறிப்பிடறேன்."

"எதுக்குப் பார்க்கணும்?''

''ஒரு காரியமுமில்லே. காலேஜ்ல அவங்களோட கூடப் படிச்சவ. மெட்ராஸுக்கு வந்தேன், ஒரு காரியமா. அப்படியே பார்த்துட்டுப் போலாமேன்னு...''

''அவங்க யாரையும் பார்க்கறதில்லே; மந்திரியோட பர்மிஷன் வேணும்."

"நீங்க கேட்டுப்பாருங்க. முடியாதுன்னு சொல்லிட்டா போயிடறேன். சீதாலக்ஷ்மி காலேஜ்-கிளாஸ்மேட் கனகவல்லின்னு சொல்லுங்க."

யோசித்து, 'நமக்கேன் வம்பு' என்பது போல் தோள் குலுக்கி, செக்யூரிடி இன்டர்காமில் பேச, நளினியின் இதயத் துடிப்பு தாறு மாறாயிற்று.

ஃபோனை வைத்து, அவளைச் சந்தேகம் தீராமலே பார்த்து, ''வரச் சொன்னாங்க'' என்றான்.

ஒரு தடை தாண்டின சந்தோஷத்தோடு அடுத்த கட்ட திகிலும் சேர, வியர்த்தது நளினுக்கு. ஓர் அலட்சிய கம்பீரத்தைக் கஷ்டப்பட்டு வருவித்துக் கொண்டு நடந்து, படியேற, கதவு திறந்து, ஃபிரேம் போட்டது போல் நிலை வாசல் மையத்தில் நின்றாள் காந்திமதி.

உள்ளே அழைத்துப் போய் சோபாவில் அமரச் செய்து ஜூஸ் கொடுக்கும் வரை ஒரு சொல் உதிரவில்லை. பிறகு "சீதாலக்ஷ்மி காலேஜ் சரி; ஆனா கனகவல்லின்னு எனக்கு ஒரு ஃபிரெண்டும் கிடையாது; அங்க சறுக்கிட்டே'' என்றாள்.

''பொய்னு தெரிஞ்சு ஏன் உள்ளே அனுமதிச்சீங்க?''

அவள் இமைக்காமல் பார்த்து, தயக்கத்தை வெற்றி கொள்ள நேரம் எடுத்துக் கொண்டு பேசினாள்: "சொல்றேன். தனிமை எவ்வளவு கொடுமைங்கிறது உனக்குத் தெரியுமா? . அனுபவிக்காதவர்களுக்கு அதன் கொடூரம் புரியாது."

பெண்ணினத்தின் இயற்கையான இரக்கத்துடன் அவள் கரத்தைப் பற்றினாள். காந்திமதி உருவிக் கொண்டாள்.

"நீ நட்புக்காக வரலைங்கறது எனக்குத் தெரியுது. யார் நீ? என்ன வேணும்?''

''காரியார்த்தமாகத்தான் வந்தேன். ஆனா என் சினேகத்தை வழங்கறதுல தடையில்லே.''

''என்ன காரியம்னு தெரிஞ்சுக்கிட்ட பிறகுதான் உன் நட்பை ஏற்றுக் கொள்வதா வேண்டாமான்னு தீர்மானிக்க முடியும்.''

நளினி முதல்நாள் இரவு நிகழ்ச்சிகளை நினைவூட்டினாள்.

''ராஜ்கமலின் சம்சாரமா நீ?'' காந்திமதியின் சிரிப்பில் கேலி கொப்பளித்தது.

"உங்க சிரிப்பு என்மேல் நெருப்பை அள்ளிக் கொட்டறமாதிரி இருக்கு."

"எனக்கு நாகுக்கு பத்தாது. மன்னிச்சுக்க."

புதியதயாரிப்பு

இயற்கையுடன் இணைந்து.

COOL & GLOW

பிரம்மியின் இயற்கையான
குணங்கள் தைல வடிவில்



முடி உதிர்தல், பொடுகு, அடர்த்தியின்மை-
இவற்றுக்கு கைகண்ட நிவாரணம்.
முடிவேரில் ஊடுருவி செழுமையான
வளர்ச்சிக்கு தேவையான சத்துக்கள் அளிக்கிறது.

COOL & GLOW
தலைமுடிக்கு தலைசிறந்த பாதுகாப்பு

நினைவாற்றலின் அரிய சின்னம்



MEMORY BOOSTER
BRAHMI FORTE

காப்ஸ்யூல் மற்றும் சிரப்பு வடிவில்

படிக்கும் நாட்களை மறக்கமுடியாத வெற்றி
நாட்களாக்குகிறது பிரம்மி போர்ட் மூளைக்கு
அதிமுக்கிய போஷாக்காக இருந்து துல்லியமான
நினைவாற்றலைத் தருகிறது.

பிரம்மி போர்ட்டின் ஆற்றலுடன்
வெற்றியை அடையுங்கள்

ILLBAN REMEDIES (P) LTD
P.B.No.27, Palakkad - 678 001. Ph: 27434 Grams: ILLBAN

---

mpbf மெட்ராஸ் பெரியமேட் பெனிபிட் பண்ட் லிட்.,
மாருதி காம்ப்ளெக்ஸ், நெ. 90, பூனை நெடுஞ்சாலை,
சென்னை - 112. Ph.: 5321048 Regd.No.18-20964

வைப்பு நிதிகள் : (FIXED DEPOSITS)

ஓய்வுற்றோர்க்கள், விதவைகள், ஊனமுற்றோர்கள், முன்னாள் இராணுவத்தினர்கள், அறக்கட்டளைகள், மற்றும் 50 வயது மேற்பட்டவர்களுக்கு ரூ 10,000/- ம் அதற்கு மேலும் டெப்பாஸிட் செய்பவர்களுக்கு ஒரு வருடத்திற்கு **20%** சிறப்பு ஆதாயம் வழங்கப்படும்.

காலவரை	3 மாதங்கள்	6 மாதங்கள்	1 வருடம்	2 வருடம்	3 வருடங்கள் அதற்கு மேலும்
வட்டிவிகிதம்	14%	15%	18%	19%	20%

நூதன வைப்புத்தொகை திட்டம் :

உயர்தரகல்வி / திருமணம் ஆகியவற்றிக்கு ரூ 500/- முதலீட்டில்
132 மாதங்கள் (11 வருடங்கள்) கழித்து Rs. 5,000/-
252 மாதங்கள் (21 வருடங்கள்) கழித்து Rs. 40,000/- பெறலாம்.
ரூ 7,500/- முதலீட்டில் 15 வருடங்கள் கழித்து ரூ 1,26,000/- பெறலாம்.

நினைவில் நீங்காத நன்னாளில் ரூ 1000/- வீதம் நான்கு வருடங்கள் தொடர்ந்து செலுத்தினால் 5ம் வருடம் முதல் நீங்கள் செலுத்திய அதே நாள் ரூ 1,250/- வீதம் ஆயுள் வரை முழுவதும் கிடைக்கும்

நகைகடன்

1 சவரன் தங்க நகையின் மீது ரூ 2,400/- வரை 22.5% ஆண்டு வட்டியுடன் வழங்கப்படும்.

பரிமாற்றங்கள் பங்குதாரர்களுக்கு மட்டும்

M. முகுந்தன்
நிர்வாக தலைவர்

Komala Ads

"உங்க கணவருக்கும்தான். உங்க கண் எதிரிலேயே..." என்றாள் நளினி, குத்தலாக. அப்புறம் அடி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

"ஆரம்பத்துல ஆத்திரமா இருந்துச்சு. அப்புறம் பழகிடுச்சு. அந்த மனுஷனுக்கு இப்படி என்னைச் சிறுமைப்படுத்தறதுல தான் சந்தோஷம்னு தெரிஞ்ச பிறகு, 'சீ'ன்னு போயிடுச்சு. இப்ப நான் அவரையே லட்சியம் பண்றதில்லே; அவர் செயல்களை எதுக்குப் பெரிசா எடுத்துக்கணும்?" மை கலையாமல் கண்களின் ஓரத்தில் கைக் குட்டையால் ஒற்றிக் கொண்டாள்.

"அப்படி இருக்கறப்போ எனக்கு ஏன் நீங்க உதவக் கூடாது?"


"என்ன உதவின்னு நீங்க இன்னும் சொல்லலியே?"

"அந்தப்புலிகள் என்ன ஆனாங்க?"

காந்திமதி மறுபடி குபீர் என்று சிரிக்க, நளினி பற்களை நறநறத்தாள். 'எழுந்து போயிடலாமா? கூடாது! அவமானத்தைத் தாங்கியாவது காரியத்தை முடிக்கணும்'

"பதிலுக்குக் காத்திருக்கேன்" என்றாள் சிரிப்பலைகளுக்கு மேலாக, அதட்டலாக.

நகையொலி நலிந்து தேய காந்திமதி சொன்னாள்: "இங்கேயேதான் இருந்தாங்க;



ஒரு புலி கட்டிலிலே கம்பெனி கொடுத்துது; இன்னொரு புலி வாசல்ல செக்யூரிட்டி வேஷத்துல உன் கணவரைத் தடுத்து நிறுத்தப் பார்த்தது!"

நளினிக்குப் புரிந்து விட்டது. 'அப்படின்னா ஒரு புலி, பெண்புலி, ஒரு புலி, ஆண் புலியா? இப்படி ஏமாந்ததை உணரும்போது ராஜ்கமல் எப்படி குன்றிப் போவார்!' புழுப்போல உணர்ந்தாள் நளினி.

"என்ன நோக்கம்? அதிராமபட்டணத்தில் ஆரம்பிச்சு, சென்னைப் பட்டணம் வரை போலீஸின் கவனத்தை ஈர்க்கின்ற இந்த நாடகம் எதுக்கு?"

"எனக்குத் தெரியாது."

"தெரிஞ்சுக்க வேணாமா?"


"அதுல ஆபத்து உண்டு. என் கணவர் எப்படிப்பட்டவர்னு எனக்கும் தெரியும்; உனக்கும் தெரியும். நான் எதுக்கு வம்பை விலை கொடுத்து வாங்கணும்?"

"பழி வாங்கறதுக்கு" என்றாள் நளினி, உறுதியாக.

காந்திமதி அவளை உற்றுப் பார்த்தாள். கண்களில் பளபளப்பு ஏறி, இருட்டில் தெரியும் புலிகளின் விழிகளாக ஜொலித்தன.

"பூனைகள் கூடப் புலி வேஷம் போடலாம் இல்லியா?" என்றாள்.

(தொடரும்)




நலிவடைந்தோர் பிணிதீர்க்கும்

இந்து மிஷன் ஆஸ்பத்திரி

'உடம்பார் அழியின் உயிரார் அழிவார்' என்றார் திருமூலர். மந்திரமாய் சொன்ன திருமூலரின் சுந்தரத் தமிழில் ஆழ்ந்த பொருள் இருக்கின்றது. உடம்புதான் ஆலயம்; அதனுள் ஏற்றப்பட்ட ஒளிவிளக்கே உயிர். வாழ்வின் முன்னேற்றத்திற்கும், மன அமைதிக்கும் உடல்நலம் மிக அவசியம். எனவேதான் 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்று தெளிவாகச் சொல்கிறார் திருமூலர்.

ஆனால் இயந்திரமயமான இந்த உலகில் நோய்க்குத் தப்பியவர்களே இல்லையென்று சொல்லலாம். எனினும் சிறந்த சிகிச்சை பெற வழியின்றி நோயினால் அதிகம் அல்லல்படுபவர்கள் ஏழை எளியவர்களே.



ஸ்ரீ ராம நாமா பிளாக் - முன்னாள் துணை ஜனாதிபதி உயர்திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களால் 14.4.1985 அன்று திறந்து வைக்கப்பட்டது.

சிறந்த சிகிச்சை வசதிகளை ஏழைகளும் பெற வேண்டாமா? நோய்தீர்ந்து அவர்கள் வாழ்விலும் இன்பம் மலர வேண்டாமா? இந்த நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டு உருவானதுதான் இந்து மிஷன் ஆஸ்பத்திரி. ஏழை எளியவர்களின் பிணிதீர்க்கும் இம்மருத்துவமனை அவர்கள் வாழ்வின் நம்பிக்கை தீபமாகத் திகழ்கிறது.

இலட்சியப் பயணம்


இந்து மிஷன் ஆஸ்பத்திரி - வசதியற்ற மற்றும் நடுத்தர மக்களின் ஓர் உயிர்நாடி. சென்னையில் இருந்து 26 கி.மீ தொலைவில் நெடுஞ்சாலையில் அமைந்திருக்கின்ற இம்மருத்துவமனை மக்கள் பிணிதீர்க்கும் தன் இலட்சியப் பயணத்தை உறுதியுடன் தொடர்கின்றது.

இந்திய அரசின் மத்திய பாதுகாப்பு அமைச்சகத்திற்குரிய 0.5 ஏக்கர் நிலத்தைப்பெற்று ஒரு சிறிய குடிசையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த மருத்துவமனையை 1982, டிசம்பர் 2 ஆம் தேதி காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சுவாமிகள் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். பின்னர் 'ஸ்ரீ ராம நாமபத்திரா' மூலம் திரட்டப்பட்ட நிதியின் உதவியினால் அந்த நிலத்தில் 10,000 சதுர அடி நிலப்பரப்பில் மூன்றடுக்கு கட்டடம் கட்டப்பட்டது. 1985, ஏப்ரல் 14 ஆம் தேதி, அன்றைய துணை ஜனாதிபதியான திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அக்கட்டடத்தை திறந்து வைத்தார்.

ஜாதிமத பேதமின்றி அனைத்து மக்களுக்கும் ஆற்றிவரும் தனது தன்னிகரற்ற மருத்துவ சேவையில் 'இந்து மிஷன் ஆஸ்பத்திரி' இன்று மேலோங்கி நிற்கிறது.

நூறு படுக்கை வசதி கொண்ட இந்த மருத்துவமனை, அதிநவீன மருத்துவ வசதிகளுடன் ஏழை எளிய மக்களுக்கு சிறந்த சேவை புரிந்து வருகின்றது. விபத்திற்கான அவசர சிகிச்சைப்பிரிவு, ICCU வசதி கொண்ட இருதய சிகிச்சைப்பிரிவு, மகப்பேறு பிரிவு, மற்றும் பொதுமருத்துவம், அறுவை சிகிச்சை, எலும்பு, பல், கண், காது, மூக்கு, தொண்டை, சருமம், குழந்தை நலம் ஆகிய அனைத்திற்கும் மருத்துவ நிபுணர்களை இம்மருத்துவமனை கொண்டுள்ளது. தாம்பரம் மற்றும் அதனைச் சுற்றி இருக்கின்ற நலிவடைந்தோரின் நோய்தீர்த்து அவர்களின் வாழ்வில் மகிழ்ச்சியை மலரச் செய்கிறது. மேலும் சிறந்த முறையில் சேவை செய்ய, முதியோர் வைத்திய பராமரிப்பியல் மற்றும் கண் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

'தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தி'லும் இந்த மருத்துவமனை ஈடுபட்டு, 8000-க்கும் மேற்பட்டவர்களுக்கு தொழுநோய் பிணிதீர்த்து சாதனை படைத்திருக்கிறது. மேலும் இந்த மருத்துவமனை பல ஏழை எளியவர்களுக்கு இலவச கண் அறுவை சிகிச்சை அளித்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றியுள்ளது.



அறுவை சிகிச்சை நடைபெறுகிறது.

குறைந்த கட்டணம்


இலாப நோக்கம் சிறிதுமின்றி மக்கள் நலனையே இம்மருத்துவமனை தன் தலையாய கொள்கையாய் கொண்டுள்ளது. நோயாளிகளிடம் சிகிச்சைக்குரிய மிகக் குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

மருத்துவமனையின் கௌரவ இயக்குனர் டாக்டர் சி.எஸ். கங்காதர சர்மாவுடன் இணைந்து 25 முழுநேர மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். 10க்கும் மேற்பட்ட சிறப்பு மருத்துவர்கள் மற்றும் மருத்துவ வல்லுநர்களும் குறிப்பிட்ட நாட்களில் மருத்துவமனைக்கு வந்து செல்கிறார்கள். அன்புடனும் முழு ஈடுபாட்டுடனும் அவர்கள் சிகிச்சை அளிக்கிறார்கள். நோய்நீங்கி ஏழைகள் நல்வாழ்வு பெறுகின்றனர்.

வளர்ச்சிப் பணிகள்

இம்மருத்துவமனையின் வளர்ச்சிப் பணிக்காக பல்வேறு வகையில் நிதி திரட்டப்பட்டு, அதன்மூலம் வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஸ்ரீ ராம நாம பத்திரா மூலம் 150 பள்ளிகளைச் சார்ந்த மாணவர்கள் திரட்டிக் கொடுத்த நிதியைக் கொண்டே ஸ்ரீ ராம நாம பிளாக் கட்டப்பட்டது. இப்படி எத்தனையோ முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எளியோருக்குச் செய்யும் மருத்துவத் தொண்டில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள இம்மருத்துவமனை, பல்லோரின் பேராதரவால் படிப்படியாக வளர்ச்சியுற்றது. 30 ஆயிரம் சதுர அடிகொண்ட 2 அடுக்கு மாடிக் கட்டடத்தில் எலும்பு முறிவு சிகிச்சை, அவசர சிகிச்சை மற்றும் மகப்பேறு ஆகியவற்றிற்கான மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. அவற்றை 1992, அக்டோபர் 11 ஆம் தேதி ஸ்ரீகாஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.



குறைமாதத்தில் பிறந்த குழந்தைகளுக்கு புத்துயிர் அளிக்கும் கருவி
(Infant warmer/ Resuscitation unit for neonatal care)

கலங்கித் தவிக்கும் ஏழைகளின் கண்ணீர் துடைக்கும் சேவையே இந்து மிஷன் ஆஸ்பத்திரியின் இலட்சியம். அந்த உன்னத இலட்சியம் ஈடேற, எளியவர் வாழ்வில் இன்ப ஒளி பெருக, தர்ம சிந்தை கொண்டோரின் ஆதரவை வேண்டுகிறது இந்த மருத்துவமனை. மனிதநேயத்தையும் அன்பையும் வெளிப்படுத்த இதுதானே சந்தர்ப்பம். ஏழைகளுக்குச் செய்யும் பணி இறைவனுக்குச் செய்வது போலன்றோ! எனவே தாராளமாய் நன்கொடை நல்கி, இம்மருத்துவமனையின் பணி மேலும் சிறக்க உதவுங்கள்.

இம்மருத்துவமனையின் வளர்ச்சிக்கு வழங்கப்படும் அனைத்து நன்கொடைகளுக்கும் 35AC பிரிவின்கீழ் 100%வருமான வரிவிலக்கிற்கு இந்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி
செயலாளர்

இந்து மிஷன் ஆஸ்பத்திரி

தாம்பரம் (மேற்கு) சென்னை - 600 045. தொலைபேசி: 2367711

போர்க்களத்து முருகன்

கமலமனராஜன்



• உற்சவர்

ஓம் என்று சொல்லுவோம்

"சிங்கத் தலையோடு ஒரு அசுரன் இருந்தானாம்" என்று ஆரம்பித்தால் குழந்தைகள் உடனே சுவாரஸ்யமாக "உம்" கொட்ட ஆரம்பிப்பார்கள். ஆனால் எந்த இல்லத்தில் பெரியவர்கள் கதை சொல்கிறார்கள், இன்று? தாங்களும் டீ.வி.; குழந்தைகளும் டீ.வி.!

முருகப் பெருமான் போரிட்ட இடங்கள் மூன்று. சூரபதுமனை வதம் செய்தது திருச்செந்தூரில். தாரகாசுரனை வதம் செய்தது திருப்பரங்குன்றத்தில். இந்த இருவரின் சகோதரனான சிங்கமுகாசுரனை ஒழித்துக் கட்டியது திருப்போரூரில்.

இப்படி போர் நடந்தது காரணமாகவே போரூர் என்று பெயர். இதற்கு ஏற்ப இந்தக் கோயிலின் சர்வவாத்திய மண்டபத்தில் ஆயுதம் ஏந்திய போர்வீரர்களை ஏராளமாகச் சிற்பமாக வடித்திருக்கிறார்கள். 'சமராபுரி' என்று குறிப்பிட்டே அருணகிரி நாதரும் பாடியிருக்கிறார்.

திருப்பு+ஒரூர் என்று பிரித்து மனத்தைத் திருப்பி இறைவனோடு சேர்க்கும் ஊர் என்று அர்த்தம் சொல்வோரும் உண்டு.

ஊருக்குள் நுழைந்ததும் முதலில் தெப்பக் குளம்தான் கவனத்தை ஈர்க்கும். சுத்தமான வீதிகளிடையே விசாலமான சிவகங்கை தீர்த்தம். அதன் நடுவே அழகிய மைய மண்டபம்.



• சிதம்பரசுவாமிகள்

திருப்போரூரில் ஒரு ஆச்சர்யம் என்னவென்றால் முருகன் க்ஷேத்திரம் என்றாலும் ஆதிகோயில் அவர் அப்பனுக்கே உரியது! அதுவும் குன்றின் மேல் அமைந்திருக்கிறது! வழக்கத்துக்கு மாறாக முருகன் தேவியோடு அருள்பாலிப்பது தரையில் உள்ள ஆலயத்தில் தான்! 'பிரணவமலை' என்று பெயர் பெற்ற சிறு குன்றில் விளங்கும் கைலாசநாதரை கன்வ மகரிஷியே பிரதிஷ்டை செய்ததாகப் புராணம் கூறும்.

கோயிலின் உள்ளே நுழைந்ததும் வலப்புறம், தேவயானையின் கருவறை. அடுத்து நடராசப் பெருமானின் விக்கிரகம். இடப்புறத்தில் ஆலயத்திருப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட சிதம்பர சுவாமிகளின் உருவப்படத்தை வைத்திருக்கிறார்கள். ஆலய வளாகத்துள் இவருக்குத் தனியான கோவில், பூஜை எல்லாமே உண்டு. சுவாமிகளின் செப்புச் சிலை வடிவமும் அழகுறக் காட்சி தருகிறது.

மூலவர் முருக பிரான், வள்ளி தேவயானையோடு கூடிய சுயம்பு என்கிறார்கள். எனவே அபிஷேகம் எல்லாம் முன்னே உள்ள திருவுருவங்களுக்குத் தான். மூலவர் கருவறைக்கு இடப்புறம் யந்திர பீடம் இருக்கிறது. இங்கு 'திரிசதி' அர்ச்சனை சிறப்பானது. திருமணம் கைகூடும், வழக்குகள் வெற்றிதரும், நோய் நீங்கும் என்கிற நம்பிக்கைகளுக்கு ஆதாரமானது இந்த வழிபாடு.

உள் சுற்றில் முதலில் காட்சி தருவது சுனை விநாயகர். பிரணவ மலையிலிருந்து சுனை நீர் வருகிற பாதையில் மேலே அமைந்

இருப்பதால் இவர் சுனை விநாயகர். இவருக்கு அருகிலேயே வீரபத்திரர், நாகர், வீரபாகு! இங்கே தினமும் 'நித்யாக்னி' வளர்த்து, வேள்வி நடத்தி, கலச பூஜை செய்துதான் அபிஷேகம்.

வெள்ளிக்கிழமைகளில் 'சுக்ரவார அம்மன்' உள் சுற்றில் வலம் வருகிறார்.

சர்வ வாத்ய மண்டபத்துக்கு அருகில் உற்சவ மூர்த்திகள். சின்னவர் பெரியவர் என்று இரண்டு வடிவங்கள் தேவியரோடு காட்சி தருகிறார்கள். அருகிலேயே தனிக் கருவறையில் வள்ளிநாயகி கிழக்கு நோக்கி அருள்பாலிக்கிறார். இந்த வள்ளி நாயகியும், தெய்வயானையும் அழகான சிவப்பு நிறத் திரைகளின் பின்னணியில் காட்சி தருவது அழகின் உச்சம். 'அரத்த ஆடை விரித்து மீதூரி' என்று பட்டினத்து சுவாமிகளே வியந்து போற்றிய தோற்றம் அல்லவா?

திருச்சுற்றில் உற்சவத் திருமேனிகள் அனைத்தையும் நல்ல வெளிச்சத்தோடு பார்வைக்கு வைத்திருக்கிறார்கள். கண்களை விட்டு அகலாத அழகுப் படிமங்கள். சிவபிரான் மடியில் அமர்ந்து தந்தைக்கு உபதேசம் செய்யும் 'உபதேச மூர்த்தி'யும் ஒரு பாதத்தை மயிலின் மீது வைத்துக் கைவேலுடன் காட்சி தரும் 'முத்துக் குமார சுவாமி'யும் தனிச் சிறப்புடைய வடிவங்கள்.



• மயில்மேல் ஒரு பாதம்

பன்னிரண்டு நாட்கள் நடைபெறும் மாசிப் பிரம்மோற்சவமும், ஆறு நாட்கள் நடைபெறும் கந்த சஷ்டியும் திருப்போரூரில் முக்கியமான திருவிழாப் பெருமைகள். தெப்பம் தேர் திருவிழாக்களும் சிறப்பாக நடைபெறும்.

நாமெல்லாம் நல்லநாளில் பெற்றவர்களைப் போய்த் தரிசித்து ஆசிபெறுகிற மாதிரி, இந்தத் திருப்போரூர் முருகரும் தேவியருடன் புறப்பட்டுப் போய் ஒவ்வொரு பிரதோஷத்தன்றும், காணும் பொங்கலின் போதும் கயிலாசநாதரைத் தரிசித்து வணங்கி வருகிறார்!

தந்தைக்கே உபதேசம் செய்த பிள்ளையானாலும் பெரியோரை வணங்கும் பண்பை நினைவூட்டத் தவறவில்லை, போர்க்குணம் மிக்க இந்த முருகன்!

♦ தேசிய முன்னணி இன்று எங்கே இருக்கிறது? அது ஒரு தூசு படிந்த பெயர்ப் பலகை மட்டுமே. இந் நிலையில் அதில் தொடர அல்லது இணைய தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. நடத்தும் அறிக்கை யுத்தம் வெறும் சீண்டல்களுக்காக மட்டுமே!

சிட்லபாக்கம்,

அ. ஷண்முகசுந்தரம்.



♦ அட்டையில் 'சிம்பாலிக்கா' போட்டு விட்டீர்களே! ஒரே செடியில் துளிர் விடும் இளந்தளிராக இரு இலைகளை... அப்புறம் கீழே தலைப்பு வேறு வேண்டுமா?

மதுரை - 6,

எம். பி. துரைஸ்வாமி.

♦ 'தேசிய முன்னணி அ.தி.மு.க.வில் சேருமா?' கவர் ஸ்டோரியின் தலைப்பைக் கண்டுகளித்தேன். கல்கிக்கே உரிய நையாண்டி பளிச்சென மின்னுகிறது!

சென்னை - 30,

புளியரை கணேசன்.

♦ 'விதியை வென்ற ஜெயஸ்ரீ!' படித்து கண் கலங்கி விட்டது. ஜெயஸ்ரீயின் தளராத மனமும், தன்னம்பிக்கையும் நம்மை உலுக்குகின்றன. ஒரு கட்அவுட் செய்வதற்கு ஆகும் செலவையாவது ஜெயஸ்ரீக்கு தந்து உதவியிருக்கலாம்....

இலால்குடி,

ஆங்கரை பைரவி.

♦ **நாங்கள் சுமார் மூன்று ஆண்டுகளாக ஊதியம் இல்லாமல் பணிபுரிவது தொடர்பாகத் தங்கள் பத்திரிகையின் 8.1.95 கிராமச் சிறப்பிதழில் பேட்டி கட்டுரை வெளியிட்டீர்கள். தற்போது பள்ளி நிர்வாகம் எங்களில் ஐந்து பேரைத் தாற்காலிகப் பணி நீக்கம் செய்து நோட்டீஸ் ஒட்டியுள்ளது. இது சம்பந்தமாக அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்த பதிலும் இல்லை. பணி நீக்கம் செய்யப்பட்ட காரணங்களுள் ஒன்று பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தது என்றும் சொல்கிறார்கள்.**

குறிஞ்சிப்பாடி, அருள்மிகு வள்ளலார் உயர்நிலைப்

பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள்.

♦ ஒரே தலையங்கத்தை ஒரு பக்கம் பூராவும் எழுதுவதை விட குட்டிக் குட்டி தலையங்கங்களாக இருந்தால் டைனமிக் எஃபெக்ட் இருக்கிறது.

கடலூர்,

ஸ்ரீவத்ஸன்.

♦ 'குழப்பமாய் இருப்பது குழப்பமே அல்ல' என சின்ன விசு (பாலு. சீனிவாசன்) குழப்பாமல் குழப்பியது குழப்பத்தைத் தவிர்த்தது.

மதுரை - 16,

சீதாமகன்.

♦ அ.தி.மு.க. கொடியைப் பற்றிய கார்ட்டூனில் பேரறிஞர் அண்ணா அவர்களது உருவத்தை பயங்கரவாதி போல சித்திரம் வரையப்பட்டுள்ளது. பாரம்பரியமிக்க "கல்கி"யில் இது போன்ற கார்ட்டூனை எதிர்பார்க்கவில்லை.

கூத்தாநல்லூர்,

ஹாஜாபதுருதீன்.

(வேறு சிலரும் கார்ட்டூனைத் தவறாகப் புரிந்து கொண்டு எழுதியுள்ளனர். அறிஞர் அண்ணா போதித்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றைப் பின்பற்றிய கட்சி, படிப்படியாக மாறி, குண்டர்களின் வன்முறைக்கு இடமளித்துக் கொண்டிருக்கிறது என்று உணர்த்துவதே கார்ட்டூனின் நோக்கம். - ஆர்.)

♦ தமிழக ஆளுங்கட்சியின் அவல நிலையை 'சிம்பாலிக் ஷாட்' ஆக, கொடி மூலம் காட்டிய கார்ட்டூனுக்குப் பாராட்டுக்கள். அரஸ், சூப்பர் சார்!

தூத்துக்குடி,

சிவராமசுப்பிரமணியன்.

♦ "போலீஸால் நடந்த சாலை மறியல்" படித்து வேதனையுற்றேன். தோழர் என். பாலசுப்பிரமணியத்தின் விளக்கம் அருமை.

திருநெல்வேலி,

ச. கணபதி.

♦ 12.2.95 இதழில், தராசு பதில்கள் பகுதியில் "சந்த்ர பிம்ப முகமலராலே" என்ற பாடலை சீதை ராமரை நோக்கிப் பாடுவதாக எழுதியுள்ளீர்கள். ஆனால் ராமபிரான் சீதையைப் பற்றிப் பாடுவதாகத்தான் அப் பாடலை அமைத்துள்ளார் அருணாசல கவிராயர். எனினும் ஆண்களை நிலவுக்கு ஒப்பிடுவதுண்டு என்பதற்கு நிறைய உதாரணங்கள் சொல்லலாம். ராமச்சந்திரன் என்ற பெயரே இதற்கு ஒரு உதாரணம் தான்! என் பெயர் என்பதற்காக இதை எழுதவில்லை!

சென்னை - 41,

என். ராமச்சந்திரன்.

வட்டமேஜை

31 கே. பாலசந்தர்



• மனதில் உறுதி வேண்டும்

FOOT BALLERS THINK WITH THEIR FEET
— GEORGE BERNARD SHAW -

சமுதாயத்தைச் சீர்படுத்துவதோ அல்லது புனருத்தாரணம் செய்வதோ ஒரு கலைஞனுடைய கடமை இல்லை. கலை என்பது எந்த அறிவுரையையும் விற்கின்ற சாதனம் இல்லை. ஒரு வாழ்க்கை அனுபவத்தை, வாழ்க்கை நெறிமுறைகளுடன் எடுத்துச் சொல்லி, மக்கள் மீதோ அல்லது தனிப்பட்ட ஒரு மனிதன் மீதோ அது ஏற்படுத்துகின்ற விளைவுகளைப் படம்பிடித்துக் காட்டுவதுதான் கலையே தவிர, ஒரு சமுதாய Moral Philosophy, அல்லது அரசியல்ரீதியான ஒரு கொள்கையை வலியுறுத்துவது கலை அல்ல; அது கலைஞர்களுடைய கடமையும் அல்ல. திரைப்படக் கலையும் இதில் அடக்கம்தான்.

ஆனால் இப்படிப்பட்ட சில போதனைகளை வலுக்கட்டாயமாகத் தவிர்க்க வேண்டுமென்பதும் ஒரு கலைஞனுடைய மனப்பான்மையாக இருத்தல் கூடாது. இது அவனிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பொதுவான நற்பண்பு.

இதைத்தான் Darryl Zanuch என்கிற film maker அழகாகச் சொன்னார் :

"We provide entertainment. But in doing so let us not dodge providing enlightenment"

சமூகத்தின் ஒரு அங்கமான தனிமனிதனுக்கு அந்தச் சமூகம் குறித்து எந்த அளவிற்கு ஒரு கடமையும் பொறுப்புணர்ச்சியும் இருக்கிறதோ, அந்த அளவிற்கு, தன்னைச் சுற்றியுள்ள சமுதாயம், அரசியல், அன்றாடப் பிரச்னைகள் இவற்றைப் பற்றிய தனிமனித மனப்பான்மைகளை எடுத்துரைக்க வேண்டிய ஒரு கட்டாயமும் கடமையும் ஒரு கலைஞனுக்கும் இருக்கவே செய்கிறது.

ஆனால் எந்த அறிவுரையையும் வலுக்கட்டாயமாகத் திணிப்பது என்பது, அந்த அறிவுரையின் அடிப்படை நம்பகத்தன்மையைக் குலைத்து விடுகிறது என்பதும் உண்மை.

அதே நேரத்தில் 'கலை கலை'யென்று கூக்குரலிட்டுக் கொண்டு, திரைப்படத்தை வெகுஜனபூர்வமாக இல்லாமல் எங்கோ ஆகாயத்தில் நடந்தபடி, மேல் மட்டத்து மக்களிலும் ஒரு சாரார் மட்டுமே புரிந்து கொள்ளும்படியாக ஆக்கி விடுவது, இந்த அற்புதமான திரைச் சாதனத்தின் நோக்கத்தையே தோல்வியுற வைத்துவிடுகிறது.

"If you want art don't mess about with movies. Buy a Picasso painting" என்று ஒரு திரைப்பட அறிஞர் கூறியிருக்கிறார்.

Let me come to brasstacks :

பல ஆண்டுகளுக்கு முன்பு புகை பிடிப்பதன் அபாயங்களைப் பற்றி பத்திரிகைகளிலும் தினசரித் தாள்களிலும் அவ்வப்பொழுது வரும் கட்டுரைகளிலிருந்து சில பகுதிகளைத் தனியாகக் கத்தரித்தெடுத்து ஒரு கவரில் போட்டு எனக்கு அனுப்பி வந்தார் ஒருவர். அனுப்பியவரின் ஊர் பெயரில்லாமல், பத்து நாட்களுக்கொருமுறை எனக்குத் தபால் மட்டும் வரும். யார் இந்த அனாமதேயம் என்பது ஒரு மர்மமாகவே இருந்து வந்தது. நானும் அதையெல்லாம் ஒருமுறை

நினைவலைகள்

படித்துப் பார்த்து விட்டுக் கிழித்துப் போட்டு விடுவேன்.

ஒருநாள் மர்மம் அம்பலமாயிற்று! அன்று வந்த கவரில் எழுதப்பட்டிருந்த எனது விலாசம் எனக்கு மிகவும் பழக்கமானவரின் கையெழுத்தில் இருந்தது! வழக்கமாக வேறு யாரையாவது விட்டு கவரில் விலாசம் எழுதச் சொல்லி வந்த அந்த அன்பர், அன்றைக்குத் தவறிப் போய் தன் கையாலேயே விலாசம் எழுதி விட்டதனால் மர்மம் விளங்கியது.

எனது உதவியாளராகவும், எனது நீண்டகால ஆலோசகராகவும் இருந்து வரும் அனந்து அவர்கள்தான் இப்படி அடிக்கடி கவர் அனுப்பிக் கொண்டிருக்கிறார் என்பதும் தெரியவந்தது!

அனந்துவிடம் விளக்கம் கேட்டேன்.

"தெரிந்தவர்கள் புத்திமதி சொல்வதை விட, தெரியாதவர்கள் யாராவது சொன்னால் நீங்கள் இந்தக் கொடிய பழக்கத்தை விட்டுவிடமாட்டீர்களா என்பதற்காகத்தான் இப்படிச் செய்து கொண்டு வந்தேன்" என்றார்.

என் கண்கள் பனித்தது உண்மை! ஒரு நெருங்கிய நண்பரின் மனித நேயத்தையும் பொறுப்புணர்ச்சியையும் இச் செயலில் நான் கண்டேன்.

இப்படிப்பட்ட தனிமனித கடமை உணர்ச்சியை நான் சில திரைப்படச் சம்பவங்களில் கையாண்டிருக்கிறேன்.

படம் : மனதில் உறுதி வேண்டும்.

ஒரு மிகச் சிறந்த டாக்டராக இருந்து கொண்டு அதே நேரத்தில் புகை பிடிக்கும் தீய பழக்கத்திற்கு அடிமையானவராக ஒரு குணசித்திரத்தை 'மனதில் உறுதி வேண்டும்' திரைப்படத்தில் காட்டியிருந்தேன். அற்புதக் கலைஞர் எஸ். பி. பாலசுப்ரமணியம் கலை நயத்தோடு கையாண்டிருந்த இந்த குணசித்திரம், மிகவும் பேசப்பட்ட ஒரு கதாபாத்திரமாகவும், பார்த்தவர்கள் மனத்தில் எளிதில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

எந்த டாக்டரை மனத்தில் கொண்டு இந்தப் பாத்திரம் சிருஷ்டிக்கப்பட்டதோ, அந்த டாக்டர் இந்தக் கொடிய பழக்கத்தை இன்றுவரை கைவிடவேயில்லை என்பதுதான் உண்மையென்றாலும் இந்தப் படம் வெளிவந்தவுடன் பெங்களூரில் டாக்டராகப் பணிபுரியும் ஒரு தமிழன்பர் அன்றிலிருந்து இந்தப் பழக்கத்தைத் தாம் கைவிட்டு விட்டதாக எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். படைப்பின் பலன் கிடைத்ததாக உணர்ந்தேன்.

இன்னொரு திரைப்படத்தையும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

'அபூர்வ ராகங்கள்' படத்தில் வரும் நாகேஷ் நடித்த அந்த டாக்டர் குணசித்திரம். ஒரு டாக்டராக இருப்பவர் ஒரு குடிகாரனாக இருப்பதை, அவரிடம் வந்து செல்லும் எந்த நோயாளியும் விரும்பமாட்டான் - அவனே ஒரு குடிகாரனாக இருந்தாலும் கூட! இதற்காக தன் உருவ ஒற்றுமையோடு இருக்கும் தனது சகோதரன்தான் இப்படிக் குடிகாரனாகத் திரிகிறான் என்று பொய் சொல்லி, இல்லாத ஒரு சகோதரனை சிருஷ்டித்துக் கொண்டு மற்றவர்களை நம்ப வைக்கிற ஒரு கதாபாத்திரமாக இந்த டாக்டர் பாத்திரம் புனையப்பட்டது.

எனக்குத் தெரிந்த மிகவும் பழக்கமான ஒரு அற்புதமான டாக்டர் அன்பர்தான் இந்தக் கற்பனைக்கு ஆதாரம். தனக்கு ஒரு குடிகாரச் சகோதரன் இருப்பதாக வெளியே ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்ற உபாயம் மட்டும் முற்றிலும் கற்பனையாக அமைக்கப்பட்டிருந்தது.

நானா வட்டத்திலே எனது மதிப்பிற்குரிய டாக்டர் நண்பர் இந்தப் பழக்கத்தைக் கைவிட்டு விட்டார் என்று தெரிந்தவுடன் அதைக் கண்டு சந்தோஷப்பட்டவர்களின் பட்டியலில் முதல் ஆள் நானாகத்தானே இருக்க முடியும்?

ஆக, ஒரு திரைப்படத்திலே வருகின்ற ஒரு சம்பவம் எல்லோரையுமே திருத்தி நல்வழிக்குக் கொண்டு வந்து விட முடியாது என்பது உண்மைதான் என்றாலும் திருத்தி விட வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்குத் திரைப்படச் சம்பவம் ஒரு தூண்டுகோலாக அமையக்கூடும் என்று நம்புவதற்கும் இடமிருக்கிறது.

"Imagination is more important than knowledge" என்று Einstein சொன்னார். மற்ற துறைகளை விட சினிமாவுக்கு இது ரொம்பப் பொருந்தும்.

இந்தக் கலையை முழுமையாகக் கற்றுக் கொண்டவன் என்பதை விட, கற்பனை வளத்துடன் கருத்துக்களை ஆணித்தரமாகச் சொல்லத் தெரிந்தவன், சமுதாயத்திற்குத் தேவைப்படுகிற ஒரு கலைஞன் ஆகிறான்.

'கால்பந்து ஆடுகிறவர்கள் தங்களது கால்களின் வழியாகச் சிந்திக்கிறார்கள்' என்று பெர்னார்ட் ஷா சொன்னாரே! அதே போல் தான் திரைப்படப் படைப்பாளி செல்லுலாய்டு வழியாகச் சிந்தித்துப் பார்க்கிறான்; சிந்தித்துப் பார்க்கவும் வேண்டும்.

சினிமா என்பது ஒரு பொழுதுபோக்குச் சாதனம் என்கிற போர்வையில், பூங்காக்களைச் சுற்றிச் சுற்றி ஓடி வரும் காதலர்களையும், வண்ண வண்ணப் பூக்களையும் மட்

டுமேதான் திரைப்படங்களிலே காட்ட வேண்டுமென்பதில்லை.

"If you have no work, spend your time in admiring flowers" என்கிறது ஒரு ஜப்பானியப் பழமொழி. அவர்களது ரசனையை மட்டுமின்றி அவர்களது சுறுசுறுப்பையும் இந்தப் பழமொழி பிரதிபலித்துக் காட்டுகிறது.

நமது டெலிபோன் எக்ஸ்சேஞ்ச்கள் electronic exchange களாக மாறுவதற்கு முன் தொலைபேசியில் cross talk கேட்பது சர்வ சகஜம். அப்படி ஒருநாள் ரிஸீவரை எடுத்து நண்பருக்கு டயல் செய்த போது குறுக்கே இரண்டு பெண்மணிகள் பேசிக் கொண்டிருப்பது கேட்டது.

ஒருத்தி விசாரித்தாள் : "எப்போ உன் புருஷன்கிட்டேருந்து விவாகரத்து வாங்கிக்கிட்டு வாழ்க்கையிலே 'செட்டில்' ஆகப் போறே?"

எனக்கு சற்று அதிர்ச்சியாக இருந்தது. காலம் எப்படியெல்லாம் மாறி விட்டிருக்கிறது! "ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு குழந்தை குட்டின்னு எப்போ 'செட்டில்' ஆகப் போறே" என்று ஒருவருக்கொருவர் கேட்டுக் கொள்கிற காலம் போய்...

இருபது ஆண்டுகளுக்கு முன்பு நான் எடுத்த 'அவர்கள்' திரைப்படம் என் நினைவுக்கு வந்தது.

அன்றைய காலகட்டத்தில் விவாகரத்து செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை மிக மிகச் சொற்பம். இன்றோ family court வளாகத்தினுள் சென்று பார்த்தால் எத்தனை எத்தனை தம்பதிகள் விவாகரத்து கோரி வந்திருக்கிறார்கள்! சென்டிரல் ஸ்டேஷன் அளவிற்கு கோர்ட் வளாகத்தினுள் கூட்ட நெரிசல்!

இப்பொழுது, இருபது ஆண்டுகள் கழித்து – வந்திருக்க வேண்டும் நான் எடுத்த 'அவர்கள்' திரைப்படம்! எப்பொழுதுமே நான் ஒரு முந்திரிக் கொட்டை!

அமெரிக்காவில் அடிக்கடி நடக்கும் விவாகரத்துகளைப் பற்றி ஒரு ஹாலிவுட் பிரமுகர் கேலியாகக் குறிப்பிட்டது ஞாபகம் வருகிறது. அங்கெல்லாம் சின்னக் குழந்தைகள், "நீ அப்பா... நான் அம்மா... இவன் ஜட்ஜ்" என்று சொல்லிக் கொண்டு விளையாடுவார்களாம்... 'ஜோக்' என்பது மிகைப் படுத்தப்பட்ட உண்மைதானே!

"The happiness of married life depends upon small sacrifices from both sides."

சின்னச் சின்னத் தியாகங்கள் ஒரு வழிப் பாதையாக மட்டுமே இருப்பதில் நியாயமில்லை!

(தொடரும்)



• கார்டன் சேலைகள் : வடிவமைக்க தனி 'ஆர் அண்ட் டி' பிரிவு!

கற்பனையில் உருவாகும் ~~கவிதைகள்~~ புடைவைகள்!

"இந்தக் இளிப் பச்சைப் புடைவைக்கு அந்த மஞ்சள் புடைவையின் அரக்கு பார்டர் இன்னும் சூப்பராகப் பொருந்துமே!"

"அடடா! இந்தப் புடைவையில் இத்தனை பெரிய மாங்காய் டிசைன்களைத் தள்ளித் தள்ளிப் போட்டதற்குப் பதிலாக, சின்னச் சின்ன மாங்காய்களாக இன்னும் நெருக்கமாகப் போட்டிருந்தால் ஜோராக இருந்திருக்குமே...!"

– இப்படி எத்தனையோ முறை புடைவைகளைத் தேர்ந்தெடுத்து வாங்குகிறபோது பலரும் நினைத்திருக்கலாம்; விற்பனையாளர்களிடம் தங்களது எண்ணத்தைச் சொல்லியும் இருக்கலாம். "வாடிக்கையாளர்களின் இதுபோன்ற விருப்பங்களைப் பொறுத்துத்தான் புடைவைகளுக்கான டிசைன்களே உருவாக்கப்படுகின்றன!" என்கிறார் 'கார்ட்ன' விற்பனை அதிகாரியான கே.சங்கரலிங்கம்.

"இதற்கென்று சூரத்தில் தனியாக ஒரு ரிசர்ச் அண்ட் டெவலப்மெண்ட் (R & D) இலாகாவே இருக்கிறது. நாடெங்குமிருக்கிற பல ஷோரூம்களிலும் எந்தெந்த டிசைன்களுக்கு டிமாண்ட் என்கிற விவரங்களெல்லாம் ஒவ்வொரு நாளும் ஃபேக்ஸ் மூலம் வரவழைக்கப்பட்டு, கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்படுகின்றன. இரண்டு மூன்று மாதங்களுக்கொருமுறை, சேகரிக்கப்பட்ட விவரங்களையெல்லாம் பரிசீலித்துப் புதிய டிசைன்களுக்கு வித்திடப்படும்!" என்கிறார் சங்கரலிங்கம்.

இருப்பினும் "சில டிசைன்களில் எப்போதுமே பெரிய மாற்றங்கள் இருப்பதில்லை. உதாரணத்திற்கு ஜலந்தர்பேட், பவுன்பேட், மாங்காய்பேட், யானை-இளி டிசைன்கள்... என்று ஐம்பது வருடங்களாகத் தொடர்ந்து பாப்புலராக இருப்பவையும் உண்டு!" என்கிறார் சியாமளா எஜ்ஜி. 'தளபதி' போன்ற சினிமாக்களுக்குப் புடைவை சப்ளை செய்த அனுபவமும் இவருக்கு உண்டு.

"வேலைக்குப் போகிற இன்றைய பெண்கள் விரும்புவது காட்டன் மாதிரி, அதிகம் கசங்காத-செயற்கை இழை கலந்த புடைவைகளே. மற்றபடி அன்றாட உபயோகங்களுக்கான புடைவைகளில் டிசைன்கள் என்பதெல்லாம் அவர்களுக்கு இரண்டாம்பட்சம்தான். அவ்வப்போது கரை அகலத்தைக் குறைப்பது அல்லது அதிகப்படுத்துவது மற்றும் தலைப்பை 'ரிச்' ஆக நெய்வது... இது போன்ற மாற்றங்களே இன்றைய பெண்களுக்குப் போதுமானதாக இருக்கின்றன!" என்கிறார் சியாமளா எஜ்ஜி.

இவரைப் போலவே பழைமையை ஆதரிப்பவர்தான் சபீதா ராதாகிருஷ்ணா. இன்று தெருவுக்குத்தெரு முளைத்திருக்கும் 'பொடீக்'கை இருபது ஆண்டுகளுக்கு முன்பே சென்னைக்கு அறிமுகம் செய்தவர் இவர். மபத்லாலின் 'நியூ ஷராக்' மில் துணிகளுக்கு டிசைன் செய்து கொண்டிருந்த



• கோபால்




• ஷியாமளா



• பிரேமா ராமன்

• பிரேமா ராமன்



இவர், அங்கு மாடர்ன் மற்றும் abstract டிசைன்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுவது பிடிக்காமல் வேலையை விட்டு விட்டாராம்.

"பழைமையின் அழகே அழகுதான்!" என்று ஒருவிதக் கனவோடு பேசும் சபீதாவின் இப்போதைய சாதனை பாலுச்சேரி, செட்டி நாடு புடைவை டிசைன்களுக்குப் புத்துயிர் கொடுத்தது.

"பாலுச்சேரி என்பது மே. வங்கத்திலுள்ள ஓர் இடம். இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்ற புராணக் காட்சிகளை அப்படியே புடைவைத் தலைப்பாக நெய்வதுதான் இந்த ஊரின் ஸ்பெஷாலிடி. 4,000, 5,000 ரூபாய் விலைகளில் பட்டில் மட்டும் தயாராகும் இந்த டிசைன்களைச் சாதாரண மக்களும் வாங்குகிற வகையில் நூல் புடைவைகளில் கொண்டு வந்திருக்கிறேன். அதே போல் 20–40 கவுண்ட்களில் தயாராகும் செட்டிநாட்டுப் புடைவைகளையும் இலேசாக்கிப் புதிய நிறங்களையும் டிசைன்களையும் அதில் அறிமுகப்படுத்தியிருக்கிறேன்! 'முப்பாகம்' போன்ற சில டிசைன்கள் நல்ல உயரமானவர்களுக்கு மட்டுமே எடுப்பாக இருக்கும். அதன் சில அளவுகளை மாற்றி எல்லாருக்குமே எடுப்பாக இருக்கும்படி செய்திருக்கிறேன்!" என்று கூறும் சபீதா, ருக்மிணிதேவி அருண்டேல் உபயோகப்படுத்திய புடைவைகளைப் பார்த்துப் புதிதாக நெய்து கண்காட்சி ஒன்றையும் நடத்தியிருக்கிறார்!

"பெரும்பாலான பட்டுப் புடைவை டிசைன்களின் பிறப்பிடம் காஞ்சிபுரத்திலிருக்கும் 'வீவர்ஸ் சர்வீஸ் சென்டர்'தான்!" என்கிறார், வரதராம்ஸ் சில்க்ஸின் உரிமையாளர் பிரேமா ராமன்.

"நெசவாளர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்டி அங்கிருந்து டிசைன்களைப் பெற்றுக் கொண்டு வருவார்கள். அதைப் பார்க்கிற நாங்கள் சிறிய மாற்றங்களைக் கூறினால் அதற்கேற்ப டிசைன்களைச் செய்வார்கள். அது எங்களுக்கும் திருப்தியானபின் புடைவைகளில் அந்த டிசைனைக் கொண்டு வந்து விடுவார்கள். அவ்வளவுதான்!" என்கிறார் பிரேமா ராமன்.

அப்படியானால் புடைவை டிசைன்கள் என்பது ரொம்பவும் சுலபமான விஷயம் தானா? "அப்படி சொல்லிவிட முடியாது. அதற்காக டிராயிங் தெரிந்திருக்க வேண்டும் என்கிற அவசியமுமில்லை. கற்பனைத் திறன் இருந்தாலே போதும்! நாம் சொல்கிற டிசைன்களை நெசவாளர்களோ அல்லது டிசைன்களை பிளாக் செய்பவர்களோ புரிந்து கொண்டு செய்து விடுவார்கள்!" என்கிறார், உஷா ஸ்ரீதர்.

இந்த புடைவை டிசைன்களில் 'காபி ரைட்' சமாசாரமெல்லாம் கிடையாதா? "அதெல்லாம் ஒன்றும் கிடையாது. திருமணங்கள், விருந்துகள் போன்றவற்றுக்குச் செல்லும்போது நாங்கள் பெண்கள் கட்டியிருக்கும் சேலைகளின் டிசைன்களைக் கவனிக்கத் தவற மாட்டோம். அதிலிருந்தே பல புதிய டிசைன்களை உருவாக்கி விடுவோம்!" என்கிறார் மயிலாப்பூர் நல்லி சில்க் எம்போரியத்தின் அதிபர் கோபால்.

ஆக, பெண்களை வர்ணிப்பதற்கு மட்டும்தான் கற்பனை வளம் தேவை என்பதில்லை; அவர்களுக்கான புடைவை உருவாக்குவதற்கும் கற்பனைவளம் ரொம்பவே தேவைப்படுகிறது பாருங்கள்!

• "விளக்கிச் சொன்னாலே செய்து விடுவார்கள்" : உஷா ஸ்ரீதர்




— நிர்மலா சக்கரவர்த்தி

படங்கள்: காமெரா திருஞானம்

காதல் தூதர்கள்

* லக்ஷ்மி ராஜன்





* கண்ணன்



* வெங்கடேசலு



● காதலை நேரடியாக வெளிப்படுத்துவதை விட தூது அனுப்புவது சுலபம்.

● தூது வெற்றி பெற்று விட்டால் பிறகு நேரடி அப்ரோச் தடையின்றி நடக்கும்.

● ஆனால் காதல் தூதர்கள் படும்பாடு!

கண்ணன் : வசதியான இடத்துப் பெண். காதலன் சாதாரணப்பட்டவன். 'சத்தியமாகக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம்'னு அவங்க உறுதி அளிச்ச பிறகுதான் 'தூது' வேலையை மேற்கொண்டேன். விஷயம் பெண்ணின் அப்பாவுக்குத் தெரிஞ்சு போய் என்னை ஆள் வைச்சு உதைக்க ஏற்பாடு செய்தார். என் அதிர்ஷ்டம், அவர் அனுப்பிய ஆட்கள் என்னிடமே வந்து, 'கண்ணன்கிறவர் வீடு எங்கே?' என்று விசாரித்தாங்க! 'கண்ணன் வெளியூர் போயிருக்கார்'ன்னு நானே சொல்லி அவங்களை அனுப்பிட்டேன். சீக்கிரமே ரிஜிஸ்டர் ஆபீசில் கல்யாணம் நடத்தி வைச்சேன். அதுக்குப் பிறகு மாமனாரும் மாப்பிள்ளையும் சமாதானமாயிட்டாங்க. ஆனா தூது போன நான் தான் இன்னமும் பெண் வீட்டுக்கு எதிரியா தெரியறேன்.

வெங்கடேசலு : அந்தப் பெண் என் நண்பனை விட வயதில் பெரியவள். (இரண்டு வருடம்) முதலில் நான் தூது போன போது இதைக் காரணம் காட்டி நண்பனின் காதலை நிராகரித்தாள். அப்புறம் அவளே முன் வந்து காதலிக்க ஆரம்பித்து விட்டாள்! நண்பனின் வற்புறுத்தலை மீற முடியாமல் பலமுறை அவர்களிடையே பாலமாக இருக்க நேர்ந்தது. கடைசியில்.... காதலிக்கு வேறு இடத்தில் கல்யாணம் நிச்சயம் செய்தார்கள், அவள் வீட்டில். என் நண்பன் படிப்பைக் கூட முடித்திருக்கவில்லை. அதனால் துணிந்து கல்யாணத்தை நிறுத்த அவனால் முடியவில்லை. கடைசியில் தற்கொலை செய்து கொண்டான். இந்த நிலைக்கு நானும் ஒரு காரணம் என்கிறபோது என் மேலேயே எனக்கு வெறுப்பு....

லக்ஷ்மி ராஜன் : யாருமே சந்தேகிக்கவில்லை - ஒரு பெண் துணிஞ்சு காதலர்களுக்கிடையே தூது போவாள் என்று. அதுவே எனக்கு வசதியாய் (அந்த 'காதல்' ஜோடிக்கும்தான்) இருந்தது. ஆனால்... திடீரென்று பையனின் குடும்பம் வடநாட்டுக்கு மாற்றலாகிக் கிளம்பியது. படபடப்புடன் என் தோழியிடம் விஷயத்தைச் சொன்ன போது, அவள் கொஞ்சமாவது வருத்தப்படணுமே...! 'அதுக்காக உயிரையா விட முடியும்! இனிமேல் மறந்துட வேண்டியதுதான்!' என்று சொல்லிவிட்டாள். எனக்குச் 'சே' என்று ஆகிப் போனது. பொய்க் காதலுக்கா நான் மாய்ந்து மாய்ந்து தூது போனேன்!

— மாலதி சந்திரசேகரன்



சந்தை

● வேதாளம் சொன்ன வினோதக் கதைகள்/எம்.ஏ. பழனியப்பன்/நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-B சிட்கோ எஸ்டேட், சென்னை - 98, ரூ. 15/-

திருசிரபுரத்து வேதாளம், உஜ்ஜயனி விக்கிரமாதித்தனுக்குச் சொன்ன, காலத்தால் அழியாத கதைப் புதிர்கள்.

● கண்ணதாசன் கவிதைகளில் கற்பனை/க.ராதா/வானதி பதிப்பகம், சென்னை - 17, ரூ. 18/-

பாமரக் கவிஞரைப் பற்றிய பண்டிதத் தனமான நூல்.

● எயிட்ஸ் நோயும் பாதுகாப்பு முறைகளும்/கே. சந்தான கிருஷ்ணன்/மணிமேகலை பிரசுரம், சென்னை - 17, ரூ. 15.50.

பயனுள்ள நூல். படித்தால் மட்டும் போதுமா?

● நல்ல தமிழ் அறிவோம்/நி.முத்து கண்ணப்பன்/கங்கை புத்தக நிலையம், சென்னை - 17, ரூ. 25/-

பிழையில்லாத தமிழ் பேச, எழுதப் பழக விரும்பினால் வெகு உபயோகமான நூல்.

● புதிய பிரவேசங்கள்/எம்.ஏ. சுசீலா/தழல் வெளியீடு, எச்-879, எல்லீஸ் நகர், மதுரை - 10, ரூ. 10/-

புதுமைப் பெண்கள் உலா வரும் சிறுகதைகள். எழுச்சி மிக்க சிந்தனையின் வெளிப்பாடு.

● பார்த்தா பறக்கிறது வவ்வால்?/ரேவதி/பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 14, ரூ. 8.90.

கதை வடிவில் சொல்லப்பட்டிருக்கும் அறிவியல் விந்தைச் செய்திகள்.

● காட்டு நிலா/வித்தகன்/திருமகள் நிலையம், சென்னை - 17, ரூ. 15/-

நீ உட்கார்ந்து செல்லும்
என் வீட்டு நாற்காலியை
தூசு துடைத்தாலும்
தூய்மை கெடுமென்று
ஆசையாய் பார்த்திருக்கும் அனுபவம் சொல்லவா....

— வீரியம் மிக்க புதுக்கவிதைகள்.

● சிரிப்பு வாங்கலையோ சிரிப்பு/ந. கைலாசம்/ஆதிலட்சுமி புத்தக சாலை, புதுவை - 10, ரூ. 10/-

சிரிக்கத் தூண்டும் சில ஜோக்குகளை(யும்) கொண்ட சிறு நூல்.

● கீதா மாதுர்யம்/சுவாமி ராம் சுகதாஸ்/கோபால் சேவா டிரஸ்ட், 82, கிருஷ்ணா டாக்கீஸ் ரோடு, ஈரோடு, ரூ. 8/-

வினா விடை வடிவிலமைந்த கீதை அறிமுக நூல். மிக அழகிய மொழி பெயர்ப்பு.

● தஞ்சைப் பெரிய கோவில்/புத்தகப் பித்தன்/இமயப் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகை - 1, ரூ. 10/-

படங்களுடன் பரவசப்படச் செய்யும் வகையில் வந்திருக்க வேண்டிய, பெரிய கோவில் பற்றிய ஆய்வுச் செய்திகளுடனான நூல், வெறும் பாட நூல் போல் வந்திருக்கிறது. விவரம் நூலில், விளக்கம் நேரில்?

● காந்தி தேசம்/திருவாரூர் பாபு/கங்கை புத்தக நிலையம், சென்னை - 17, ரூ. 14/-

சமூக அக்கறையுடன் வாழ்வின் பல்வேறு தளங்களை மாறுபட்ட கோணத்தில் காட்டும் நவீன சிறுகதைகள்.

கார்ட்டூன் : நன்றி : கார்டியன் வீக்லி



யாசின் கானுடைய பணி 'நீராடி' என் பது. அதாவது வயல்களுக்குத் தண்ணீர் திறந்து விடும் வேலை. 500 ஏக்கர் நிலங் களுக்கு இவர்தான் தண்ணீர் திறந்து விட வேண்டும். அரசுப் பணியில் 1955 ஆம் ஆண்டு சேர்ந்தார். அப்போது மாதச் சம் பளம் இவருக்கு ரூ. 6/- மட்டும்தான்!1957ல் ரூ. 15/- ஆக உயர்த்தப்பட்டது. அதன் பிறகு சம்பள உயர்வே இல்லை! தொடர்ந்து கர்நாடக அரசுக்குப் பல மனுக்கள் அனுப்பியும் பலன் இன்றி கடந்த 37 ஆண்டுகளாக மாதச் சம்பளம் ரூ. 15/- மட்டுமே பெற்று வருகிறார்.


தகவல் : வி.எஸ். ராஜகோபால்
ஆதாரம் : டெக்கான் ஹெரால்டு
(4.11.94)

''சிஷ்யா, காற்றிலிருந்து நாம் வரவழைத்துத் தரும் விபூதி பிரசா தத்தை வாங்க எப்பொழுதும் திரளும் கூட்டம் என்ன ஆயிற்று?''

''அடுத்த ஊரில் சாமியார் காப்பித் தூளையே அப்படி வரவழைத்துத் தருகிறா ராம். கூட்டம் அங்கே அலை மோதுகிறது, குருவே!''

—அ.ஷண்முகசுந்தரம்





''நடிகை நளினிஸ்ரீயோட கணவர் ஒரு அரசியல் தலைவர் மாதிரியே பேசறார்.''


''எப்படி?''

''மனைவி அவரை டைவர்ஸ் பண்ணினா லும், அவங்கதான் தன் னோட மனைவின்னு அறிக்கை விட்டிருக் காரே!''

— சீர்காழி வி.ரேவதி

மகாராஷ்டிராவில் ஒரு விவசாயிகள் சங்கத் தின் தலைவர் ஷரத்ஜோஷி. இரண்டு மாதங்களுக்கு முன்பு, நாக்பூரில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிய போது சுமார் ஒன்றரை லட்சம் பேர் திரண்டு வந்து இவர் பேச்சை ரசித்தனர். கூட் டம் கண்டு மயங்கிய ஜோஷி, 'ஸ்வதந்த்ர பாரத் பார்ட்டி' என்று ஓர் அரசியல் கட்சியைத் துவங்கி, நடந்து முடிந்த தேர்தலிலும் போட்டியிட்டார். அந்தச் சமயத்தில், அதே நாக்பூரில் முன்பு பேசிய அதே இடத்தில் மீண்டும் பொதுக் கூட்டம். ஜோஷியைக் கேட்க வந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? வெறும் ஐம்பது பேர்! பேசிக் கொண்டிருக்கும்போது அந்த மைதா னத்தில் ஒரு சிறுமி மொபட் விடக் கற்றுக் கொண்டிருந்தது இன்னும் கொடுமை!

— டி.வி.என். பாலா





அம்மா அழுதாள்

தங்க. சிவராசன்

"பிரதீப்பை பிரின்ஸ்பால் கூட்டிட்டு வரச் சொன்னாரு... சாரு!" பியூன் தணிகாசலம் சொன்னதும், புரொபசரிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினேன்.

பிரின்ஸ்பால் அறையை நெருங்கியதும், "மே.. ஐ... கம் இன் சார்?" பணிவுடன் நுழைந்தேன். முதல்வருக்கு எதிரே பக்கத்து வீட்டு பாலு!

"சாரி மை பாய்! உனக்கு ஒரு கெட்ட செய்தி! உன்னுடைய தந்தை.... தவறிட்டார்!" முதல்வர் என்னைப் பரிதாபத்துடன் நோக்கினார்.

"சார்!" – அவநம்பிக்கையுடன் அவரைப் பார்த்தேன்.

''பாலு...! சார் சொல்றது நிஜமா?"

பாலு கனமாய்த் தலையாட்டினான்.

"எப்படி? காலைலே நல்லா இருந்தாரே?"

"மாசிவ் அட்டாக்காம்!" குறுக்கிட்ட முதல்வர் –

"பாலு! டேக் ஹிம்... அவன் தள்ளாடறான்... பிடிங்க!" அவரும் எழுந்தார். பாலு என்னைத் தாங்கிக் கொண்டான்.

ஆதரவாய்த் தட்டிக் கொடுத்த முதல்வர், ''கடவுள்தான் இந்த பேரிழப்பைத் தாங்கற வலிமையை ஒனக்குக் கொடுக்கணும்!"

"நான் வர்றேன் சார்!" தடுமாறினேன். பாலுவின் துணையோடு வெளியே வந்தேன்.

"எப்படி... பாலு?" திரும்ப அவனை உலுக்கினேன்.

"வெளியே கிளம்பியிருக்காரு... ஒங்கம்மா ஏதோ சொல்லியிருக்காங்க! கோபத்தோடு திரும்பினாராம்! நெஞ்சைப் பிடிச்சிட்டு விழுந்திட்டாராராம்!" பாலு தயங்கித் தயங்கிச் சொன்னான்.

உடம்பெங்கும் ஒரு நெருப்பு ஓடியது.

'கடைசியில் அவரை வறுத்துக் கொட்டி விட்டாயா?' அம்மா மீது கோபமாய் வந்தது.

என்ன கம்பீரமானவர் அப்பா! எத்தனை நேர்மையானவர்! சொற்களில், செயலில் அப்பழுக்கில்லா நாகரிகம்! ஊரே அவரை மதித்தது. ஆனால் அம்மாவுக்கு மட்டும் "ஓதவாக்கரை மனுஷன்!"

நடுவில் வந்த வெறுப்பில்லை இது! என்றைக்கு அவரைக் கைப்பிடித்தாளோ.. அன்றைக்கு வந்த கசப்பு கருக்குலையாது இருந்தது.

முதல் இரண்டு பெண்களை டாக்டருக்கும், என்ஜினியருக்கும் கட்டிக் கொடுத்ததால் கை வறண்டு விட்டதாம் தாத்தாவுக்கு. சாதாரண குமாஸ்தாவான அப்பாவுக்குக் கட்டிக் கொடுத்து விட்டார்.

அந்தக் கோபம் அப்பாவின் பண்பால் மாறவில்லை! அம்மாவின் உதாசினங்களை முறுவலால் துடைத்துக் கொண்டது அவளுக்குத் தைரியம் கொடுத்தது. நாளுக்கு நாள் உக்கிரம் ஏறத் தொடங்கியது.



நிழலின் அருமை வெயிலில் தெரிய மரம் இல்லை!

— பொன். குமார்

எனக்கு நினைவு தெரிந்து அம்மா, அப்பாவிடம் அன்பாய்ப் பேசினதில்லை. அவருடைய பொழுது இடிமுழக்கத்தோடு தான் விடியும்..! பாத்திரங்களின் உருளலோடு தொடரும்!

பிள்ளைகள் நாங்கள் இருப்பது கூட அவளுக்குக் கவலையில்லை. கேவலமான சொற்களால் அவரைத் திட்டுவாள்.

விழாக் காலங்கள் கூட இதற்கு விதிவிலக்கல்ல!

"ம்! என் அக்காளுங்க... ரெண்டாயிரம் மூவாயிரம்னு பட்டிலே மினுக்குவாளுங்க! இந்த பிழைக்கத் தெரியாத மனுஷரைக் கட்டிட்டதாலே பூனம் புடைவையே பெரிசுன்னு பூரிக்கப் போவணும்!"

"ராஜம்! இந்த புடைவை ஒனக்கு ஜோரா இருக்கும்!"ன்னு அப்பா பாராட்டினதுக்குக் கிடைக்கும் பரிசுதான் இது!

அப்பாவின் முகம் வாடிப் போகும்! வெளியே கிளம்பிப் போய் விடுவார்.

"ஏம்மா... பாவம்... அப்பாவை இப்படி அவமானப்படுத்தறே?" நாங்கள் கத்துவோம்.

"அப்படியும்... அந்த மனுஷனுக்குப் புத்தி வரல்லியே! கிடைக்கிற சம்பளமே போதும்னு ஓய்ஞ்சிட்டாரே! நாலாபக்கம் ஓடி வேலை செஞ்சாத்தானே நாமும் மத்தவங்க மாதிரி முன்னேறலாம்!"

"இப்ப... என்ன குறைச்சலாம்?"

"செருப்பாலடி... நாயே! ஒங்க பெரியம்மா வீட்டுக்குப் போனப்ப, நாம்ப எப்ப காரு வாங்குவோம்னு கேட்டியே... அதுக்குத்தான் சொல்றேன்!"

"அவங்கள்ளாம்... அநியாயமா சம்பாதிக்கறாங்க!"

"சம்பாதிக்கணும்னா... அநியாயம் நியாயம் பாக்கக் கூடாது!"

"எங்கப்பா... அப்படில்லாம் செய்ய மாட்டாரு!" நாங்கள் கோரசாய்க் கத்துவோம். அம்மா துரத்திக் கொண்டு ஓடி வருவாள். நாங்கள் தப்பித்து விடுவோம்!

ஆனால் ஒருநாளும் அப்பா எங்களிடம் அம்மா பற்றிக் குறை கூற மாட்டார்.

"அம்மா... சுத்த மோசம்பா!" நான் சொன்னாலும் "சீச்சீ! அப்படில்லாம் சொல்லக் கூடாது! அவ வளப்பமா வளர்ந்தவ! அதனாலேதான் அப்படி!" என்பார்.

அவர்தான் இப்போது என்னைத் தவிக்க விட்டு விட்டுப் போய் விட்டார். தாள முடியாத சோகம் என்னைத் தின்றது.

அப்பாவின் முகத்தில் அமைதி தெரிந்தாலும், ஓரத்தில் உபாதை வடு தெரிந்தது. அவர் மேல் விழுந்து அழுத போது -

'பிரதீப்! எதுக்குடா அழுறே? அவமானம், உதாசீனம் எதுவும் எனக்கு இனிமே கிடையாது! இப்பதான் நிம்மதியா தூங்கறேன்... இதுக்கா அழுறே?' அப்பா சொன்னது போல உணர்கிறேன்!

"அடி... ராஜம்! சாதாரணமாகவே சம்பளம் பத்தலேன்னு... அல்லாடுவே! இனி என்னடி பண்ணப் போறே?" யாரோ அம்மாவைக் கிளறினார்கள்.

"இப்ப சொல்லி என்ன செய்யறது? எப்ப இந்த மனுஷனைக் கட்டினேனோ, அப்ப இருந்தே அரை வயிறுதானே?"

"கவலைப்படாதே! அவரு போய்ட்டாலும், ஒன் பெரிய பையனுக்கு... அவரோட கம்பெனில வேலை போட்டுக் கொடுப்பாங்க!" யாரோ சொன்னது என்னை விழிக்க வைத்தது.

"நோ!" நான் கத்தினேன். "நான் என் படிப்பைப் பாதியிலே நிறுத்த முடியாது!"

"என்னடா... இப்படிச் சொல்றே?" அம்மா வெறித்தாள்.

"இன்னும்... ஒரு வருஷம் இருக்கு என் படிப்பு முடிய! இப்ப... பாதியிலே... வேலையிலே... சேர்ந்தா...." நான் முடிக்கவில்லை.

'அப்பா உன்கிட்ட பட்ட மாதிரி என் மனைவிகிட்டே என்னால உதாசீனப்பட முடியாது!' எனச் சொல்ல நினைத்தேன். சொல்லவில்லை.

"அப்ப... என்ன செய்றது?" அம்மா என்னையே பார்த்தாள்.

"நீ வேலைக்குப் போ!"

"நானா?"

"ஆமாம்! நீதான் வேலைக்குப் போவணும்! அப்பதான்... ஒனக்குப் பணம் சம்பாதிக்கறது எவ்வளவு கஷ்டம்னு தெரியும். அதும் நேர்மையான வழியில! அப்பா... எவ்வளவு கொண்டு வந்து போட்டாலும், மறுநாளே அவரைப் பணத்துக்காக நச்சரிப்பாயே! வாங்கறதை வைச்சி செலவு செய்ய எப்பதான் கத்துக்கப் போறியோன்னு புலம்புவாரே அப்பா! அதை நீ உணரணும்னுதான்... நான் படிப்பைத் தொடர்றேன்!"

மனத்துக்குள் கோபமும், எதையோ சாதித்து விட்ட பெருமிதமும் பொங்கியது. அப்பாவை நிம்மதியோடு பார்த்தேன்!

மேக்சிமா-குரூப் நிறுவனங்கள்

உங்கள் முதலீட்டிற்கு

25%

MAXIMA

மேக்சிமா பெனிபிட் பண்ட் லிமிடெட்
மேக்சிமா கிரெடிட் லிங்க்ஸ் (பி) லிமிடெட்
மேக்சிமா சிட்ஸ் மெட்ராஸ் (பி) லிமிடெட்
மேக்சிமா இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி

ஒவ்வொரு மாத வட்டிக்கான காசோலை மொத்தமாக முதலீடு செய்யும் பொழுதே வழங்கப்படும்.

வட்டி+
1% ஊக்கத்தொகை
வழங்குகிறது

உங்கள் வருங்காலக் கனவுகளை நனவாக்கும் வளமான சேமிப்புத் திட்டங்கள்.

பிக்சட் டெபாசிட்	ஒவ்வொரு மாதம், காலாண்டு, அரையாண்டுகளில் வட்டி வழங்கப்படும்.	குறைந்தபட்ச முதலீடு ரூ.5,000/-
குமுலேட்டிவ் டெபாசிட்	45.60% P.A அதிக பட்ச வட்டியாக பெறுவீர்	ரூ.5,000/-
கோல்டன் டெபாசிட்	முதலீடு 3 வருடங்களில் இருமடங்காகும்	ரூ. 7,500/-

மேக்சிமா - உங்கள் முதலீட்டிற்கு முழுப் பாதுகாப்பு அளிக்கக் கூடியது.

காலம்	வட்டி
12 மாதங்கள்	26.80 %
24 மாதங்கள்	30.40 %
36 மாதங்கள்	32.66 %
48 மாதங்கள்	39.67 %
60 மாதங்கள்	45.60 %

மேலும் விவரங்களுக்கு
மேக்சிமா இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி
பதிவு அலுவலகம் : 1, வேதாந்த தேசிகர் தெரு, லஸ் பஜார் அருகில், மயிலாப்பூர், சென்னை - 600 004. தொலைபேசி : 4941849, Fax : 044-4347655. தந்தி : MAXFIN
தலைமை அலுவலகம் : 146, எல்டாம்ஸ் ரோடு, சென்னை - 600 018. தொலைபேசி : 456950 / 458549 / 452559
கார்ப்பரேட் அலுவலகம் : 'ஜெயம் பில்டிங்' AA-147, 3வது அவின்யூ, அண்ணா நகர், சென்னை - 600 040 தொலைபேசி : 6280468

Aparna

கிளை அலுவலகங்கள் : -

K.R. பில்டிங் 124-A. லேட்டிஸ்பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை - 600 020 தொ.பே. 415511

'ராஜ ராஜேஸ்வரி டவர்' 567-568, டாக்டர் நஞ்சப்பா ரோடு, காந்திபுரம், கோயம்புத்தூர்-641 018. தொ.பே. 231938

மேக்சிமா - அதிகபட்ச நம்பிக்கைக்குரியது.

● என். பாலு, திருச்சி.

? வாக்காளர் அட்டை வெறும் சடங்காகி விட்டதே?

! அப்படியிருந்தாலும் பரவாயில்லையே! ஆனால் வாக்காளர் அட்டை இருந்தும் வாக்காளர் பட்டியலில் பெயரில்லாததால் வோட்டுப் போட முடியாது போனவர்கள் ஆயிரக்கணக்கில். ஆக, வாக்காளருக்கு இருந்த ஒரு தலைவலி இன்று இரட்டைத் தலைவலியானதுதான் மிச்சம்!

● எஸ். பிரசன்னகுமார், காட்டுக்காஞர்.

? எண்ணூர் மின்நிலைய திறப்பு விழாவுக்கு, மக்களின் போக்கு வரத்து பாதிப்படையக் கூடாது என்று ஹெலிகாப்டரில் சென்ற முதல்வரின் பெருந்தன்மை பற்றி...?

! காரணம் அதுவல்ல; ஒவ்வொரு தினமும் இங்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டுத்தான் வருகிறது - 'ஜெ' காரணமாக. 25 கிலோ மீட்டர் கடக்க ஹெலிகாப்டர் பயன்படுத்திய முதல் முதல்வர் என்று கின்னஸ்ஸில் இடம்பெறுவதுதான் நோக்கமாயிருந்திருக்க வேண்டும்!

● எஸ்.இலங்கேசுவரன், வேலூர்.

! கவர்னர் உரையில் சூடு இருக்குமா?

! 'ஜெ' மீது வழக்குத் தொடர அனுமதி வழங்குவதா வேண்டாமா என்று தீர்மானிக்க மே 31ம் வரை அவர் அவகாசம் கேட்டிருப்பதைப் பார்த்தால் யாரோ அடக்கி வாசிக்குமாறு கேட்டுக் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. ஆக, சட்டமன்ற கவர்னர் உரையும் சாதுவாகத்தான் இருக்கும் எனக் கருதலாம்.

● வே. முருகேசன், சென்னை - 4.

? தமிழக முதல்வரின் 47வது பிறந்த நாளுக்கு 470 பேர் தீ மிதிக்கிறார்களாமே?

! கணக்கு உதைக்கிறதே! 477 என்றால்தானே கூட்டினால் ஒன்பது வரும்! பகுத்தறிவுக்குப் பொருந்த வேண்டாமா?

● ஜெ. கண்ணன், சென்னை - 101.

? ஊழல் செய்யும் எம்.எல்.ஏக்களை மக்கள் திருப்பி அழைத்துக் கொள்ளும் முறையைக் கொண்டு வந்தால் என்ன?

! அப்படியெல்லாம் மக்களுக்குச் சலுகைகள் வழங்கிட நமது அரசியல்வாதிகள் முட்டாள்களா என்ன!

● புலியரை கணேசன், சென்னை - 30.

? நியூசிலாந்து கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் தோல்வி குறித்து?

! இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறாவிட்டாலும் ஏதோ கடைசி ஆட்டத்திலாவது ஆஸ்திரேலியாவை வென்று, மானம் முற்றிலும் கப்பலேறாமல் காப்பாற்றினார்களே, அதற்காக தாங்க்ஸ்!

எண்ணூருக்கு ஹெலிகாப்டரி

நீங்கள் கேட்டவை - தராசு



• கின்னஸ் சாதனை!



? சூடு இருக்குமா?



• கோப்புகள் நிறுத்தம்!



• புத்த மதத்தில்...

● வி. ஆர். ரவிச்சந்திரன், வேப்பங்காடு.

? சஃபையர் தியேட்டர் கட்சி அலுவலகமாக மாறி விட்டதா?

! தராசு வதந்தி பரப்புவதாகக் குற்றம்சாட்ட மாட்டீர்களென்றால்... கிட்ட வாங்க காதோடு சொல்றேன். அங்கே ஒரு பக்கம் சமாதி ஒன்று இருப்பதாக அறியப்பட்டதால் 'ஜெ'க்கு நல்ல தில்லை என்று வேறு இடம் பார்ப்பதாகப் பேச்சு அடிபடுகிறது!

● ரா. நாச்சிமுத்து, போடிநாயக்கனூர்.

? காங்கிரஸ் - அ.தி.மு.க. கூட்டணி ஏற்படுமென்று கூறியதற்காக அமைச்சர் சின்னசாமிக்குக் கோப்புகள் அனுப்புவதை நிறுத்தி விட்டார்களாமே?

! அனுதாபங்கள் அவருக்குத் தெரிவிப்பது ஒருபுறமிருக்க, அமைச்சரவைக் கூட்டங்கள் கட்சிக் கூட்டங்கள் நடப்பது, கலந்து பேசி, திட்டங்கள் தீட்டுவது, கொள்கைகளை அலசுவது என்பதெல்லாம் ஜெ. ஆட்சியில் இல்லை என்பது தெளிவு. அப்படி ஜனநாயக மரபுகள் பின்பற்றப்பட்டிருந்தால் அமைச்சர் இப்படி உளறி வைத்து வாங்கிக் கட்டிக் கொண்டிருக்க மாட்டார்.

● எஸ். ராமசுப்பிரமணியன், தூத்துக்குடி.

? மதன் பதில்களில் இளமை உள்ளதா?

! A(H)Aமாம்!

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? புத்த மதத்தில் பூலன்தேவி?

! மனம் வருந்தி, இறைவனிடம் மன்னிப்பு வேண்டி, திருந்தி வாழ எம்மதத்திலும் இடமுண்டு.

● வி. மோகன், நெல்லிக்குப்பம்.

? "சினிமா சமுதாயத்தைக் கெடுத்து இருக்கிறது; வக்கிர எண்ணங் களைத் தூண்டி இருக்கிறது" என்று பாரதிராஜா கூறியிருக்கிறாரே?

! மீண்டும் சமுதாயத்தைக் கெடுக்கவும் வக்கிர எண்ணங்களைத் தூண்டவும் லைசென்ஸ் பெற விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய் திருக்கிறார்!

● கற்குவேல், வேடபட்டி.

? 'தேர்தலைச் சந்திக்க தி.மு.க. விடம் பணம் இல்லை' என்று கலைஞர் கூறுகிறாரே?

! சேஷன் கட்டிக்காட்டுகிற தேர்தல் நெறிமுறைகளின்படி நடப்ப தானால் இருக்கிற பணமே போதுமே!

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.

? பண்டரிபாயின் மருத்துவச் செலவைக் கர்நாடக அரசு ஏற்கும் என்று தேவேகௌடா அறிவித்துள்ளாரே?

! பெரும்பாலான எம்.ஜி.ஆர். படங்களில் அவருடைய அம்மா வாக நடித்துள்ள பண்டரிபாய்க்கு 'ஜெ' அரசு உதவாவிட்டாலும் கர்நாடக அரசாவது உதவுகிறதே, என்று ஆறுதல் அடையவும்!

● க. சேகர், சென்னை - 52.

? முதல்வரை 'விளம்பர வெறி பிடித்து அலைகிறார்' என்று குமரி அனந்தன் கூறியிருப்பது?

! அதைவிடக் கடுமையான சொற்களைப் பயன்படுத்த அவரது

சென்ற முதல்வரின் பெருந்தன்மை பற்றி?

பண்பாடு இடம் தராததால் அப்படி பேசியிருக்கிறார்.

● சோ. இராமு, செம்பட்டி.

? நன்கு பழுத்த அரசியல்வாதி தற்போது யார்?

! ஊழலில் எல்லோருமே பழுத்துப் போனவர்கள்தாம்.

● நெல்லை. வி. சிவா, அரசடி.

? இம்ரான்கான் பாகிஸ்தான் பிரதமராகும் வாய்ப்பு உண்டா?

! அவர் பிரதமராகிறாரோ இல்லையோ, பாக். மக்களுக்கு இன்றைய அரசியல்வாதிகள் மீது நம்பிக்கை குறைந்து கொண்டிருக்கிறது.

● வளர்மதி ஆசைதம்பி, தஞ்சாவூர்.

? ஜெயலலிதா பிரதமரானால் முதல்வர் யார்?

! ஏன், சென்னாரெட்டியாகக் கூட இருக்கலாம்!

● என். பாலகிருஷ்ணன், வளவனூர்.

? "சிலர் ஆசைக்கும் தேவைக்கும் வாழ்வுக்கும் வசதிக்கும் ஊரார் கால் பிடிப்பார்; ஒரு மானமில்லை, அதில் ஈனமில்லை, அவர் எப்போதும் வால் பிடிப்பார்" - இந்தப் பாடல் வரிகளைக் கேட்கும் போது தமிழக அமைச்சர்கள் ஞாபகத்துக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லையே, ஏன்?


! 'எம்.ஜி.ஆரிடம் எவ்வளவு பக்தியிருந்தால் அவர் பிரபலப்படுத்திய இந்தப் பாடலை நினைவு வைத்திருந்து இந்த மந்திரிகள் வரிக்கு வரி அதன்படி நடந்து காட்டுவார்கள்!' என்ற வியப்பு கலந்த மரியாதை காரணமாயிருக்கலாம்.


● பி. காந்திமதி, பாஸ்டியன்நகர்.

? எதற்கெடுத்தாலும் தமிழக அரசைக் குறைகூறும் தராசின் செயல் சரிதானா?


! தப்புத்தான், மேடம். ஆனால் தராசு அடிக்கடி குறைகூறும்படி யும் பாராட்ட முடியாதபடியும் இன்றைய தமிழக அரசு நடந்து கொள்வது சரிதானா, மேடம்!











❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
ஆர். வாணுமாமலைப்பெருமாள்,
பெத்தரெங்கபுரம்,
தனக்கர்குளம் (அஞ்சல்) - 627 116.

● ஆர். வாணுமாமலைப்பெருமாள், பெத்தரெங்கபுரம். ❑

? மாநகராட்சி தேர்தல் எப்போது தான் நடக்கும் என்கிறீர்கள்?

! உள்ளாட்சி தேர்தல்கள் நடத்த வில்லை என்பதற்காக கிராமப்புற அபிவிருத்தித் திட்டங்களுக்கான உதவித் தொகையைத் தமிழகத்துக் குத் தராமல் மத்திய அமைச்சர் பிடித்து வைத்துக் கொண்ட பிற கும் பிரதமர் தலையிட்டு பணத் தைத் தந்து விடுமாறு கூறினால் குளிர் விட்டுப் போகாதா? தமி ழக அரசுக்கு இவ்விஷயத்தில் பொறுப்புணர்ச்சி ஏற்பட்டால் பெரும் அதிசயம்தான்!

மைக்ரோவேவ் மருத்துவம்

சமையலுக்கு மைக்ரோவேவ் அடுப்புகள் வந்துவிட்ட நவீன காலம் இது.


மருத்துவத்துறையிலும் மைக்ரோவேவின் பயனை ஓரளவுக்கு உபயோகிக்க ஆராய்ச்சியாளர்கள் உதவியிருக்கிறார்கள்.

டாக்டர் சின்னசாமி கூறுகிறார் :

"சாதாரணமாக 30 வயதுக்கு மேல் 45 வயதுக்குள் ஆண்களுக்கு பிராஸ்டேட் சுரப்பிகள் வீங்குவது உண்டு. சிறுநீர் கழிக்கும் போது வலி ஏற்படும். அடிக்கடி போக வேண்டும் போல் தோன்றும். சிலருக்கு ஆன்ட்டிபயாடிக்குகள் கொடுப்போம். சிலருக்கு எந்த மருந்து கொடுத்தாலும் கேட்காது. அவர்களுக்கு இந்த மைக்ரோவேவ் முறை உபயோகமாக இருக்கும். பொதுவாக 58 வயதுக்கு மேல் பிராஸ்டேட் கம்ப்ளெயின்ட் வரும். ஆனால் எல்லா ஆண்களுக்குமே வரும் என்பதில்லை."

"இதன் அறிகுறிகள் என்னென்ன, டாக்டர்?"

"சிறுநீர் முழுதும் போன திருப்தி இருக்காது. அடிக்கடி போக வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்படும். சிறுநீர் போவதும் மெலிதாக - சொட்டுச் சொட்டாக - இருக்கும். சிறுநீரில் ரத்தம் கூடப் போகும் சிலருக்கு. அடிக்கடி சிறுநீர்ப் பாதை (யூரினரி) இன்ஃபெக்ஷன் வரும்."


டாக்டர் சின்னசாமி

இந்த மைக்ரோவேவ் முறையில் ஆபரேஷன் கிடையாது. ரத்தச் சேதம் இல்லை. மயக்க மருந்து இல்லை. 45 நிமிடங்களிலேயே சிகிச்சை முடிந்து எழுந்து போய்விடலாம். ஓரிரண்டு நாட்கள் எரிச்சல் இருக்கும். அதற்கும் மருந்து கொடுக்கப்படுகிறது.

பிராஸ்டேட் கிளாண்ட் ரொம்பவும் பெரிதாய் வீங்கியிருந்தால் அதற்கு மைக்ரோவேவ் முறை பயன்படாது. சிறுநீர் பைக்குள்ளேயே என்லார்ஜ்மென்ட் பாதிப்பு இருந்தாலும், பிராஸ்டேட் கான்ஸர் உள்ளவர்களுக்கும் இந்த மைக்ரோவேவ் சிகிச்சை பயன்படாது. இப்படிப்பட்ட சில கேஸ்களுக்கு ஆபரேஷன்தான் செய்ய வேண்டியிருக்கும்.

மைக்ரோவேவ் சிகிச்சை கொடுப்பதற்கு முன்பு சிஸ்டாஸ்கோப்பி, அல்ட்ரா சவுண்ட் ஸ்கான் எல்லாம் செய்வார்கள். சில ரத்தப் பரிசோதனைகள் மூலம் புற்று நோய் இருக்கிறதா இல்லையா என்று பார்க்கிறார்கள்; பிறகே தீர்மானிக்கிறார்கள்.

சென்னையிலுள்ள தமிழ்நாடு யூரோலாஜிகல் மையம், **தெர்மோ ஸ்பெக் 600 டிஎம்.** என்ற இந்தப் புதிய கருவியை, பிராஸ்டேட் சுரப்பி வீக்கத்தைக் குணப்படுத்துவதற்கென இஸ்ரேல் நாட்டிலிருந்து வரவழைத்திருக்கிறது. சிறுநீரக நோய்ச் சிகிச்சை நிபுணரும், மையத்தின் தலைவருமான டாக்டர் சின்னசாமி இதன் பயன்கள் பற்றி விவரித்தார்.

"தெர்மோ ஸ்பெக் 600 டிஎம். மைக்ரோவேவ் ஹைப்பர் தெர்மியா சிஸ்டம் என்று சொல்லுகிறீர்களே? ஹைப்பர் தெர்மியா என்றால் என்ன?"

"ஹைப்பர் தெர்மியா என்றால் சூடு பண்ணுவது. சூடு பட்டவுடன் வெந்து சுருங்கும் தத்துவம்தான் இங்கே கையாளப்படுகிறது. சூடு என்றால் உடம்பு தாங்குகிற சூடுதான். சுமார் 50 டிகிரி சென்டிகிரேட் சூடு. சூடு அதிகமானால் ஆட்டோமாடிக்காகக் கருவி நின்று விடும். ஆபத்தே இல்லை."


சிகிச்சை செலவு 8000 ரூபாய்க்குள்தான் ஆகிறது. பக்க விளைவுகள் பெரிதாக எதுவும் இல்லை.

— எஸ்.- வி. என்.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

22,728 வழிகள்... உங்கள் மகள் மீது வைத்திருக்கும் அன்பை நீங்கள் வெளிப்படுத்த.



ரூ. 22,728 முதலீடு செய்யுங்கள். 15 ஆண்டுகளில் அது ரூ.1 லட்சமாக வளருவதைக் காணுங்கள்.

லக்ஷ்மி கபிட்சா — LVB வழங்கும் புதுமையான டெபாசிட் திட்டம்.

இன்று தளிர் நடை போடுகிறாள் உங்கள் மகள். அவள் தன்னம்பிக்கை நிறைந்த இளம் பெண்ணாக வளர இன்னும் எத்தனையோ ஆண்டுகள் இருக்கின்றன. அவள் மீது நீங்கள் கொண்டிருக்கும் அக்கறையை வெளிப்படுத்த உங்களுக்கு ஒரு எளிய வழி — அவளைப் போன்றவர்களுக்கென்றே அறிமுகப் படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பான டெபாசிட் திட்டத்தில் முதலீடு செய்யுங்கள்.

ஒரே முறை நீங்கள் டெபாசிட் செய்தால் போதும். முதிர்வடையும்போது அது ஒரு பெரும் தொகையாக அவளுக்குக் கிடைக்கும்.

லக்ஷ்மி கபிட்சா — ஒரு ரொக்க சர்ட்டிபிகேட் திட்டம். குறைந்த தொகையை முதலீடு செய்யும் வசதி. 10, 15, 20, 25 ஆண்டுகள் எனத் தேர்ந்தெடுக்க வசதியாக முதிர்வடையும் காலம். தவிர, முதிர்வடையும்போது பெரும் தொகையாகக் கிடைக்கும் ரூ.1,00,000.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் காலத்துக்கேற்ப ஒரு சிறிய தொகையை முதலீடு செய்தால் போதும்.

LVB யின் துணை அருகிலிருக்க, உங்கள் செல்வ மகள் வளருவதைக் கண்டு மகிழுங்கள்.

முக்கிய அம்சங்கள்:

- RBI கட்டளைகளின்படி அளிக்கப்படும் கவர்ச்சியான வட்டி
- முதிர்வடையும் காலத்தைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு: 10, 15, 20, அல்லது 25 ஆண்டுகள்.
- முதிர்வடையும் காலத்துக்கேற்ப முதலீட்டுத் தொகை.
- முதிர்வடைவதற்கு முன்னதாகவே திரும்பப் பெறும் வசதி.
- நியமனம் செய்யும் வசதி.

காலம் (ஆண்டுகள்)	முதலீட்டுத் தொகை ரூ.	முதிர்வடையும் போது மதிப்பு ரூ.
10	37,243	1,00,000
15	22,728	1,00,000
20	13,871	1,00,000
25	8,465	1,00,000

லக்ஷ்மி விலாஸ் வங்கி

தொழில் முறையில் திறமையோடு இயங்கும் வங்கி. வலுவான சக்திபூ ஆதாரம். பெரும் அளவில் டெபாசிட்டுகள். வெளிச் செலாவணி வருமானம். அதிக டிவிடெண்டுகள். பெருகிவரும் கிளைகள். சிறந்த வணிக வங்கிப் பிரிவு.

வாருங்கள். LVB அளிக்கும் ஆதரவையும் சேவையையும் பெற்றுப் பலனடையுங்கள்.

மேலும் விவரங்களுக்கு, உங்கள் அருகாமையில் உள்ள LVB கிளையை அணுகவும்.

ஜி.வி. ராவ்
சேர்மன்



நிர்வாக அலுவலகம், கரூர்.

லக்ஷ்மி விலாஸ் வங்கி லிமிடெட்.

பதிவு & நிர்வாக அலுவலகம்:
சேலம் ரோடு, காத்தப்பாறை,
கரூர்-639 006. தமிழ்நாடு.

LVB — உங்கள் தேவைகளைப் புரிந்து கொள்ளும் வங்கி.

ADWAVE/LVB/4635 TAM A